பைந்தமிழ்ச் சோலை

[நான்காம் படிவம்—பொதுப் பகுதி]

தொகுப்பாசிரியர்கள் :

புலவர் சா. மருதவாணன்
(தமிழாசிரியர், தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளி, கோவை)

புலவர் சி. இளங்கோவன்
(தலைமைத் தமிழாசிரியர்,
காணிக்கையன்னைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோவை)

LOTUS PUBLISHERS
MADRAS.

...ஸ் பப்ளிஷர்ஸ்
... செட்டித் தெரு, சென்னை-1.

பைந்தமிழ்ச் சோலை

நான்காம் படிவம்—பொதுப்பகுதி

[Printed from 16 lbs. Demi Indian white printing]

தொகுப்பாசிரியர்கள் :

புலவர் சா. மருதவாணன்
தமிழாசிரியர்,
(தூய மைக்கேல் உயர்நிலைப்பள்ளி, கோவை)

புலவர் சி. இளங்கோவன்
(தலைமைத் தமிழாசிரியர், கன்னிக்கையன்னைப்
பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கோவை.)

LOTUS PUBLISHERS
MADRAS.

லோட்டஸ் பப்ளிஷர்ஸ்

2, கொண்டி செட்டித் தெரு,

சென்னை-1.

 [விலை ரூ. 1—4—0

முதற் பதிப்பு அக்டோபர் 1956

டி. வீ. சி. பிரஸ், சென்னை-1.

முகவுரை

இச்செய்யுள்—உரைநடைகளின் தொகுதி நான்காம் படிவம் பொதுப்பகுதிக் குரியது. அண்மையில் கல்வித் துறையினர் வெளியிட்ட பாட இயலை அறிந்து எழுதப்பட்டது.

பொதுப் பகுதியில் 400 வரிகளைக் கொண்ட செய்யுட் பகுதி வேண்டும் என்பது பாட இயலின் விதி. இந்நூலில் ஏறக்குறைய 430 வரிகள் தரப்பட்டுள்ளன. மனப் பாடத்திற்குரிய நூறு வரிகளைத் தமிழாசிரியப் பெருமக்களே தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு செய்யுட் பகுதியின் முதலில் ஆசிரியர் குறிப்பும், நூலின் விளக்கமும், ஈற்றில் அருஞ் சொற்பொருள், பயிற்சி என்பனவும் தரப்பட்டுள்ளன. தேவையான இலக்கணக் குறிப்புக்களும் அருஞ் சொற்பொருளும் தரப்பட்டுள்ளன.

உரைநடைப் பகுதி 'இராயல்' 50 பக்க அளவில் பல வகைப் பாடங்களைக் கொண்டதாக வேண்டும் என்பது பாட இயலின் விதி. இதனை உளங்கொண்டே இந்நூலில் ஏறத்தாழக் குறிப்பிட்ட அளவில் வருமாறு 10 பாடங்கள் தரப்பட்டுள்ளன. முதலில் ஆசிரியர் குறிப்பும், ஈற்றில் அருஞ் சொற்பொருள், கேள்விகள், பயிற்சி என்பனவும் தரப்பட்டுள்ளன. மாணவர்களை வருங்கால உலகின் சிறந்த அறிஞர்களாகத் திகழச் செய்வதே இத் தொகுப்பின் நோக்கமாகும்.

செய்யுட் பகுதியிலும், உரை நடைப் பகுதியிலும் உள்ள பகுதிகளைச் சேர்க்க இசைவு தந்த பெரியார்களுக்கு எங்கள் நன்றியை உரித்தாக்குகின்றோம். இதனைச் செவ்வையாகப் பிழையறப் பதிப்பித்து உதவிய C. A. H. இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் உயர் திரு புலவர் பு. செல்வராசனார்க்கு எம் நன்றி உரித்தாகுக.

உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களும், தமிழ் ஆசிரியப் பெருமக்களும் மாணவர்கள் இந்நூலைப் பயன் படுத்தி மகிழ்ந்திடும் வாய்ப்பை நல்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

— ஆசிரியர்கள்

உள்ளுறை

செய்யுள்

உ ரை ந டை

* உரிமையாளர்கள்தம் உடன்பாடு பெற்றுப் பதிக்கப்பட்டவை.

தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

தேசீய கீதம்

(பொருள்)

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கின்ற
நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும்
ஆட்சி செலுத்துகிறாய் ;

நின் திருநாமம், பஞ்சாப்பையும், சிந்துவையும்,
குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும்,
திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்-
காளத்தையும், உள்ளக் கிளர்ச்சி அடையச்
செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்
கிறது ; யமுனை கங்கை நதிகளின் இன்ப
நாதத்தில் கலக்கிறது ; இந்தியக் கடலலை
களால் ஜபிக்கப்படுகிறது ;

அவைகள் நின் ஆசியை வேண்டுகின்றன; நின்
புகழைப் பாடுகின்றன ;

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற
உனக்கு வெற்றி ! வெற்றி ! வெற்றி !

நான்காம் படிவம்

(பொதுப் பகுதி)

I. வாழ்த்து

1. திருவருட்பா

திருவருட்பா என்பது திரு+அருள்+பா எனப் பிரிந்து நின்று இறைவனது திருவருளைப் பெறுதற்குரிய பாடல்களாலாகிய நூல் எனப் பொருள் தரும். இஃது அருட் பெருஞ்சோதி ஆண்டவனைப்பற்றிப் புகழ்ந்து கூறுகின்ற செய்யுள் நூலாகும். ஏறத்தாழ ஆருயிரம் பாடல்கள் கொண்ட ஆறு திருமுறைகளாக இந்நூல் வகுக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் அருட்பிரகாச வள்ளல் வடலூர் இராமலிங்க அடிகளா வர். இவர் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூரில் இராமையாப் பிள்ளை என்பவருக்கும் சின்னம்மையாருக்கும் கி. பி. 1823-இல் பிறந்தார். இவர் சீவகாருண்யத்தையும் சாதி சமய பேதமற்ற சமரசத்தையும் கொள்கை யாகக் கொண்டவர். மறைவு: 1873.

எத்துணையும் பேதமுரு(து) எவ்வுயிருந்
தம்முயிர்போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்ருர்
யாவர்,அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெளிந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ.

அருஞ்சொற்பொருள்

எத்துணையும் - எந்தச் சிறு அளவும், பேதம் - வேறுபாடு. உருது - அடையாமல். வித்தகர்-மேலானவர். சித்து-அறிவு. உவக்கின்ருர்-மகிழ் கின்ருர். போல்-உவமை உருபு. உவக்கின்ருர்-வினையாலணையும் பெயர்.

2. தாயுமானவர் பாடல்

தாயுமானவர் பாடல் என்பது தாயுமான சுவாமிகள் இயற்றிய பாடல்களாலாகிய நூல் எனப்பொருள் தரும். இவர் சோழநாட்டைச் சேர்ந்த திருமறைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர். தந்தை: கேடிலி யப்பப்பிள்ளை. மரபு: சைவவேளாளர். இவர் திருச்சிராப்பள்ளியில்

ஆட்சி புரிந்து வந்த விசயரகுநாத சொக்கநாத நாயக்கரின் கணக்கராக இருந்தவர்; மௌன குருவிடம் உபதேசம் பெற்றவர். காலம்: கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதி. இவர் 1742-இல் சமாதி அடைந்தார்.

'அரும்பொனே! மணியே! என்அன்பே! அன்பான
அறிவே! என்அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே!' என்றென்று பாடினேன்;
ஆடினேன்; நாடிநாடி
விரும்பியே கூவினேன்; உளறினேன்; அலறினேன்;
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனஎன்இரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேன்யான்;
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு னுலுமுனை
இடைவிட்டு நின்றதுண்டோ?
என்றுநீ அன்றுநான் உன்னடிமை அல்லவோ?
யாதேனும் அறியாவெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ?
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய் வமே!பரஞ்
சோதியே! சுகவாரியே!

அருஞ்சொற்பொருள்

ஆனந்த வெள்ளம் - மகிழ்ச்சிக்கடல். கூவினேன் - அழைத்தேன். விண்மாரி - மழை. வேசற்று - செயலற்று. சுகவாரி - இன்பக் கடல். கள்வன் - திருடன். நாடிநாடி - அடுக்குத்தொடர். சுகவாரி - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. அரும்பொன், வெறுந்துரும்பு - பண்புத் தொகைகள். கைகூப்பி - இரண்டன் தொகை.

3. தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழ்த்தாயை வாழ்த்தும் வாழ்த்தாமெனக் கொள்க. இச் செய்யுள் 'மாரிவாயில்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இந்நூல் உயர்திரு. இளசைக்கிழார் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், M. A., B. L. அவர்களால் எழுதப்பட்டது. இவரது தந்தை எட்டப்பப் பிள்ளை என்பவர் ஆவார். இவரால் பல உரைநடை நூல்களும், பற்பல கட்டுரைகளும், தொடர்நிலைச் செய்யுள்களும் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன. இவர் தற்போது மதுரைக்கருகிலுள்ள பசுமலையில் வாழ்ந்து வருகின்ருர்.

தமிழினிய தெய்வதமே! மொழிகள்குலத் தனிவிளக்கே!
தகவெழில்மெய் சீர்த்தசொல்லின்
அமிழ்துவிழைந் தடுத்தபல புலவரெல்லாம் அசையலையைக்
கடைந்தபொழு தழகினோங்கும்
துமியினிடை யெழுந்தொளிருஞ் செல்வி! அறி வெனுமலவன்
துணைவியருள் முதல்வி! தூய்மை
கமழ்கவிதை உலகுபடை கவிஞருளங் கனிவிக்குங்
காதல்வளர் கன்னி! வாழி!!

அருஞ்சொற்பொருள்

தெய்வதம் - தெய்வம். விழைந்து - விரும்பி. அலவன் - திங்கள். துமி - நீர்த்திவலை. சீர்த்த - சிறந்த. கன்னி - இளமை குன்றாதவள். தகவு எழில் மெய் - உம்மைத்தொகை. அசைஅலை - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. அலை - சினையாகு பெயராய்க் கடலையுணர்த்தும். கமழ் கவிதை, படைகவிஞர், வளர்கன்னி - வினைத்தொகைகள்.

பயிற்சி

I. விடை எழுதுக :
1. எம்பெருமான் நடம் புரியும் இடமென இராமலிங்கர் கருதுவது எதனை?
2. எம்பெருமான் உருவம் யாதெனக் கூறப்படுகிறது?
3. 'சிந்தைமிக விழைந்தது'—எதற்கு?
4. தாயுமானவர் கடவுள் இயல்பை எவ்வாறு கூறியுள்ளார்?
5. தாயுமானவர் கடவுள்பால் வேண்டுவது யாது?
6. 'இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனு னுலுமுனை'—இத் தொடருக்குரிய பொருள் கூறுக.
7. தமிழ்த்தாய் புலவருக்கு எவ்வாறு உதவுகின்றாள்?
8. தமிழ்த்தாயைக் கன்னி என்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும்?
9. அசையலை யாது? இதனை யார் எதற்காகக் கடைந்தனர்?

II. 1. பிரித்து எழுதுக :—பேதமுறுது, எவ்வுயிரும், தம்முயிர், சித்துருவாய், ஒத்துரிமை, பரதெய்வம், நின்றதுண்டோ, உன்னடிமை, அறிவிலூறும், என்றென்று, வேசற்றயர்ந்தேன், விழைந்தடுத்த, துமியினிடை, கவிஞருளம், பொழுதழகினோங்கும்.

2. சேர்த்து எழுதுக :—அவர்+உளந்தான், என்+அன்பே, நீ+அன்று, அறிவு+என்னும், புலவர்+எல்லாம்.

III. தொடர்களை விளக்குக :—சுத்தசித்துரு, நெஞ்சகக்கள்வன், மொழிகள் குலத்தனி விளக்கு, அறிவு எனும் அலவன்.

IV. தமிழ்த்தாய் வாழ்த்துச் செய்யுள், தமிழ்த்தாய்க்கும் திருமகளுக்கும் ஒப்பாக எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பதை விளக்குக.

V. திரு. சோமசுந்தர பாரதியாரின் செய்யுளை உரைநடைப் படுத்துக.

II. அறவுரை

1. திருக்குறள்

இந்நூல் தமிழிலேயுள்ள தலையாய நூலாகும்; பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று; நாடு, மொழி, இன, நிற வேறுபாடின்றி எல்லார்க்கும் எக்காலத்திற்கும் பொருந்திய அறவுரைகள் நிறைந்தது; உலக ஒற்றுமைக்கு உயரிய வழி கோலுவது.

திருக்குறள்—திரு+குறள். திரு—அடைமொழி. அழகிய,சிறந்த, யாவரும் விரும்பும் தன்மையுடைய என்பன இதன் பொருள். குறள் - குறுமை. இரண்டடி வெண்பாவும் குறள் எனப்படும். முழுவதும் குறள் பாக்களினால் ஆகிய நூலாதலின், அடையடுத்த கருவியாகு பெயராய் இந்நூல் திருக்குறள் எனும் பெயர் பெற்றது. இந்நூல், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளை உடையது. இதில் அறம் 38 அதிகாரங்களும், பொருள் 70 அதிகாரங்களும், காமம் 25 அதிகாரங்களுமாக 133 அதிகாரங்களும், அதிகாரத்துக்குப் பத்தாக 1330 குறட்பாக்களும் அடங்கியுள்ளன. இந்நூலுக்கு, முப்பால், பொய்யா மொழி, தமிழ்மறை, வாயுறை வாழ்த்து, பொதுமறை என வேறு பத்துப் பெயர்கள் வழங்கப் படுகின்றன. இந்நூல் உலகமொழிகள் பலவற்றிலும் இந்திய மொழிகள் அனைத்திலும் பெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் பத்து வகையாகவும், ஜெர்மன் மொழியில் நான்கு வகையாகவும் இது பெயர்க்கப்பட்டுள்ளது.

நூலாசிரியர் : திருவள்ளுவர்.

பிறப்பிடம் : மதுரை என்பர் சிலர் ; மயிலாப்பூர் என்பர் சிலர்.

தாய் தந்தையர் : தெரியவில்லை.

காலம் : கி. மு. முதல் நூற்றாண்டிற்கு முன்னர் என்பர் சிலர் ; கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர் சிலர்.

தொழில் : வேந்தனது உள்படு கருமத்தலைவர்.

குடி : குறுநில மன்னர் மரபு, வேளாளர் மரபு, வள்ளுவர் மரபு எனப் பலபடக் கூறுவர் ஆராய்ச்சியாளர். எனவே, இந்நூலாசிரியரின் காலம், குலம், சமயம், பெற்றோர், பிறப்பிடம், பெயர் முதலிய எதனையுமே இன்னவை என அறுதியிட்டுக் கூறக்கூடவில்லை.

இனியவை கூறல்

1. பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்(கு)
அணியல்ல மற்றுப் பிற.

2. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

செய்ந்நன்றி யறிதல்

3. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

4. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

புறங்கூறாமை

5. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.

6. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.

ஒப்புர வறிதல்

7. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

8. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

வாய்மை

9. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

10. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

இன்னா செய்யாமை

11. இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

12. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

கல்வி

13. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

14. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

ஆள்வினையுடைமை

15. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

16. தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

நட்பு

17. நவிற்றொறும் நூனயம் போலும் பயிற்றொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

18. உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

உழவு

19. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

20. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

அரும்சொற்பொருள்

1. பணிவுடையன் - பணிவான சொல்லும் செயலும் உடையவன். அணி - அழகு. மற்று - அசை நிலை.

2. இனிது - இன்பம். ஈன்றல்-தருதல். வழங்குவது - சொல்லுவது: காண்பான் - அனுபவித்து அறிகின்றவன். இனிது - வினையாலணையும் பெயர். ஈன்றல் - தொழிற்பெயர். இன்சொல் × வன்சொல் — பண்புத்தொகைகள். கொல், ஓ — அசை நிலைகள்.

3. தினைத்துணை - தினை அளவு. பனைத்துணை - பனையளவு. தினைத்துணை × பனைத்துணை — முரண்தொடை.

4. எந்நன்றி - எத்தகைய அறச்செயல்கள். மகற்கு - மகனுக்கு. செய்ந்நன்றி - வினைத்தொகை. கொன்றார் - வினையாலணையும் பெயர்.

5. புறம்கூறி - பிறரைக் காணாத இடத்தில் இகழ்ந்து பேசி. அறம் கூறும் - அறநூல்கள் சொல்லும். சாதல், ஆக்கம் - தொழிற் பெயர்கள்.

6. ஏதிலார் - அயலார். மன்னும் - நிலைபேறுடைய. போல் - உவமை உருபு. உண்டோ - ஓகாரம் எதிர்மறை.

7. ஒப்புரவு அறிதல் - உலக நடையினை அறிந்து செய்தல். தாள் - முயற்சி. வேளாண்மை - உதவி. தந்த பொருள் - பெயரெச்சத் தொடர்.

8. திரு - செல்வம். ஊருணி - ஊரின் நடுவேயுள்ள குடிநீர்க் குளம். இச்செய்யுள் உவமையணி.

9. வாய்மை - உண்மை. பொய்த்தபின் - பொய்கூறிய பின்னர். சுடும் - வருத்தும். பொய்யற்க - வியங்கோள் வினைமுற்று. சுடும் - செய்யும் என்னும் வினைமுற்று.

10. மெய்யாக் கண்டவற்றுள் - உண்மை நூல்களாகக் கண்ட நூல் களில். எனைத்துஒன்றும் - எத்தன்மையாலும். இல்லை - குறிப்பு வினைமுற்று.

11. இன்னா - துன்பம் தரும் செயல்கள். ஒறுத்தல் - தண்டித்தல். நன்னயம் - இனிய மகிழ்ச்சி தரும் செயல்களை. ஒறுத்தல் - தொழிற் பெயர். நன்னயம் - பண்புத் தொகை.

12. முற்பகல் × பிற்பகல் — எதிர்ச் சொற்கள். செய்யின் — வினை எச்சம்.

13. கற்பவை - கற்பதற்குரிய பயனுள்ள நூல்களை. கசடு - குற்றம். கற்க — கல் + க, நிற்க — நில் + க—வியங்கோள் வினை முற்றுக் கள். கல்வி — தொழிற்பெயர்; கல் + வி; கல் — பகுதி; வி-தொழிற் பெயர் விகுதி; தோண்டுதல் என்பது இதன் பொருள். கற்பவை — பலவின்பால் வினையாலணையும் பெயர். அறு + அ = அற; தகு + அ = தக — வினை எச்சங்கள். கற்றபின் — வினை எச்சம்.

14. சாந்துணையும் - இறக்கும் வரையும். யாதானும் நாடாம்-ஏதேனும் ஒருநாடு தன்னாடு ஆகும். யாதானும் - யாது + ஆனும்; ஆனும் என்பது ஆயினும் என்பதன் விகாரம். ஆல் - அசை. நாடு + ஆம் + ஆல் — நாடாமால். ஊர் + ஆம் + ஆல்—ஊராமால்.

15. ஆள்வினை — முயற்சி. திருவினை - செல்வத்தை. முயற்றின்மை - முயற்சியில்லாமை. இன்மை - வறுமை. முயற்சி × முயற் றின்மை — முரண்தொடை.

16. மெய்வருத்தக் கூலிதரும் - உடம்பு வருந்திய வருத்தத்தின் அளவு பயன் தரும். முயற்சி - தொழிற் பெயர். கூலிதரும் - இரண்டன் தொகை.

17. நவில்தொறும் - கற்கும்தோறும். பயில்தொறும்-பழகும் தோறும். போலும் - உவமை உருபு. இச்செய்யுள் உவமையணி.

18. உடுக்கை - ஆடை. இடுக்கண் - துன்பம். களைவது - போக்கு வது. நட்பு, உடுக்கை-தொழிற்பெயர்கள். போல - உவமை உருபு. இச்செய்யுள் உவமையணி.

19. தொழுது - வணங்கி. மற்றெல்லாம் - மற்றவர் எல்லாரும்.

20. இலம் - யாம் வறுமை உடையோம். அசைஇ - சோம்பலுற்று. அசைஇ - இசை நிறை யளபெடை.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. ஒருவற்கு அணியாவது எது ?
2. 'வன்சொல் வழங்குவது எவன்' ?—விளக்கம் கூறுக.
3. பயன் தெரிவார் தன்மை யாது ?
4. யாருக்கு உய்வுண்டு? யாருக்கு உய்வில்லை ?
5. 'சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும்'—எப்பொழுது ? ஏன் ?
6. 'தீதுண்டோ மன்னுமுயிர்க்கு ?'—எப்போது தீதில்லை ?
7. தாளாற்றித் தந்த பொருளின் பயன் யாது ?
8. "உலகவாம் பேரறிவாளன் திரு" எதனை நிகர்க்கும் ?
9. வாய்மையின் சிறப்பு யாது ?
10. 'பொய்யற்க' எனக் கூறுவது ஏன் ?
11. இன்னா செய்தாரை ஒறுப்பது எங்ஙனம் ?
12. கல்வியைக் கற்க வேண்டும் முறையும் அதன் சிறப்பும் யாவை ?
13. முயற்சியின் சிறப்பு யாது ?
14. பண்புடையாளர் தொடர்பு எதனை ஒக்கும் ?
15. நட்பின் தன்மை யாது ?
16. உழவின் சிறப்பு எத்தகையது ?
17. 'நிலமென்னும் நல்லாள் நகும்'—எப்பொழுது ? ஏன் ?

II. திருவள்ளுவரைப் பற்றிப் பத்து வரிகள் வரைக.

III. பிரித்து எழுதுக :—ஊருணி, உலகவாம், நன்னயம், சாந்துணை, நவிறொறும், நூனயம்.

IV. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்' — விளக்கிப் பொருள் தருக.

V. சேர்த்து எழுதுக :— எ + நன்றி, தினை + துணை, செய் + நன்றி, தாள் + ஆற்றி, தன் + நெஞ்சம், கசடு + அற.

2. நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகை : நான்கு இரத்தினங்கள் போன்ற நான்கு சிறந்த நீதிகளைக் கூறும் நூல் என்பது இதன் பொருள். இந்நூல் 106-செய்யுட்களைக்கொண்டது ; பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

நூலாசிரியர் : விளம்பி நாகனார்.
காலம் : கி. பி. 5-ஆம் நூற்றாண்டு.
சமயம் : வைணவம்.

தவிர்க்க வேண்டுவன

1. எள்ளற்க வென்றும் எளியரென்று ; என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேற்பட ;— உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

வேண்டப்படுவன

2. கன்னாமை வேண்டும் கடிய ; பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும் ; என்றும்
விடல்வேண்டும் தன்கண் வெகுளி ; அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை.

வண்மை முதலிய வளரும் இடங்கள்

3. வளப்பாத்தி யுள்வளரும் வண்மை ; கிளைக்குழாம்
இன்சொற் குழியின் இனிதெழூஉம் ; வன்சொல்
கரவெழூஉம் கண்ணில் குழியின் ; இரவெழூஉம்
இன்மைக் குழியின் விரைந்து.

அழிவைத் தருவன

4. மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை ; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியைப்— பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின்.

குற்றம் தருவன

5. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞரில் போழ்தில் சினங்குற்றம் ; குற்றம்
தமரல்லார் கையகத்து ஊண்.

அருஞ்சொற்பொருள்

1. எள்ளல் - இகழ்ச்சி. சிற்றில் பிறந்தார் -வறுமைக் குடியில் பிறந்தவர். என்பெறினும் - உயர்வு சிறப்பும்மை. உள்சுடினும் - இழிவு சிறப்பு உம்மை. எள்ளற்க, கொள்ளற்க, சீறற்க, கூறற்க - வியங்கோள் வினைமுற்றுக்கள். விரைந்து - வினை எச்சம்.

2. கன்றுமை - நினைந்து நினைந்து மனம் புழுங்காமை. கடிய - பிறர் செய்த கொடுஞ் செயல்கள். கொளல், விடல், அடல் - தொழிற் பெயர்கள்.

3. வண்மை - ஈகை. வளம் - செல்வம். கரவு - வஞ்சகம். கண் - கண்ணோட்டம். இரவு - இரத்தல். பாத்தி, குழி - உருவகங்கள். கிளை- உவமையாகு பெயர். இனிதெழூஉம், கரவெழூஉம், இரவெழூஉம்- இன்னிசை அளபெடைகள்.

4. மொய் - வலிமை. கலம் - பாத்திரம், சிதைக்கும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

5. வள்ளன்மை - ஈகைத்தன்மை. போழ்தத்து - பொழுது. கிளைஞர்- உறவினர். ஊண் - முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. ஒருவன் தவிர்க்க வேண்டுவன யாவை?
2. எளியவர்பால் எவ்வாறு ஒழுகவேண்டும் ?
3. சிற்றில் பிறந்தாரை என்ன செய்தல் கூடாது ?
4. வண்மை, சுற்றம், வன்சொல், இரவு — இவை வளரும் இடங்கள் யாவை ?
5. வேண்டப்படுவன யாவை ? எத்தகைய வினைகளை மேற்கொள்ளல் வேண்டும் ?
6. ஒற்றுமையின்மை, பொய், கலம் — இவை எவ்வெவற்றிற்கு அழிவைத் தரும் ?

7. இளமைப் பருவம், வள்ளன்மை, சினங் கொள்ளல்—இவை எவ்வெப்பொழுது குற்றமாகக் கருதப்படும்?

8. நான்மணிக்கடிகை என இந்நூலுக்குப் பெயரிடப்பட்டதேன்?

II. பிரித்து எழுதுக:—கூறல்லவற்றை, சிற்றில், இன்சொற்குழி, இனிதெழூஉம், வளமிலாப்போழ்தத்து, வள்ளன்மை.

III. சேர்த்து எழுதுக:—உள் + சுடினும், ஆக்கம் + சிதைக்கும், ஒற்றுமை + இன்மை, தமர் + அல்லார்.

IV. விளக்குக:—கொள்ளார் கை மேற்பட, ஆக்கம் சிதைக்கும் வினை, இரவெழூஉம், தமரல்லார் கையகத்து ஊண்.

V. இச்செய்யுட்களில் உள்ள நீதிகளைத் தனித்தனியே எடுத்து எழுதுக.

3. பழமொழி நானூறு

பழமொழி நானூறு என்பது பழங்காலந் தொட்டுத் தமிழ் நாட்டில் வழங்கிவரும் பழம் போன்ற சுவையுடைய நானூறு பழமொழிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆகிய நூல். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

நூலாசிரியர்: முன்றுறை அரையனார்.

ஊர்: பாண்டிய நாட்டிலுள்ள முன்றுறை.

குடி: வேந்தர் குடி.

காலம்: கி. பி. 6-ஆம் நூற்றாண்டு.

கல்வி

1. ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை—அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்.

கல்லாதார்

2. கற்றாற்று வாரைக் கறுப்பித்துக் கல்லாதார்
சொல்தாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல்—எற்றெனின்
தானும் நடவான் முடவன் பிடிப்பூணி
யானையோ(டு) ஆடல் உறவு.

அமைச்சர்

3. செயல்வேண்டா நல்லன செய்விக்கும் தீய
செயல்வேண்டி நிற்பின் விலக்கும்; இகல்வேந்தன்
தன்னை நலிந்து தனக்குறுதி கூறலால்
முன்னின்னு மூத்தார்வாய்ச் சொல்.

பகைத் திறம்

4. தமரல் லவரைத் தலையளித்தக் கண்ணும்
அமராக் குறிப்பவர்க் காகாதே தோன்றும்
சுவர்நிலம் செய்தமையக் கூட்டியக் கண்ணும்
உவர்நிலம் உட்கொதிக்கு மாறு.

அறம் செய்தல்

5. பலநாளும் ஆற்ருர் எனினும் அறத்தைச்
சிலநாள் சிறந்தவற்ருற் செய்க—கலைதாங்கி
நைவது போலும் நுசுப்பினுய்! நல்லறம்
செய்வது செய்யாது கேள்.

அருஞ்சொற்பொருள்

1. ஆற்றவும் — மிகுதியும். அஃதுடையார் — அறிவுடையவர். ஆற்றுணு—வழியுண்வு (கட்டுச் சோறு). தமவே—தம்முடைய நாடே. கற்ருர்—வினையாலணையும் பெயர். ''கற்ருர்க்கு ஆற்றுணு வேண்டுவதில்'' என்பது பழமொழி. நாற்றிசையும் - முற்றும்மை.

2. கறுப்பித்து—கோபமூட்டி. சுனைத்து—மிக்கு. கல்லாதார்—வினையாலணையும் பெயர். ஆடல்—ஆடு+அல் - தொழிற் பெயர். ''முடவன் பிடிப்பு ஊணி யானையோடு ஆடல் உறவு'' என்பது பழமொழி.

3. இகல்—மாறுபாடு. முன் இன்னு—முதலில் துன்பம் தரும். செய்விக்கும் - பிறவினை. செய்யும் - தன்வினை. செயல் - தொழிற் பெயர். ''முன் இன்னு மூத்தோர் வாய்ச்சொல்'' என்பது பழமொழி. வாய்ச்சொல் - ஐந்தன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

4. அமரா குறிப்பு தோன்றும்—விரும்பாத குறிப்பே தோன்றும். தமர் அல்லவர் - தமக்கு உறவு அல்லாதவர். உவர்நிலம் உள் கொதிக்கும் - உவர்மண் உள்ளே கொதித்து உதிர்ந்துவிடும். "சுவர்நிலம் செய்தமையக் கூட்டியக் கண்ணும் உவர் நிலம் உட்கொதிக்குமாறு"—பழமொழி.

5. கலே - மேகலே. நுசுப்பு - இடை. நல்லறம் செய்வது கேள் செய்யாது - நல்லறம் செய்யும் நன்மையைச் சுற்றத்தாரும் செய்யார். "நல்லறம் செய்வது செய்யாது கேள்" என்பது பழமொழி.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. யாருக்கு ஆற்றுணு வேண்டுவதில்லே? ஏன்?
2. முடவன் யானேயோடு உறவாடுதலேப் போன்றது எது ?
3. அமைச்சருடைய சொல் என்னென்ன நன்மைகளேச் செய்யும்?
4. பகைவர்க்கு நன்மை செய்யினும் பயனில்லே.—ஏன் ?
5. நல்லறம் செய்வது சுற்றத்தாரும் செய்யார் ஆதலால் நாம் யாது செய்தல் வேண்டும் ?
6. பழமொழி நானூறு என்று இந்நூலுக்குப் பெயரிடக் காரணம் என்ன ?

II. பொருள் கூறுக :—ஆற்றவும், கற்ருர், ஆற்றுணு, கற்ருற்றுவார், இகல்வேந்தன், முன்னின்ஞ, தலேயளித்தல், உட்கொதிக்கும், கேள்.

III. எதிர்ச்சொல் கூறுக :— கற்ருர், அறிவுடையார், வேற்றுநாடு, நடவான், உறவு, விலக்கும், இன்ஞ, ஆற்ருர், செய்க.

IV. மேற்கண்ட ஐந்து செய்யுட்களிலும் உள்ள பழமொழிகளே எடுத்து எழுதி, அவற்றின் பொருளும் எழுதுக.

V. பிரித்து எழுதுக :—நாற்றிசை, ஆற்றுணு, கற்ருற்றுவாரை, முன்னின்ஞ, உட்கொதிக்கும்.

III. கதை

1. சிலப்பதிகாரம்

காட்சிக் காதை

சிலப்பதிகாரம் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. ஏனைய நூல்கள் சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். சிலம்பு + அதிகாரம் — சிலம்பதிகாரம் - வலித்தல் விகாரத்தால் சிலப்பதிகாரம் ஆனது. சிலம்பினது செய்திகளை முதன்மையாகக் கொண்ட நூல் என்பதே இதன்பொருளாம். ஆறும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாம்.

இந்நூல் மூன்று நீதிகளை உணர்த்தும். அவை: 'ஊழ்வினை விடாது,' 'அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம்', 'கற்புடை மகளிரை உயர்ந்தோரும் வணங்குவர்' என்பவை. முடிமன்னர் மூவர்க்கும் உரியது; மூன்று காண்டங்களை யுடையது. அவை: புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்பனவாம்.

நூலாசிரியர்: இளங்கோவடிகளாவர், இவர் சேரன் செங்குட்டுவனுடைய தம்பியார். தந்தை : நெடுஞ்சேரலாதன். தாய் : நற்சோணை. இவர் சமணநெறியினர்; சம நோக்குடையவர். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டென்பர்.

மண்களி நெடுவேல் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனி ஃதுரைக்கும்.

(சாத்தனுர் கூறியவை)

ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
திண்டிறல் வேந்தே! செப்பக் கேளாய்.
தீவினைச் சிலம்பு காரண மாக
ஆய்தொடி அரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்

வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி
அஞ்சி லோதி அறிகெனப் பெயர்ந்து
முதிரா மார்பகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டதும்
அரிமா னேந்திய அமளிமிசை யிருந்த
திருவீழ் மார்பின் தென்னர் கோமான்
தயங்கிணர்க் கோதை தன்றுயர் பொருஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தாள் நெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொருஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்
கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்றெனக் காட்டி இறைக்குரைப் பனள்போல்
தன்னாட் டாங்கண் தனிமையிற் செல்லாள்
நின்னாட் டகவையின் அடைந்தனள் நங்கையென்(று)
ஒழிவின் றுரைத்தீண் டூழி ஊழி
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றமெனத்
தென்னர் கோமான் தீத்திறங் கேட்ட
மன்னர் கோமான் வருந்தினன் உரைப்போன்.

(செங்குட்டுவன் கூறியவை)

எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையின் இகந்தசொற் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பம் துணிந்துவந் துரைத்த

நன்னூற் புலவற்கு நன்கனம் உரைத்தாங்(கு)
உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
நன்னுதல் வியக்கும் நலத்தோ ரியாரென

(மாபெருந் தேவி உரைத்தவை)

மன்னவன் உரைப்ப, மாபெருந் தேவி
காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்து
அத்திறம் நிற்கநம் அகல்நாடு அடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென

(மன்னன் நோக்க நூலறிபுலவர் நுவன்றவை)

மாலை வெண்குடை மன்னவன் விரும்பி
நூலறி புலவரை நோக்க ஆங்கவர்
ஒற்கா மரபிற் பொதியி லன்றியும்
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக்
கற்கால் கொள்ளினுங் கடவு ளாகும்
கங்கைப்பேர் யாற்றினும் காவிரிப் புனலினும்
தங்கிய நீர்ப்படை தகவோ உடைத்தெனப்

(மன்னவன் கூற்று)

பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு
முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தல்
மறத்தகை நெடுவா ளெங்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வரூஉம் செய்கையோ அன்று.

அருஞ்சொற்பொருள்

1—3. மண்களி - நிலமகள் களிப்படைவதற்குக் காரணமான. கண்களி - கண்கள் களித்தற்குக் காரணமான. காதலொடு - ஆர்வத்துடன். நெடுவேல் = (நெடுமை+வேல்) பண்புத் தொகை. தண்டமிழ் = (தண்மை+தமிழ்) பண்புத் தொகை. உரைக்கும் - செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆண்பாலில் வந்தது.

4—14. திண்டிறல் = திண்மை+திறல் - மிக்க வலிமை. ஒண் டொடி = ஒண்மை + தொடி - ஒளிபொருந்திய வளையல். ஆய்தொடி - வினைத்தொகை. கேளாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று. வலம்படுதானை - வெற்றியுண்டாவதற்குக் காரணமான சேனை. சேயிழை = (செம்மை + இழை) செம்மை யான அணிகலன்களை அணிந்த கண்ணகி (பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை). செஞ்சிலம்பு = செம்மையுடைய சிலம்பு, பண்புத் தொகை. அறிகென = (அறிக + என) அகரம் தொக்கது, தொகுத்தல் விகாரம். முதிரா மார்பு = இளமை பொருந்திய மார்பு. முதிரா- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அஞ்சல் ஓதி = அம் + சில் + ஓதி) அழகிய சிலவாகிய கூந்தலையுடைய பாண்டியன் மாதேவியே (பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை). மூதூர் = முதுமை + ஊர், பண்புத் தொகை.

15—23. அரிமான் - சிங்கம் — இரு பெயரொட்டுப் பண்புத் தொகை; அரி - சிங்கம், மா - விலங்கு. சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் சேர்ந்து வருவது இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. அரி-சிறப்புப் பெயர். மா — பொதுப் பெயர். ('ஆ, மா, கோ னவ்வணையவும் பெறுமே' எனும் விதிப்படி மா என்பது மான் என்ருயிற்று) திருவீழ் மார்பின் — வீர இலக்குமி விரும்பி வாழும் மார்பினையுடைய. தென்னர் கோமான் - பாண்டியன், ஆறன் தொகை. தயங்கிணர்க் கோதைதன் - விளங்குகின்ற பூங்கொத்துகளைக் கூந்தலில் அணிந்த கண்ணகியின் (இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை). தலைத் தாள் = தலை + தாள்-தலைமையான முயற்சி. நெடுமொழி-பெரு மிதத்துடன் கூறிய வஞ்சின மொழிகள். பொருஅன், பொரு அள் (செய்யுளிசை அளபெடைகள்) முற்றெச்சங்களுமாம். கொள்ளாள், கேளாள்-முற்றெச்சங்கள். செல்க — வியங்கோள் வினைமுற்று. கடுந்துயர்-கடுமை + துயர்-பண்புத் தொகை. மலரடி-(உவமைத் தொகை) மலர் போன்ற பாதங்கள். ஒருங் குடன் (ஒருங்கு + உடன்) ஒரு பொருட் பன்மொழி. "தன் னுயிர் கொண்டு அவன் உயிர் தேடினள் போல்" — தற்குறிப் பேற்ற அணி. புலவர் தம் கருத்தைக் கவியில் ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்ற அணியாம். பாண்டியன் வீழ்ந்திறந்தவுடன் பெருங் கோப்பெண்டும் உயிர் நீத்தாள் என்பதை, நுண் பொருளாகிய (abstract) பாண்டியன் உயிர் சென்ற விடத்தைப் பருப்பொருளாகிய (concrete) உடலுடன்

சென்று காண முடியாதாகையால், நுண்பொருளாகிய தன்னுடைய உயிரைக் கொண்டு பெருங்கோப்பெண்டு தேடிச் சென்றனள் என்று புலவர் கூறியிருக்கும் நயம் பெரிதும் சுவை பயக்கக்கூடியதாகும்.

24—29. கொற்றவேந்தன் - வெற்றியையுடைய பாண்டியன் நெடுஞ்செழியன் (இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகை) தன்னுட்டாங்கண் - தன் + நாடு + ஆங்கண். கொடுங்கோல் = கொடுமை + கோல் - பண்புத் தொகை. இற்று — இத்தன்மை யானது. உரைப்பனள் — வினையாலணையும் பெயர். "கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை இற்றெனக்காட்டி இறைக்கு உரைப்பனள் போல்" — தற்குறிப்பேற்ற அணியாம். கண்ணகி பதினன்கு நாட்கழித்துத் தன் கணவனுடன் கூடி வானகம் செல்லுதல் கருதிச் சேரநாடு நோக்கிச் சென்றதைப் புலவர், "பாண்டியனின் கொடுமை இத் தகையது என்று சேரனுக்கு எடுத்துரைக்க வந்தவள் போல்" என்று தம் கருத்தை ஏற்றிக் கூறியுள்ளார். ஒழிவின்று - ஒன்றும் குறையாமல். இன்று — இன்றி என்பதன் திரிபு. ஊழிஊழி, வழிவழி— அடுக்குத் தொடர்கள். சிறக்க — வியங்கோள் வினைமுற்று. செல்லாள் - முற்றெச்சம்.

30—36. தீத்திறம் = தீமை + திறம்-கொடுந்தன்மை (பண்புத் தொகை). செம்மையின் இகந்த சொல் - முறை தவறுதலால் ஆகிய பழிச்சொல். வல்வினை - வன்மை + வினை - தீவினை (பண்புத் தொகை). உயிர் பதிப் பெயர்த்தமை-உயிரை உடலினின்றும் நீக்கியமை பற்றிய சொல். வருந்தினள்- முற்றெச்சம். செங்கோல் = பண்புத் தொகை. செல்லுயிர் = வினைத் தொகை.

37—43. கரப்பின் —ஒளித்தால். வான்பேர் — மிகப் பெரிய. மன்பதை — மக்கள். தொழுதகவு - போற்றத்தக்கது, (வினைத் தொகை). நன்னூல் = (நன்மை + நூல்), நன்குடி = நன்மை + குடி, பேரச்சம் = (பெருமை + அச்சம்) - பண்புத் தொகைகள். மழைவளம் - ஆறும் வேற்றுமைத் தொகை (உம்மைத் தொகையுமாம்).

44—47. நன்னுதல்-அழகிய நெற்றியை யுடையவளே (பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, அண்மை விளியுமாம். சேயிழை-செம்மை + இழை — பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. வியக்கும் நலத்தோர் - வியக்கத்தக்க பெருமையுடையோர்.

48—51. மாபெருந்தேவி - மிக்க பெருமை வாய்ந்த இருங்கோ வேண்மாள். பரசல் - போற்றி வாழ்த்துதல். உறுக - வியங்கோள் வினைமுற்று. காணாது-எதிர்மறை வினையெச்சம். கழித்த - பெயரெச்சம். அகல்நாடு - வினைத்தொகை. பத்தினிக் கடவுள் - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. பரசல் - தொழிற்பெயர். பரசு—பகுதி, அல்—தொழிற்பெயர் விகுதி.

52—58. நூல் அறி புலவர் - அமைச்சர். ஒற்கா - ஒடுங்கா. பொதியில் அன்றியும் - பொதிய மலையில் அல்லாமலும். நீர்ப்படை-நீராட்டித் தூய்மைப் படுத்தல். தகவு - தகுதி. மாலை வெண் குடை-இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. அறி புலவர் - வினைத்தொகை. ஒற்கா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வியன்பேர்-ஒரு பொருட் பன்மொழி. உடைத்து - ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று.

59—62. கல்கால் கொண்டு - கல்லைப் பெயர்த்து. முதுநீர்க்காவிரி - பழமையான நீர்ப்பெருக்கையுடைய காவிரி (நீர்க்காவிரி இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகை), முதுநீர்-முதுமை + நீர்—பண்புத்தொகை. வரூஉம் - இன்னிசை யளபெடை.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. சீத்தலைச் சாத்தனுர் செங்குட்டுவனை நோக்கிக் கூறிய செய்தி யாது ?
2. 'தன்னுயிர் கொண்டு அவனுயிர்தேடினள்போல்'-நயம் பாராட்டுக.
3. கண்ணகி சேரநாடு அடைந்தது பற்றி ஆசிரியர் குறிப்பிடும் காரணம் யாது ?
4. பாண்டியனின் செங்கோன்மையைச் செங்குட்டுவன் எங்ஙனம் பாராட்டினுன் ?
5. செங்குட்டுவன் அரசகுடியில் பிறத்தல் துன்பமே என்று ஏன் கூறினுன் ?
6. செங்குட்டுவன் இருங்கோவேண்மாளை விளித்து யாது கேட்டான் ?
7. இருங்கோவேண்மாள் தந்த பதில் யாது ?
8. கண்ணகிக்கு வழிபாடு செய்யும் முறைகள் என அமைச்சர் கூறியவை யாவை ?

II. பிரித்துக்காட்டுக :— நன்னூல், சேயிழை, அறிகென, நன்னுடு, விற்றலை, தன்னுயிர், அவனுயிர், இற்றெனு, இறைக்குரைப்பாள், இஃதுரைக்கும், நெடுவேல், தண்டமிழ்.

III. உறுப்பிலக்கணம் தருக :—பரசல், உரைத்து, மாய்ந்தனன், கேளாய், பெயர்த்து, மயங்கினள், செல்க, செல்லான், காக்கும், மற்றது.

1. இச்செய்யுட் பகுதியை நாடக முறையில் அமைத்து எழுதுக.
2. இப்பாடச்செய்தியைச் சாத்தனுர் கூறுவதுபோல எழுதிக்காட்டுக.
3. இளங்கோவடிகள் பொது நோக்குடையவர் என்பதை விளக்குக.

2. மனோன்மணீயம்

மனோன்மணீயம்: தத்திதாந்த நாமம். மனோன்மணியின் கதையென்று பொருள்படும். மனோன்மணி என்பவள் பாண்டிய நாட்டரசன் சீவக வழுதியின் மகள். அவள் கதையைக் கூறுவது இந்நூல். இது லிட்டன் பிரபு எழுதிய 'மறைவு வழி' எனும் ஆங்கில நூலைத் தழுவி எழுதப் பட்டதாகும். இது ஒரு சிறந்த நாடக நூல். இந்நூல் ஷேக்ஸ்பியர் முறையைத் தழுவி ஐந்து அங்க நாடகமாகச் செய்யுள் நடையில் இயற்றப்பட்டிருக்கிறது.

நூலாசிரியர்: பெ. சுந்தரம் பிள்ளையவர்கள் M. A. இவர் திருவிதாங்கூரைச் சார்ந்த ஆலப்புழை என்னும் ஊரிலே பெருமாள் பிள்ளையவர்களின் திருமகனுராகப் பிறந்தவர். சைவ வேளாள மரபினர். இவர் காலம் கி. பி. 1855—1897. மனோன்மணீயம் பிள்ளையவர்களின் சிறந்த புலமையையும் தமிழ்ப் பற்றையும் விளக்கும்.

புல்

இதோஒ ! இக்கரை முளைத்தஇச் சிறுபுல்
சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி !
அதன்சிறு பூக்குலை அடியொன் றுயர்த்தி
இதமுறத் தேன்துளி தாங்கி ஈக்களை
நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்
பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து
ஆசிலாச் சிறுகாய் ஆக்கி, இதோ!என்
தூசிடைச் சிக்கும் தோட்டியும் கொடுத்தே
"இவ்வயின் யாமெலாம் செவ்விதிற் றுன்னில்
தழைப்பதற் கிடமில்லை ; சிருர்நீர் பிழைப்பதற்கு
ஏகுமின் ! புல்ஆ எருதுஅயத் தொருசார்
சிக்கிநீர் சென்மின் !" எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்

பொறுமையும் புலனும் காண்போர் ஒன்றையும்
சிறுமையாச் சிந்தனை செயாது ஆங்காங்கு,
தோற்று பேரழகும் ஆற்றல்சால் அன்பும்
போற்றுதம் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தங்கண் பனிப்ப—
ஆர்த்தெழும் அன்பினால் அனைத்தையும் கலந்துதம்
என்பெலாம் கரைக்கும் நல்இன்பம் திளைப்பர்.

அருஞ்சொற்பொருள்

சதா - எப்பொழுதும்; சாருதல் - பொருந்தியிருத்தல்; காண்டி - காண்பாயாக; நல்லூண் - நல்ல உணவு; பூம்பராகம் - மகரந்தம்; ஆசு + இல்லா = ஆசிலா - குற்றமற்ற; தூசு - ஆடை; தோட்டி - கொக்கி; இவ்வயின் - இவ்விடம்; துன்னில் - வாழ்ந்தால்; அயம் - ஆடு; பரிவும் - அன்பும்; புலனும் - அறிவும்; ஆர்த்து எழும்-பொங்கி எழும்; திளைப்பர் - அனுபவிப்பார்கள்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. சிறுபுல்லின் பரிவு, பொறுமை, அறிவு ஆகியவற்றை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
2. புல் ஆசிலாச் சிறுகாய்களை ஆக்குவது எங்ஙனம்?
3. புல் தன் இனத்தை எவ்வகையில் பரப்புகிறது?
4. என்பெலாம் கரைக்கும் நல் இன்பம் திளைப்பது எங்ஙனம்?
5. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, மனோன்மணீயம்—குறிப்புக்கள் வரைக.

II. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்துக :— நல்லூண் அருத்தி, பிழைப்பதற்கு ஏகுமின், பார்த்துப்பார்த்து, என்பெலாம் கரைக்கும் நல் இன்பம், பேரழகு.

III. 1. பார்த்துப்பார்த்து—அடுக்குத்தொடர்; இதனைத் தனித்தனியே பிரித்தால் பொருள் கொடுக்கும். தனியே பிரித்தால் பொருள் கொடாத கடகட, மடமட என்பவை இரட்டைக்கிளவி எனப்படும்.

2. பிரித்து எழுதுக :— அடியொன்றுயர்த்தி, செவ்விதிற்றுன்னில், என்பெலாம், குறிப்பிற்கேற்றதோர்.

IV. விதை பரவுதல் என்ற தலைப்பில் இருபது வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

3. நளவெண்பா

நளவெண்பா: நளன் + வெண்பா எனப்பிரிந்து, நளனுடைய வரலாற்றைக் கூறும் வெண்பாவாலாகிய நூல் எனப்பொருள் தரும். ஆறும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையாம்.

நூலாசிரியர்: "வெண்பாவிற் புகழேந்தி" எனப் புகழப்படும் புகழேந்திப்புலவர் ஆவர். செங்கற்பட்டிற் கருகிலுள்ள பொன் விளைந்த களத்தூரிற் பிறந்தவர். மள்ளுவ நாட்டுச் சந்திரன் சுவர்க்கி என்பவனால் ஆதரிக்கப் பட்டார். இவரது காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டாகும்.

நளன் மனைவி மக்களோடு சேர்தல்

(தேரை அலங்கரித்துக் கொண்டு வந்ததை நளன் தெரிவித்தல்)

1. ஒற்றைத் தனியாழித் தேரென்ன ஓடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன்—மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் ; பொம்மென்றளி
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய். [முரலத்

தேர் செல்லும் விரைவு

2. 'மேலாடை வீழ்ந்த தெடு'வென்றான் அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே—தோலாமை
மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா.

கலி நளனை விட்டு நீங்குதல்

3. வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி.

இருதுபர்ணன் வீமனது நகரம் அடைதல்

4. ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்
அன்னகரி யொன்றுடையான் ஆங்கு. [கூற்றம்

நளன் மடைப்பள்ளிக்குப் போதல்

5. ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதில் அடிசில் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நீலம் கண்விழிக்கும் நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து.

தமயந்தி தன் மக்களைத் தோழியுடன் அனுப்புதல்

6. கோதை நெடுவேற் குமரனையும் தங்கையையும்
ஆதி யரசன் அருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயல்நா டென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து.

நளன் தன் மக்களைக் காணல்

7. மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப்புயத் தணையா—'மக்காள்! நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள்'? என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

நளனுடைய மக்கள் விடை கூறுதல்

8. 'மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்' என்றார் அழுது.

நளன் இந்திரசேனனை வினவுதல்

9. 'உங்கள் அரசொருவன் ஆளநீ ரோடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ—செங்கை
வளவரசே!' என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து.

இந்திரசேனன் கோபித்து உரைத்தல்

10. 'நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா(து)
அஞ்சாரோ மன்னர் அருமடையா!—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி!

நளன் ஆறுதல் கூறி வருந்துதல்

11. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ?
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல்' என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

நளனது செய்திகேட்டுத் தமயந்தி வருந்துதல்

12. கொற்றக் குமரனையும் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்றான் ஆங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தார்அம் மாற்றம் மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது.

தமயந்தி, நளன் செய்தியைப் பெற்றோர்க்குத் தெரிவித்தல்

13. மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேரும் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காண் எங்கள்
கொடைத் தொழிலான் என்றாள் குறித்து.

வீமராசன் நளனைத் தெரிந்து கொள்ளுதல்

14. செவ்வாய் மொழிக்கும் செயலுக்கும் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட வுருவென்னு—எவ்வாயும்
நோக்கினன் நோக்கித் தெளிந்தான் நுணங்கியதோர்
வாக்கினன் தன்னை மதித்து.

வீமன் "உன் உண்மை உருவம் காட்டுக" எனல்

15. 'பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்கும் திருநாடா! உன்னை
ஒளியாது காட்டுன் உரு'.

நளன் அரவரசன் முன்கொடுத்த ஆடைகளை அணிதல்

16. அரவரசன் தான்கொடுத்த அம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி யுடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்
கோத்தாயம் முன்னிழந்த கோ.

[கும்

நளன் தனது பழைய வடிவம் பெறுதல்

17. மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினை போல் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு.

நளனையறிந்து மக்களும் மனைவியும் வணங்கல்

18. தாதையைமுன் காண்டலுமே தாமரைக்கண் நீரரும்பப்
போதலரும் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினன்
மின்னிடையா ளோடும் விழுந்து.

இருதுபர்ணன் தன்னூர்க்குப் புறப்படல்

19. உன்னையான் ஒன்றும் உணரா துரைத்தவெலாம்
பொன்னமருந் தாராய்! பொறுஎன்று—பின்னைத்தன்
மேனீர்மை குன்று வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீர் அயோத்தியார் மன்.

நளன் தன் நாட்டுக்குப் புறப்படல்

20. விற்றுனை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேல் தேவியொடும் போயினன்—முற்றும்
தேனீர் அளித்தருகு செந்நெற் கதிர்விளைக்கும் [பல்
மாநீர் நிடதத்தார் மன்.

அருஞ்சொற்பொருள்

1. ஒற்றை = ஒன்று + ஐ; ஆழி - சக்கரம்; கொற்றம் - வெற்றி; கொடு - கொண்டு (இடைக்குறை); போந்து - வந்து; பொம் - ஒலிக்குறிப்பு; அளிமுரல - வண்டுகள் ஒலிக்க; தீம் தேறல் - இனிய தேன்; வாக்கும் - சொரியும்; தார் - பூமாலை; சேய் - நளன்.

2. தோலாமை - தோற்றல் இல்லாமை; மேல் கொண்டான் - பின் பற்றியவன்; வெம்மை - கொடுமை; மால் - மயக்கம்; மா - குதிரை; நாலாறு - நான்கு + ஆறு.

3. கோமான் - தலைவன்; புனை - அணியும்; பாவலன் - புலவன்; கலி - துன்பம்; இச்செய்யுள் உவமையணி.

4. அலவன் - நண்டு; காமர் - அழகு; பொன் நகரி - அழகிய நகர் (குண்டினபுரம்); போர்வேட்டு எழும் கூற்றம் - போரை விரும்பி எழுகின்ற இயமன்; கரி - யானை; அன்ன - உவம உருபு.

5. பரி - குதிரை; அடிசில் - சோறு; மேதி - எருமை. கார் நீலம் - கருங்குவளை மலர்; கண் விழிக்கும் - மலரும்; புக்கான்-இறந்த கால வினைமுற்று; புகு - பகுதி.

6. கோதை - பூமாலை. குமரன் - நளன் மகனாகிய இந்திரசேனன்; தங்கை - அவன் தங்கையாகிய இந்திரசேனை; போத - போக; நாடு - ஆராய்க; வளை ஆடுங்கையாள் - வளையல்கள் ஒலிக்கின்ற கைகளையுடைய தமயந்தி; கையாள் - வினையாலணையும் பெயர்.

7. காணு - கண்டு; நடுங்கா - நடுங்கி; வெய்துயிரா - பெருமூச் செறிந்து; அணையா - அணைத்து; வன்மம் - உபாயம்; மன் - அரசன்; மக்காள் - விளி வேற்றுமை. யார்-வினு.

8. கான் - காடு; நகர்க்கே - நகரிலே; மற்றொருவன் - இங்குப் புட்கரன்; நகர்க்கே - வேற்றுமை வழுவமைதி.

9. இழுக்கு - குற்றம்; இங்கண் - இவ்விடத்தில்; உறைதல் - வாழுதல்; போந்து, போ - பகுதி; உறைதல்-தொழிற் பெயர்; செங்கை = செம்மை + கை; பண்புத் தொகை.

10. மாற்றம் - சொல்; அடுமடையா - சமையல் செய்பவனே, (முட்டாளே என்ற பொருளும் தொனிக்கின்றது); சிறுதொழில்- அற்பத் தொழில்—பண்புத் தொகை.

11. முனிந்தருளல் - கோபிக்காதீர்; அறியாது - எதிர்மறை வினை யெச்சம்; முடிசாய்த்து - இரண்டன் தொகை.

12. கோதை - பெண், இங்கு மகள்; அழிந்தாள் - வருந்தினுள்.

13. திருநகர்க்கே - அழகிய நகரத்தை; மன்னவன் - இருதுபர்ணன்; மடைத்தொழில் - சமையல் தொழில்.

14. செவ்வாய் - சிவந்த வாய் (செம்மை+வாய்) பண்புத் தொகை; எவ்வாயும் - எல்லாவிதத்தாலும்; நுணங்கிய - நுட்பமான.

15. பசுமை + தலை = பைந்தலை; பணம் - படம்; பூகம் - பாக்கு மரம்; மந்தி - பெண் குரங்கு.

16. அரவரசன் - நாகராசன் (நளனை முன்னர்க் கடித்த கார்க் கோடகன்); வாங்கி - எடுத்து; பொரு - நலிகின்ற; கோதாயம் - அரசச் செல்வம்; முன் இழந்த - முன்னே சூதாட்டத்தால் இழந்த.

17. மிக்கோன் - பெருமை மிகுந்த திருமால்; சார்வாக - பற்றுக் கோடாக; கரந்து உறையும் - (உரு) மாறி (ஒளிந்து) வசிக்கும். இச்செய்யுள் உவமையணி.

18. தாதை - தந்தை; குஞ்சி - குடுமி; குஞ்சியான் - இந்திரசேனன்; கண்ணின் புனலால் - கண்ணீரால்.

19. பொன் - அழகு; நீர்மை - குணம்; மால் - பெருமை; அயோத்தி யார்மன் - இருதுபர்ணன்.

20. வில்+தானை, விற்றானை = வில் ஏந்திய சேனை; பொற்றேர் = பொன்+தேர்; முற்று ஆம்பல் - முதிர்ந்த அல்லிப்பூ.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. தேர் செலுத்தும் விரைவினைப் புலவர் எவ்வாறு கூறுகிறார்?
2. சந்திரன் சுவர்க்கி யார்? புகழேந்தி அவனைப் பற்றி எந்தச் சந்தர்ப்பத்தில் கூறுகிறார்? ஏன்?
3. வாகுகன், இருதுபர்ணன், இந்திரசேனன் - இவர்கள் முறையே யார் யார் என்று முழுதும் விளக்கிக் கூறுக.
4. வாகுகன் அயோத்தி மன்னனிடம் எத்தொழில்கள் புரிந்து வந்தான்?
5. தமயந்தி நளனை அறிவதற்கு என்ன சூழ்ச்சி செய்தாள்?
6. தன் மக்களைக் கண்ட நளனது நிலையைத் தெரிவிக்க.
7. இந்திரன் நளனுக்குத் தெரிவித்த விடை என்ன?
8. அதனால் நளன் எய்திய துயரைத் தெரிவிக்க.
9. நளன் தன் மைந்தனின் வீர மனப்பான்மையை எவ்வாறு அறிந்தான்?
10. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ?' — இதிலுள்ள நயம் என்ன?
11. வீமன் வாகுகனான நளனைக் கண்டு எவ்வாறு ஐயம் நீங்கினான்?
12. நளனது தேர்ப்பாகன் வடிவு எவ்வாறு நீங்கியது?
13. இதனால் புலவர் எம்மதத்தினர் என்று விளங்குகிறது?

14. நளனைக் கண்ட அவன் மனைவி மக்கள் நிலையைத் தெரிவிக்க.

15. நிடத நாட்டின் நீர்வளப்பத்தைப் புலவர் எங்ஙனம் புலப்படுத்து கிறார் ?

16. புகழேந்திப் புலவர் செய்ந்நன்றி மறவாதவர் என்பதை உன் பாடப்பகுதி கொண்டு விளக்கி வரைக.

II. பிரித்து எழுதுக:—போந்தேறுகென்றுரைத்தான், போர்வேட்டெழுங் கூற்றம், விட்டவனேக, பொன்னமருந்தாராய், மேனீர்மை.

III. வந்தேன், வா - பகுதி; நின்ற, நில்-பகுதி. கொண்டான், கொள்- பகுதி. போயினன், போ-பகுதி; இவற்றிற்குரிய-விகுதி முதலிய வற்றை எழுதவும்.

IV. ஆழி:—இச் சொற்குரிய வெவ்வேறு பொருள்களைக் கூறுக. இவ்வாறு பல பொருள் தரும் சொற்கள் மற்றுமிரண்டினைக் கூறுக.

V. 'நளனும் அவன் மக்களும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

4. தேம்பாவணி

வளன் சனித்த படலம்

தேம்பாத அணி — தேம்பா அணி; தேம்பாத - மங்காத. இங்கு அணி யென்றது மலர்மாலையைக் குறிக்கிறது. தேம்பாத என்பது மங்காமையை யும், வாடாமையையும் உணர்த்துகிறது. தேம்பா அணி - ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சத் தொடர்.

சூதேய நாட்டிற் பிறந்து புகழ்பெற்ற வளன் என்னும் சூசையப்பர் பெருமையைக் கூறுவது இது. திருக்குறள், சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்களின் கருத்துக்கள் இந்த நூலில் மிளிர்கின்றன.

இந்நூலிற் காண்டம் பெரும் பிரிவு. படலம் சிறு பிரிவு. இது மூன்று காண்டங்களையும் முப்பது படலங்களையும் பெற்றுளது.

நூலாசிரியர் : வீரமா முனிவர் இவரது இயற்பெயர் கான்ஸ்டன் டைன் ஜோசப் பெஸ்கி; இத்தாலி நாட்டிலே காஸ்திகிலியோனே என்னும் ஊரிற் பிறந்தவர்; உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்; 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினர். மதத்தைப் பரப்ப வந்த ஐரோப்பியப் பாதிரியாரான இவர் திருநெல்வேலிச் சீமையிலே வடக்கன்குளம் என்னு மிடத்திலே தங்கித் தமிழ் கற்றுப் புலவரானார். இவருக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர் சுப்ரதீபக் கவிராயராவர்.

தாவீதன் கேள்வி

1. இன்ன வாய்பக றைப்பதும் இரிந்தபின், அண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப் போயினர்; அவரைத்
துன்ன ஆசையால் தொடர்ந்(து) இளதாவீதன் எய்தி
அன்ன யாவையும் அஞ்சினர் அறைதலுங் கேட்டான்.

2. கேட்ட வாசகம் கிளர்திறம் நெஞ்சிடத்(து) எரியை
ஈட்ட லாமென எழுந்(து)"உளம் நினைந்தவை ஆக்கிக்
காட்ட வாய்மையிற் கடந்தவல் கடவுளை நகைப்ப
வேட்ட லால்விளி விழுங்கிய கயவன் ஆர்?" என்றான்

தாவீதன் உறுதிமொழி

3. 'கைவ யத்தினற் கருத்திடத்(து) உடலின் ஊங்(கு)
[ஓங்கும்
பொய்வ யத்தினன் புகைந்தசொற்(கு) அஞ்சுவ(து)
[என்னே?
மெய்வ யத்தினல் விழைசெயம் ஆவதோ கடவுள்
செய்வ யத்தினற் சிறுவன்நான் வெல்லுவேன்'
[என்றான்.

அரசன் ஐயம்

4. என்ற(து) அண்ணல்கேட்(டு) இவன்தனைக் கொணர்
[மின் என்(று)இசைப்பச்
சென்ற அன்னநற் சேடனை நோக்கலும் நீயோ
பொன்ற உன்னினை? பொருப்பினைப் பெயர்த்
[தெறிந்(து) உவமை
வென்ற திண்மையான் வெகுளிமுன் நீயெவன்?'
[என்றான்.

தாவீதன் தேற்றம்

5. ஏந்தல் ஈரடி இறைஞ்சிய இளவலும் அறைவான்;
"காய்ந்த தோர்பகை கடுத்ததன் பவஞ்செயின் மீட்டும்
வேய்ந்த தோர்பகை வேண்டுமோ? கடவுளைப் பகைத்து
வாய்ந்த ஆண்மையை மறுத்தனை எவன்வெல்லான்?
[ஐயா!

6. திறங்க டுத்தகொல் சிங்கமும் உளியமும் பாய்ந்து
மறங்கடுத்(து) அதிர் வல்லியத்(து) இனங்களும்
[எதிர்ந்து
கறங்(கு) அடுத்தகால், கழுத்தினை முருக்கிநான்
[கொன்றேன்!
அறங்கெ டுத்தவன் அவற்றினும் வலியனோ ? என்றான்.

அரசன் விடை

7. அரிய ஆண்மையை அதிசயித்(து) அரசன் நன்(று)
[என்ன,
விரிய ளாவொளி வேலொடு தனதுபற் கருவி
உரிய போர்செய ஒருங்குதந் தனன்;அவற் றெடுதான்
திரிய ஆய்முறை தெரிகிலேன் எனமறுத்(து)
[அகன்றான்.

வேதியர் ஆசி

8. தெரிந்த வாய்ந்தஐஞ் சிலையொடு கவணெடுத்(து)
[எவரும்
இரிந்த பாலனை நோக்கி, உள் அதிசயித்(து) இரங்க,
விரிந்த ஆசையால் வேதியர் ஆசியைக் கூறப்
பிரிந்த கால், ஒலி பெருக ஆங்(கு) அனைவரும்
[ஆர்த்தார்

கோலியாற்றின் இகழ்ச்சி

9. ஆர்த்த ஓதைகேட்(டு), அரக்கன் இன்(று) அமர்க்
[கெதிர் வருகப்
பார்த்த பாலனைப் பழித்தெழுந் தியாவரும் அஞ்சக்
கூர்த்த வேலொடு குறுகவந்(து) அகல்கரு முகிலிற்
பேர்த்த கோடை நாட்பேரிடி யெனவுரை செய்தான்.

10. "நீயடா! எதிர்நிற்பதோ ? மதம்பொழி கரிமேல்
நாயடா! வினைநடத்துமோ ? கதங்கொடு நானே
வாயடா! பிளந்(து)உயிர்ப்பிட மறுகிநீ நுண்தூள்
ஆயடா! உல(கு)அப்புறத்(து) ஏகுவாய்" என்றான்.

தாவீதன் கவணெறிதல்

11. வெல்வை வேல்செயும் மிடலதுன் மிடலடா! நானே,
எல்வை ஆதர(வு) இயற்றெதி ரிலாத்திறற் கடவுள்
வல்கை யொடுனே மாய்த்துடல் புட்(கு) இரை யாக
ஒல்செய் வேன்'' என உடைக்கவண் சுழற்றினன்
[இளையோன்.

அரக்கன் அழிவு

12. கல்லை ஏற்றுங் கவணினைச் சுழற்றலும் அக்கல்
ஒல்லை ஓட்டலும் ஒருவரும் காண்கிலர்! இடிக்கும்
செல்லை ஒத்தன சிலைநுதற் பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்(து)இருள் இரிந்தென வீழ்தலும்
[கண்டார்.

அருஞ்சொற்பொருள்

1. இன்னவாய் - இத்தன்மையதாய்; முரண்செய - போர் செய்ய; அஞ்சினர் – வினையாலணையும் பெயர்; யாவையும், உம் - முற்றும்மை; பகல் + நாற்பது = பகனாற்பது.
2. கிளர் - கொந்தளிப்பு; திறம் - ஊக்கம்; எரி - கோபத்தீ; வல் - வல்லமை; வேட்டலால் - விரும்பியதால்; விளிவிழுங்கிய - மரணத்திற்கு ஆளாகப் போகின்ற; கயவன் - மூடன்; விளி - விளிவு, கடைக்குறை விகாரம்; ஈட்டலாம் - ஈட்டு பகுதி; வேட்டல் - தொழிற் பெயர், வேள் — பகுதி.
3. கைவயம் - கைவல்லமை; ஊங்கு - மிகுதி; செயம் - வெற்றி; விழைசெயம் - வினைத்தொகை; புனைந்த – பெயரெச்சம்.
4. இசைப்ப - சொல்ல; கொணர்மின் - கொண்டு வாருங்கள்; சேடன் - இளைஞன்; பொன்ற உன்னினுய் - அழியும் வகையைத் தேடிக் கொள்ள நினைத்தாய்; பொருப்பு - மலை; உவமை வென்ற - உவமைப் பொருள்களைக் கடந்த; திண்மையான் - வலிமையுடையவன், கோலியாற்று; எவன் - எம்மாத்திரம்; கொணர்மின் - ஏவல் வினைமுற்று; வெகுளி - தொழிற்பெயர்; வெகுள் = பகுதி.
5. ஏந்தல் - சவூலரசன்; கடுத்த - மிகக் கொடிய; பவம் - பாவம்; காய்ந்தது - அழிக்க வல்லது; ஏந்தல் - ஆண்பாற் சிறப்புப் பெயர்; இரண்டு + அடி = ஈரடி.
6. உளியம் - கரடி; மறம் - வலிமை; கொல்சிங்கம் - வினைத்தொகை. அதிர் வல்லியம் - முழக்கமிடும் வலிமை பொருந்திய புலி, வினைத்தொகை.

7. என்னு - என்று ; விரி அளாவு ஒளி - பரவி அளாவிய சுடர்; பல் + கருவி = பற்கருவி; உரிய - தக்கன; திரிய - உலாவ ; ஆய் முறை - ஆராய்ச்சிவகை; மறுத்து - விலக்கி விட்டு.
8. வாய்ந்த - தகுதியான; இரிந்த - போருக்குச்செல்லும்; பாலன் - தாவீது; பிரிந்தகால் - சென்ற போது; சிலை - கல்; ஆர்த்தார் - ஆரவாரித்தார்; இரிந்த-பெயரெச்சம்; ஐந்து + சிலை = ஐஞ்சிலை.
9. ஓதை - ஓசை ; கூர்த்த - கூர்மையான ; அகல் கருமுகில் - பரவிய மேகம் ; கோடையிடி - பெரு முழக்கத்துடன் கூடிய இடி.
10. கதம் - சினம் ; வாய்பிளந்து உயிர்ப்பிட - வாயைத் திறந்து ஊத; நுண்நூல் - நுண்ணிய புழுதி; வினை - போர்த்தொழில்.
11. மிடல் - வலிமை; வைவேல் - கூரிய வேல்; எல்வை - காலம்; வல்கை - வலியதுணை; ஒல்செய்வேன் - விரைவிற் செய்வேன்; எனு - செய்யா என்ற வாய்பாட்டு வினையெச்சம்.
12. ஒல்லை ஒட்டல் - விரைவாகச் செல்லுதல்; செல் - மேகம்; நுதல்-நெற்றி; எல்லை - சூரியன்; இச்செய்யுள் உவமையணி.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. கோலியாற்றின் அறைகூவலைக் கேட்ட தாவீது கொண்ட உறுதியென்ன ?
2. 'கோலியாற்றை வெல்வேன்' என்று தாவீதன் எவ்வாறு கூறினன் ?
3. தாவீதன் உரையைக் கேட்ட சவூல் மன்னவன் கொண்ட ஐயம் என்ன ?
4. தெய்வ வலிக்கும் மெய் வலிக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை?
5. போர்க் கெழுந்த தாவீதன் தன்மைகளை எழுதுக.
6. தாவீதை நோக்கிக் கோலியாற்று இகழ்ந்து கூறிய தென்ன ?
7. தாவீதன் கோலியாற்றை எவ்வாறு வென்றனன் ?

II. இடங்கூறி விளக்குக :— (1) நீயோ பொன்ற உன்னினுய். (2) நீயடா எதிர் நிற்பதோ. (3) ஓர்பகை வேண்டுமோ. (4) ஆய் முறை தெரிகிலேன்.

III. 'கருமுகிற் போர்த்த கோடை நாட் பேரிடி' என — இவ்வுவமையை விளக்குக.

IV. 1. பிரித்து எழுதி விதி கூறுக் :— நெஞ்சிடத்து, பெயர்த்தெறிந்து, நீயெவன்.

2. உறுப்பிலக்கணம் கூறுக :— கண்டார், காண்கிலர், சுழற்றினன், ஏகுவாய், செய்தான், பிளந்து, எறிந்து.

IV. பல்சுவை

1. கலைமகள்

கலைமகள்: கலைமகளை வணங்குவதாகப் பாடிய பாடல்களிலிருந்து எடுக்கப் பெற்றது.

நூலாசிரியர்: தேசீயக்கவி சி. சுப்பிரமணிய பாரதியார்.

ஊர்: எட்டையபுரம்.

குலம்: வேதியர்.

தாய்: இலக்குமி அம்மாள்.

தந்தை: சின்னச்சாமி ஐயர்.

காலம்: 1876–1921. இவர் பாடல்கள் விடுதலை வேட்கையை ஊட்டும் விறுவிறுப்பு வாய்ந்தவை; சாதி வேற்றுமையைச் சாடுகின்ற சால்புடையவை.

1. செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்!
 சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்தனம் இவட்கே செய்வ தென்றால்
 வாழியஃதிங் கெளிதன்று கண்டீர்!
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
 வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
 சாத்திரம் இவள்பூசனை யன்றாம்,

2. வீடுதோறும் கலையின் விளக்கம்;
 வீதிதோறும் இரண்டொரு பள்ளி;
நாடுமுற்றிலும் உள்ளன வூர்கள்
 நகர்களெங்கும் பலபல பள்ளி;
தேடு கல்வியிலாத தோரூரைத்
 தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கும் அமுதமென் அன்னை
 கேண்மைகொள்ள வழியிவை கண்டீர்.

—பாரதியார்.

அருஞ்சொற்பொருள்

1. தேவு - தெய்வம்; இங்குக் கலைமகள்; வந்தனம்-வணக்கம்; பூசனை-பூசை; முணுமுணுத்து - மெல்லச் சொல்லி, இரட்டைக்கிளவி, இணைந்திருப்பதைத் தனியே பிரித்தால் பொருள் தராதது இரட்டைக்கிளவி யாகும்.
2. விளக்கம் - ஒளி; பள்ளி-கல்வி பயிலுமிடம்; மடுத்தல் - அகப்படுத்தல்; கேண்மை - நட்பு; எம் அன்னை - கலைமகள்; பலபல - அடுக்குத் தொடர். இணைந்திருப்பதைத் தனித்தனியே பிரித்தால் பொருள்தருவது அடுக்குத் தொடர்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. உண்மைக் கலைமகள் வழிபாடு எது என்று பாரதியார் கூறுகின்றார் ?
2. "இவள் பூசனை யன்றும்"—எது அன்று ?
3. "கேடுதீர்க்கும் அமுதம் எம் அன்னை"—இத்தொடர் யாரைக் குறிக்கிறது? அன்னை கேடு தீர்ப்பது எங்ஙனம் ?
4. பாரதியாரைப் பற்றிக் குறிப்பெழுதுக.
5. இரு செய்யுட்களையும் உரைநடையாக வரைக.

II. 1. வணங்குவம் — வணங்கு — பகுதி. கண்டீர் — காண் — பகுதி. வாரீர் — வா — பகுதி. செய்வது — செய் — பகுதி. அடுக்கி—அடுக்கு —பகுதி. இவற்றின் மற்ற உறுப்புக்களான விகுதி முதலியவற்றை எழுதவும்.

2. நாட்டிடை, வாழியஃதிங்கெளிதன்று, முணுமுணுத்தேட்டை, கல்வியிலாததோரூரை — பிரித்து எழுதவும்.

III. மணி — இச்சொற்குரிய வெவ்வேறு பொருள்களைத் தருக. இவ்வாறு பல பொருள் தரும் சொற்கள் மற்றும் இரண்டினை எழுதுக.

2. தமிழ் வளர்ச்சி

தமிழ் வளர்ச்சி : தமிழ் மொழியின் வளர்ச்சியைப்பற்றிக் கூறுவது.

நூலாசிரியர் : புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

தந்தை : கனக சபை முதலியார். ஊர்: புதுச்சேரி. இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம். இவர் இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற கவிஞர். இவர் பாடல்கள் புதுமை மணமும்

புரட்சிப் போக்கும் கொண்டவையாகும். இவர் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் 16-ஆம் நாள் பிறந்தார். இவர் கவிதை நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

1. எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்;
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்;
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்;
எளிமையினல் ஒருதமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

—பாரதிதாசனார்

அருஞ்சொற்பொருள்

வெளியுலகு - நமது சூழ்நிலை; சிந்தனை - மனம்; சுவடி எலாம்கண்டு - நூல்கள் எல்லாம் எழுதி; செழும் தமிழ் - நூல்வளமுள்ள தமிழ்; நாணிட- வெட்கத்தால் தலைகுனிய; புதிதுபுதிதாக - அடுக்குத் தொடர்.

பயிற்சி

I. விடை எழுதுக:—

1. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசனார் கூறும் வழிகள் யாவை?
2. அவர் எவற்றினுக்குப் பெயர்களெல்லாம் காண வேண்டுமென் கிறார்.
3. "இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்" - எதற்காக நாணிட வேண்டும்?

II. பாரதிதாசன் கருத்தின்படி நடந்தால் நாட்டின் நிலை எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து ஒரு கட்டுரை வரைக.

III. 1. பொருள் கூறுக:— சிந்தனை, தெளிவுறுத்தும், செழுந்தமிழ், செந்தமிழ்.

2. பிரித்து எழுதுக:— சுவடியெலாம், செந்தமிழ், செழுந்தமிழ், படிப்பில்லை, தெளிவுறுத்தும்.

3. சேர்த்து எழுதுக:— வெளி + உலகில், இங்கு + உள்ள, பெயர்கள் + எல்லாம், எல்லாம் + கண்டு, படங்கள் + உடன்.

3. முக்கூடற் பள்ளு

இது முக்கூடலில் கோவில் கொண்டிருக்கும் திருமாலைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பள்ளர் வாழ்க்கையைக் கூறுவது. முக்கூடல் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை யாற்றின் வடகரையில் உள்ள ஒரு சிற்றூர். இது சித்திராநதி, கோதண்டராமநதி, பொருநை நதி ஆகிய மூன்று நதிகள் கூடுமிடத்தில் இருப்பதால் இப்பெயர் பெற்றது. இதற்கு இப்போது வழங்கும் பெயர் சீவலப்பேரி என்பது. சீவலப்ப மாறன் என்னும் பாண்டியனால் இவ்வூர் தோற்றுவிக்கப் பட்டமையின் இப்பெயர் பெற்றது என்பர். இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. என்னயினாப்புலவர் என்று சிலர் கூறுகின்றனர். இவர் தம்மைப் பேணிய காவை வடமலேந்திரனை இந்நூலில் பல விடங்களில் பாராட்டியுள்ளார். காவை என்பது திருப்பரங்குன்றத்தை அடுத்துள்ளது. காவனூர் என்பது காவை என மருவி வந்தது. வட மலேந்திரனின் இயற்பெயர் வடமலையப்பப் பிள்ளை என்பது. இந் நூலாசிரியர் காலம் கி.பி . 1676 – 1730 என்பர்.

குயில்

சீவலப் பேரிதமிழ் மூவகைக் கல்வியும்
செல்வமும் பெருகவே கூவாய் குயிலே
மாவளத் துடன்அழகர் தாவளக் குடிவாழ
மருதூரை வாழ்த்தியே கூவாய் குயிலே
பாவலர்க் குபகாரி காவையம் பலவாணன்
பலகிளையும் தழைக்கவே கூவாய் குயிலே
காவலர்க் குயர்பெருமை மேவுதேர்ப் பாலழகர்
கட்டளைகள் தழைக்கவே கூவாய் குயிலே.

பயிர் விளைவு

பதிந்த நடப்பேறிப் பசப்பும் ஏறிப்
பசந்து குருத்துமென்மேல் பரந்து செறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடிய சைக்கும்
முதல்வர் எனத்தழைத்து முதல் குழைந்தே
பொதிந்த பொதியை நீட்டிப்பூட்டிக் காட்டிப்
புரப்போர் பொன் இணங்குகை போலவணங்கி
எதிர்ந்த கதிர் முளைத்தே இடைபழுத்து
ஏற்ற விளைவு தோற்றந் தோற்றியதே.

அருஞ்சொற்பொருள்

1. சீவலப்பேரி - முக்கூடல். தமிழ் மூவகை - இயல் இசை நாடக மெனும் மூவகைத் தமிழ்; தாவளக் குடிகள் - மருத நிலத்துக் குடிகள் (தாவளம் = மருத நிலத்து ஊர்); காவை அம்பலவாணர்- காவை வடமலையப்பப் பிள்ளையின் முன்னோர்; தேர்ப்பாலழகர் - பார்த்தசாரதி.

2. பசப்பு - பசுமை ; முதல்வர் - திருமால் ; பொதி - கதிர்த்தொகுதி; பொன் இணங்கு கை - பொன் பொருந்திய கை ; வணங்கி - வளைந்து ; தோற்றம் - அழகு.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. முக்கூடற் பள்ளு ஆசிரியர் எவற்றைக் கருதிக் குயிலைக் கூவுமாறு வேண்டுகின்றார் ?
2. 'மாவளத்துடன் அழகர் தாவளக்குடி'—விளக்கிப் பொருள் கூறுக.
3. பயிர் விளைவு எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது ?
4. 'முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும் முதல்வர்' — விளக்கங் கூறுக.

II. 1. முக்கூடற் பள்ளுவைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

2. வாக்கியங்களில் அமைத்திடுக :—விளிப்போம், செவ்வாய், தெளிந்தோர், மாதங்கவனம், மாவளம், தமிழிசை.

III. பொருள் கூறுக :—மாவளம், உபகாரி, பொதிந்த, பொதி, புரப்போர்.

4. நற்றிணை

நற்றிணை — நல் + திணை = நற்றிணை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலத்திற்கும் உரிய ஒழுக்க முறைகளைத் தெளிவாக விளக்கிக் கூறும் நூல் என்பது இதன் பொருள். இஃது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. கடவுள் வாழ்த்துடன் 401 ஆசிரியப் பாக்களைக் கொண்டது; நூற்று எழுபத்தைந்து புலவர்களால் பாடப்பட்டது. தமிழ் மக்களின் மனையறத்தைமாண்புடன்விளக்குவது. இந்நூலைப் பன்னுடுதந்த பாண்டியன் மாறன் வழுதி என்பான் கி. பி. 225-இல் தொகுப்பித்தான். இவண் வந்துள்ள பாடலின் ஆசிரியர் நல்வேட்டனார்.

செல்வம்

1. நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே.

— நல்வேட்டனார்

அருஞ்சொற்பொருள்

நெடிய மொழிதல் - உயர்ந்த பட்டப் பெயர்களால் வழங்கப் பெறுதல் கடிய ஊர்தல் - விரைந்து செல்லும் ஊர்திகளில் செல்லுதல்; புன்கண் - துன்பம்; மென்கண் - மென்மையான இயல்பு.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. எது உண்மைச் செல்வமாகும் ?
2. எவை செல்வமாகா என்று நல்வேட்டனார் நவில்கின்றார் ?

II. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :— செல்வம், செய்வினைப்பயன், சான்றோர், பண்பு, அன்று.

III. நற்றிணையின் சிறப்பைப்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

5. சிலேடைப் பாடல்கள்

சிலேடை - இரு பொருள் படக் கூறுவது. கீழ்வரும் பாக்களைப் பாடியவர் காளமேகப் புலவர். இவரது இயற்பெயர் வரதன் என்பது. இவர் கும்பகோணத்தைச் சேர்ந்த வைணவ மறையவர்; திருவரங்கம் கோவிலில் மடைப்பள்ளி வேலை பார்த்தார். இவர் கார்மேகம் மழை பொழிவதைப் போல் பாக்களைப் பாடிவந்த ஏதுவால் காளமேகம் எனப் பெற்றார். இவர் கி. பி 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இரட்டைப் புலவர்கள், அதிமதுரகவி என்போர் இவர் காலப் புலவராவர்.

ஆட்டுக்கும் குதிரைக்கும் சிலேடை

1. கொம்பிலையே தீனிதின்னும் கொண்டதன்மேல்
[வெட்டுதலால்
அம்புவியில் நன்னடைய தாதலால் — உம்பர்களும்
தேடுநற் சோலைத் திருமலைரா யன் வரையில்
ஆடுங் குதிரையுநே ராம்.

வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை

2. வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செங்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

அருஞ்சொற்பொருள்

I. கொம்பிலை - (1) கொம்பில் உள்ள இலை (2) கொம்பு இல்லை; கொண்டதன்மேல் - (1) மக்கள் வாங்கிக்கொண்ட பிறகு (2) தன்மேல் ஏறிக்கொண்டு; நடை - (1) செல்வம் (2) நடக்குந் தொழில்; அம்புவி - அழகிய உலகம்; உம்பர்களும் - தேவர்களும் (உயர்வு சிறப்பும்மை); நேராம் - சமமாம்.

II. களம் - (1) நெற்களம் (2) போர்க்களம்; கோட்டை - (1) நெற் கோட்டை (2) கோட்டை; போர்-(1) வைக்கோல் போர் (2) சண்டை; சீருற்ற - பெருமை பொருந்திய; செங்கோல - செம்மை பொருந்திய, அழகுடைய; மேனி - உடல்; மால் - பெரிய.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. ஆடும் குதிரையும் நேராவது எங்ஙனம் ?
2. வைக்கோலுக்கும் யானைக்கும் பொருள் பொருந்தும்படி காள மேகப்புலவர் அமைத்த சிலேடை யாது ?
3. திருமலைராயன் வரை எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
4. திருமலைராயன் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளான் ?

II. 1. கொம்பிலை, கொண்டதன்மேல், நன்னடையது—இவற்றிற்குரிய இரு பொருள்களை விளக்குக.

2. சிலேடை என்பது யாதென்பதை விளக்கி, சிலேடைப் பொருள் வருமாறு நான்கு சொற்களைக் கூறுக.

6. சீட்டுக் கவி

இச்சீட்டுக் கவி அந்தகக் கவி வீரராகவ முதலியாரால் சந்திர வாணன் என்பவனுக்கு எழுதி விடுவிக்கப்பட்டது. அந்தகக் கவி வீரராகவ முதலியார் செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன் விளைந்த களத்தூருக்கு அண்மையில் உள்ள புதூரில் பிறந்தவர். இவர் தந்தையார்

வடுகநாத முதலியார். இவர் புறக்கண் இழந்தவராயினும் அகக் கண்ணுகிய கல்வி அறிவு சிறக்கப்பெற்றவர். தமிழ்நாட்டிலும், இலங்கை யிலும் உள்ள மன்னர், பெருஞ்செல்வர் முதலியவர்களைப் பாடிப் பல பரிசில் பெற்றவர். இவர் இயற்றிய நூல்கள் கழுக்குன்றப் புராணம், திருவாரூருலா, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சந்திரவாணன் கோவை முதலியன. இவரது காலம் கி. பி. 17-ஆம் நூற்றுண்டு.

மின்னுமாளிகை அநந்தை யாதிபதி
சந்த்ர வாணமகி பாலன்முன்
வீரராகவன் விடுக்கும் ஓலைதன்
விரும்பினுல் வலிய வேயழைத்(து)
உன்னுகாவிய மதிற்பெ ருத்ததொரு
கோவை யோதுகென ஓதினன்
ஓதிமாச மொருமூன்று போகியொரு
நாலு மாசமள வாகவும்
இன்னமுந்தனது செவியில் ஏறவிலை
என்னில் என்ன உலகெண்ணுமோ
இராசராசர் திறைகொள்ளும் என்கவிதை
இங்கு வந்துகுறை யாகுமோ
தன்னைஎன் சொலுவர்என்னை என்சொலுவர்
தான்தமிழ்க் குமணன் அல்லவோ
தன்புகழ்க்குமிது நீதியோ கடிது
தானின்னேவருதல் வேணுமே.

அருஞ்சொற்பொருள்

அநந்தை என்பது அனந்தபுரம் என்பதன் மரூஉ. இவ்வூர் தென் ஞர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்துக்கு அண்மையில் உள்ளது. உலகு என்ன எண்ணுமோ என மாற்றுக. சீட்டுக்கவி - கவிதையாக எழுதும் கடிதம். போகி - போய்; சொலுவர் - சொல்லுவர், இடைக்குறை. கடிது- விரைந்து; இன்னே - இப்பொழுதே; குமணன் - முதலெழுவள்ளல்களுள் ஒருவன்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. அந்தகக் கவி வீரராகவ முதலியார் யாருக்கு எவ்வாறு சீட்டுக்கவி அனுப்பினுர் ?
2. 'தன்னை என் சொலுவர் என்னை என் சொலுவர்' — ஏன் இவ் வாறு கூறுகின்றுர் ?

3. 'இராசராசர் திறை கொள்ளும் என் கவிதை'—இதன் கருத்து யாது ?

II. இதை இக்காலக் கடிதம் எழுதும் முறையில் மாற்றி அமைத்து ஒரு கடிதம் எழுதுக.

7. புறநானூறு

புறநானூறு : புறம் + நானூறு = புறநானூறு. இந்நூல் தமிழ் மக்களின் கலை, பண்பு, நாகரிகம், ஒழுக்கம், போர்முறை, ஆட்சிமுறை முதலியவற்றைத் தெரிவிக்கும் செந்தமிழ்ப் பாட்டுக்கள் நானூற்றைக் கொண்டிலங்குவது. இஃது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. இவண் வந்துள்ள பாடலின் ஆசிரியர் கண்ணகனார்.

சான்றோர் சேர்க்கை

1. பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்னும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.

—கண்ணகனார்.

அருஞ்சொற்பொருள்

துகிர் - பவழம். மன்னிய - நிலைபெற்ற. இடைப்படச் சேய வாயினும் - இடையிடையே நெடுந்தொலையில் இருந்தாலும். தொடை புணர்ந்து - கோவை பொருந்தி. காமருமணி - விரும்பத்தக்க மணி. நன்கலம் - நல்ல அணிகலன். பொன்னும் துகிரும் .... மணியும் - எண்ணும்மை. தொடை - தொழிற்பெயர். ஆப, ஆகுப - பலர்பால் வினைமுற்றுக்கள்.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. சான்றோர் சான்றோர் பாலர் ஆப—இஃது எவ்வாறு விளக்கப்படுகிறது ?
2. மலையில் பிறப்பதும் கடலிற் பிறப்பதும் ஒன்று சேர்தல் எங்ஙனம் ?

II. இப்பாடலின் பொழிப்புரை எழுதுக.

V. புனைந்துரை

1. அழகின் சிரிப்பு

கடல்

அழகின் சிரிப்பு என்பது இயற்கை அழகின் தோற்றம் எனப் பொருள்படும்.

நூலாசிரியர் : புரட்சிக் கவிஞர் திரு. பாரதிதாசன் அவர்கள்.

பிறப்பு : இவர் புதுச்சேரியில் 16—4 —1891-இல் பிறந்தவர்.

தந்தையார் பெயர் : கனகசபை முதலியார்.

இயற்பெயர் : கனகசுப்புரத்தினம் என்பதாகும்.

புதுச்சேரி கால்வேக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். இவர் கவிதைகள் சீர்திருத்த மணம் கமழும் தன்மை வாய்ந்தவை. பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

கடலும் இளங் கதிரும்

எழுந்தது செங்க திர்தான்
　　கடல்மிசை, அடடா ! எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல் !
　　வெளியெலாம் ஒளியின் வீச்சு !
முழங்கிய நீர்ப் பரப்பின்
　　முழுதும் பொன்ஒளிப ரக்கும் ;
பழங்கால இயற்கை செய்யும்
　　புதுக்காட்சி பருகு, தம்பி !

கடல் முழக்கம்

கடல்நீரும், நீல வானும்
　　கைகோக்கும் ; அதற்கிதற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்
　　எழில்வீணை அவ்வீணைமேல்

அடிக்கின்ற காற்றே வீணை
நரம்பினை அசைத்தின் பத்தை
வடிக்கின்ற புலவன், தம்பி!
வண்கடல் பண்பா டல்கேள்!

நிலவில் கடல்

பொன்னுடை களைந்து, வேறே
புதிதான முத்துச் சேலை
தன்னிடை அணிந்தாள் அந்தத்
தடங்கடற் பெண்ணாள், தம்பி!
என்னென்று கேள்; அதோபார்;
எழில்நிலா ஒளிகொட் டிற்று!
மன்னியே வாழி என்று
கடலினை வாழ்த்தாய், தம்பி!

அருஞ்சொற்பொருள்

செங்கதிர் - சூரியன். மிசை - மேல். எழில் - அழகு. வண்கடல் - வளப்பமான கடல். மன்னி - நிலைபெற்று. வான் - விண். புலவன் - அறிஞன். செங்கதிர் - பண்புத்தொகை. கேள் - ஏவல் வினைமுற்று. வாழி - வியங்கோள் வினைமுற்று. தம்பி - விளிவேற்றுமை. கடற் பெண் - உருவகம்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. கடல்மீது வழங்கும் கதிரவன் காட்சியைக் கவிஞர் பாரதிதாசன் எவ்வாறு கூறியுள்ளார்?
2. வண்கடல் பாடலைக் கவிஞர் எவ்வாறு கற்பனை செய்துள்ளார்?
3. கடற்பெண் எவ்வுடை யணிந்தாள்? ஏன்?

II. இப்பாடல்களை உரைநடையாக வரைக.

2. முத்தொள்ளாயிரம்

முத்தொள்ளாயிரம் — மூன்று + தொள்ளாயிரம் எனப் பிரிந்து சேர, சோழ, பாண்டியராகிய மூவரைப் பற்றிய தொள்ளாயிரம் பாடல் என்றும் அம்மூவரைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல் என்றும் பொருள் படும். இது தமிழ் மொழியிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. இப்பொழுது கிடைத்துள்ள வெண்பாக்கள் 109. இதன் ஆசிரியர் எவ ரெனத் தெரியவில்லை.

மாறன் களிறு

மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லாம் எமதென் றெழுதுமே
மொய்யிலை வேல்மா றன் களிறு.

முத்தமிழ்

பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்—சாரல்
மலைபடுப யானை ; வயமாறன் கூர்வேல்
தலைபடுப தார்வேந்தர் மார்பு.

அருஞ்சொற்பொருள்

1. மருப்பு - கொம்பு. கனல் - தீ. மறம் - வீரம். களிறு - ஆண் யானை. மாறன் - பாண்டியன்.
2. பார் - நிலம். பதி - நகர். முத்தமிழ் - இயல் இசை நாடகம். நித்திலம் - முத்து. வயம் - வெற்றி. தார் - மார்பிலணியும் மாலை.

பயிற்சி

I. விடை எழுதுக :—
 1. மாறனது களிற்றின் மறச்செயல் யாது ?
 2. பார்படுப, மலைபடுப, நீர்படுப, தலைப்படுப — யாவை ?

II. முத்தமிழ் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கி வரைக.

3. இயற்கை இன்பம்

இப்பாடல்களைப் பாடியவர் வாணிதாசன் என்பவர். இவர் புரட்சிக் கவிஞரின் மாணவராவார். இக்காலக் கவிஞர்களில் பாரதிதாசனுருக்கு அடுத்த வரிசையில் வைத்து எண்ணத்தகும் அருந்திறலுடையார்.

1. புல்லினை மடிக்கும் தென்றல்;
 பொன்நிறம் மாலை சிந்த
நல்லபாம் பெனநெ ளிந்து
 நழுவிடும் ஓடை; கூழாங்
கல்லிடைச் சலச லக்கும்;
 காக்கைகள் கூட்ட மாக
மெல்லுடல் கோதி நீரில்
 விளையாடி உடல்கு ளிக்கும்.

2. கொற்கைமுன் குளித்த முத்தை
இலைத்தட்டில் கொட்டி ஏந்திச்
சுற்றிலும் உள்ள தென்னை
மரங்களைத் தவளை கூவி
விற்றிடும்; தாம ரைப்பூ
விலைபேசும்; குடிதண் ணீர்க்குச்
சுற்றுவட் டார மெல்லாம்
பேர்போன குளத்தில் காலை.

—கவிஞர் வாணிதாசன்

அருஞ்சொற்பொருள்

1. மாலை - மாலைக்காலம். ஓடை - நீரோடை. சலசல - இரட்டைக் கிளவி.
2. கொற்கை - பாண்டியனது கடற்கரைத் துறைமுகம்.

பயிற்சி

I. விடை எழுதுக:—

1. குளத்தில் காலையில் நிகழும் நிகழ்ச்சியினைக் கவிஞர் வாணிதாசன் எவ்வாறு புனைந்துரைத்துள்ளார்?
2. இயற்கையில் மாலை நேரத்தில் நிகழும் காட்சியினைக் கவிஞர் எவ்வாறு வருணனை செய்கின்றார்?

II. காலை, மாலை—இரண்டினையும் கவிகளின் கருத்தைப் பயன்படுத்தி விளக்கி ஒரு கட்டுரை வரைக.

4. சோலைக் காட்சி

இப்பாடல்களின் ஆசிரியர் கம்பர். ஊர் - சோழநாட்டிலுள்ள திருவழுந்தூர். தந்தை - ஆதித்தன். குலம் - உவச்சர். காலம் - கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. சமயம் - வைணவம் என்பர்.

1. குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் குனிக்கு [மஞ்ஞை
அயில்விழி மகளி ராடும் அரங்கினுக் கழகுசெய்யப்
பயில்சிறை யரச வன்னம் பனிமலர்ப் பள்ளிநின்றும்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வசோலை.

2. வரம்பின் வான்சிறை மதகுகண் முழவொலி வழங்க
அரும்பு நாண்மல ரசோகங்க ளலர்விளக் கெடுப்ப
நரம்பி னூன்றதேன் றுரைகொள் நறுமலர் யாழின்
சுரும்பு பாண்செயத் தோகைநின் றுடுவ சோலை.

—கம்பர்

அருஞ்சொற்பொருள்

வதுவை - திருமணம்; குனிக்கும் - வளைந்து ஆடும்; மஞ்ஞை – மயில்; அயில் - வேல்; தும்பி - வண்டுகள்; செவ்வழி - ஒருவகை இராகம், நெய்தல் நிலத்துப்பண். வதுவை செய்ய, அழகு செய்ய, துயில் எழ, தும்பி காலையில் செவ்வழிப் பண்பாடும் என முடிக்க. அயில்விழி- உவமைத் தொகை; முரல்வ — பலவின்பால் வினைமுற்று.

வான்சிறை - பெரியமடை; மதகுகண் - மதகுகள்; அலர் - விளங்கு கின்ற; நரம்பின் - இலை நரம்பிலிருந்து (இலையில் பட்டு நரம்பின் வழியாக); நான்ற - ஒழுகிய; சுரும்பு – வண்டு.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. சோலைக் காட்சியைக் கம்பர் எவ்வாறு காட்டியுள்ளார்?
2. அயில்விழி மகளிராடும் அரங்கினுக்கு அழகு செய்ய எது எங்கு நின்றது ?
3. தும்பி என்ன செய்தது ?

II. கம்பர் கூற்றைப் பயன்படுத்தி ஒரு சோலைக் காட்சியை விவரித்து எழுதுக.

5. முல்லை

இக்கவிதை யாசிரியர் தஞ்சை மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி யில் தமிழாசிரியராகப் பணியாற்றுபவர்; உயர்ந்த கவிதையாக்கும் ஆற்ற லும் சிறந்த புலமையும் கொண்டவர். இப்பகுதி "வசந்தம்" என்ற திங்க ளிதழிலிருந்து எடுத்துத் தரப்படுகிறது:

1. முல்லை வாழி ! முல்லை வாழி !!
முறுவல் காட்டும் முல்லை வாழி !
மங்கையர் கூந்தல் மாதவன் முடியாம்
எங்கணும் அமைந்தே இன்மணம் ஈந்தாய் !
5. உள்ளும் புறமும் ஒத்தாய் நன்றே;

சொல்லும் பொருளும் போல நீதான்.
உன்னைக் கண்டு உவகை கொண்டே
பெண்ணைப் பேணும் பெரியோர் போலவும்
கண்ணைக் காக்கும் காரிமை போலவும்
தண்ணீர் ஊற்றித் தனியாய் வளர்த்தேன்.
நன்றி மறவா நயனுடை யார்போல்
பூவாய் வந்து புதுமணம் தந்தாய் !
கண்டு உன்னைக் கடமையின் பரிசே
என்று மகிழ்ந்தே இருக்கும் போழ்தில்
இயற்கையை வெல்ல எண்ணிய குறும்பர்
காகிதம் கொண்டு கைத்திறன் காட்டி
உன்னைப் போன்றே உருவம் கொடுத்து
வண்ணம் போற்றி வகைபல செய்தே
வெளியில் வைத்தே அளியை ஏய்த்தனர்
ஈகையும் குணனும் இல்லா ரிடத்தே
போக மறுக்கும் புதுமை போன்றே
வண்டும் வாரா வாங்குவா ரில்லா(து)
என்று மங்காடியி லிருத்தல் கண்டேன்
போலிகள் நாளும் புதிதாய் முளைத்தால்
வேலியைப் போட்டு வெறுத்தல் அறமே.

—புலவர் ஆ. மகிழ்நன்

அருஞ்சொற்பொருள்

முறுவல் - சிரிப்பு; மாதவன் - இறைவன்; உவகை - மகிழ்ச்சி; காரிமை-கரிய நிறம் பொருந்திய கண்ணிமை. வண்ணம் - நிறம். ஈகை = பிறர்க்கு உதவி செய்தல். புதுமை - விருந்தினர் (பண்பாகு பெயர்); வாரா - (வாராது) தொகுத்தல் விகாரம்; அங்காடி - கடைத் தெரு.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. 'சொல்லும் பொருளும் போல' - உவமையை விளக்குக.
2. முல்லையின் சிறப்பு யாது?
3. குறும்பர் செயல் யாது ?
4. கவிஞர் எதனை அறமென்று கூறுகின்றார் ?

II. முல்லையின் பெருமைகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

1. பெண்கள் பந்தாட்டம்

டாக்டர் ஆ. சிதம்பரநாதன் செட்டியார், M.A., (Ph. D.)

[இவ்வாசிரியர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பல்லாண்டு களாகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருபவர்; நூல்கள் பலவற்றின் ஆசிரியர்; மேனுட்டுக் கல்வி முறைகளை ஆண்டுச் சென்று அறிந்து வந்தவர்.]

உலண்டு என்று ஒருவகைப் புழு உண்டு. அந்தப் புழுவி லிருந்து ஒருவகையான அழகிய பட்டு எடுக்கப்படும். அந்தப் பட்டு பொன்னிறம் உடையது. அஃது எழுப்பினல் எழும்பும் தன்மை வாய்ந்தது. இப்படி எழும்பும் தன்மையுடைய நெட்டி, பஞ்சு, பட்டு இவற்றினுலே பண்டைக் காலத்திலே பந்துகள் செய்தார்கள் என்று 'பெருங்கதை என்ற புத்தகத்தால் அறிகிறேம். இவற்றைச் சேர்க்கவேண்டிய அளவு சேர்த்து நன்ருகத் திரட்டி, நூலாலும், கயிற்ருலும் நுண்மையாகச் சுற்றித் தைத்து மகளிர் விளையாடினுர்களென அறிகிறேம். அப்பந்துகள் வெண்ணிறம், செந்நிறம், கருநிறம் உடையன. காற்று வீசினுலும் அவை தாமாக எழுந்து ஆடுகின்ற அளவு நொய்மை வாய்ந்தவை. இந்தக் காலத்திலே உள்ள பிங்பாங் (Ping-Pong) ஆட்டத்திற்குரிய 'செல்லுலாயிட்' பந்தைவிட அவை மெல்லியனவாய் இருந்தன என்று வைத்துக் கொள்ளலாம். அவை கண்ணைப் பறிக்கும் அழகுடையன. அந்த அழகு மனத்தைவிட்டு அகலுவது அருமை. இவ்வளவு சிறப்புடைய பந்துகள் பலவற்றைப் பல்வேறு வகையாக அந்தக் காலத்தில் செய்தார்கள் என்பதைக் கொங்கு வேள் என்னும் புலவர் பெருங் கதையிற் சொல்லியிருக்கிருர்.

* * *

வத்தவ நாட்டு அரசனுன உதயணனுடைய மனைவியர் இரண்டு பேருங் காணும்படி, அவ்விருவருடைய தோழிமார் போட்டியிட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் விஞ்சுவராய்ப் பந்தடித்தார்கள் என்ற செய்தியைப் பெருங்கதை தெரிவிக்கிறது. அதனைக் காண்போம் :

ஒருத்தி ஏழு பந்துகளை எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றாக உயர எழுப்பிக் 'கண் இமையாமல் எண்ணுங்கள்' என்று சொல்லி ஆயிரந்தரம் கையினால் அடித்தாள். இன்னொருத்தி அந்த ஏழு பந்துகளையும் ஆயிரத்தைந்நூறு முறை ஒரே மூச்சில் அடித்தாள்; அப்படி அடிக்கும்போது, கூந்தலின் மேலே போய் வந்த பந்தைக் குவித்த விரலாலேயே எழுப்பினாள்; சில பந்துகளை மேகலைக்கு எதிரே அடித்தாள்; இன்னுஞ் சிலவற்றைத் தனது தலைமாலை யாலே சார்த்தி எழுப்பினாள்.

கூனி ஒருத்தி அந்த ஏழு பந்துகளையும் கொண்டு இரண்டாயிரம் முறை அடித்தாள்; அப்பொழுது நான்கு மூலை களிலும் காற்றினும் வேகமாக ஓடியாடி அடித்தாள்; பந்துகளைத் தட்டி விட்டுவிட்டு, இடை நேரத்தில் இரண்டு கையையும் தட்டினாள்; தோள் மேலே சில பந்துகளைப் பாய்ச்சினாள்; கூன் மேலே சிலவற்றைப் புரட்டினாள்; பாடிக்கொண்டும், அவிழ்ந்த கூந்தலை முடித்துக் கொண்டும், நெற்றியிலுள்ள பொற்றிலை யேற்றும், பொட்டிலே பட்ட பந்தைப் புறங்கையாலே தட்டி எற்றியும் இரண்டாயிரம் முறை அடித்து நிறுத்தினாள்.

கூனி இப்படிச் செய்ததைக் கண்ட குள்ளி யொருத்தி, 'நான் இங்கு இருக்கும்போது புகழும்படி கூனி அடிப்பதா?' என்று சொல்லி, சீலையை இறுக்கிக் கட்டிக்கொண்டு, கையிலே பந்தடிக்குங் கோலை எடுத்துக் கொண்டு இரண்டாயிரத்தைந்நூறு முறை அடித்து விட்டாள்.

இன்னொருத்தி தான் விட்டெறிந்த பந்தை மூவாயிரந்தரம் அடித்தாள். அடிக்கும்போது அவள் போட்ட நடை நாடகப் பெண்கள் போடுகிற நடையைப்போல இருந்தது. இரண்டு கைகளாலும் அவள் பந்தை அடித்துக்கொண்டு விண்ணிற்கும் மண்ணிற்குமாகப் பறவையைப் போலப் பறந்ததைப் பார்த்துச் சிலர் மூக்குமேல் கை வைத்தனர். அவள் கை மாத்திரம் வேலை செய்தன என்பது அன்று. அவளுடைய கண்ணும் புருவமும் மனமும் அவள் கையோடும் காலோடும் ஓடின என்றே சொல்ல வேண்டும். மேகலை ஆர்த்தது; கூந்தல் அவிழ்ந்தது; பூமாலையும் பொன் கலமும் சிதறின. அவள் நில்லாது இன்னும் பந்தடித்துக் கொண்டே இருந்தாள். அவள் நிற்கிறாளா, பறக்கிறாளா என்று

சொல்ல முடியாதவாறு, மேலுங் கீழும் போய்ப் போய் வந்தாள்; அவளுக்குத் தோள் இரண்டல்ல, பல என்று சொல்லும்படி அடித்துக் கொண்டிருந்தாள். அப்படிச் சொல்வதைவிட, எங்குப் பார்த்தாலும் அவள் தோளே காணப்படுவதால், அவள் பல தோள் வடிவினள் ஆயினுள் என்றுகூடச் சொல்லி விடுதல் நல்லது. அப்படித்தான் சொன்னுர் கொங்குவேளும்.

வேருெருத்தி இவர்களை யெல்லாம் எள்ளி முன்வந்து நின்ருள்; பந்தாட்ட இலக்கணத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவு செய்தாள்; உட்கார்ந்து கொண்டு நல்ல பந்தாக இருபத்தொரு பந்துகளைத் தேர்ந்தெடுத்தாள்; அவற்றை எழுப்பிப் பைய எழுகின்ற அவள் செய்தொழிலுக்கேற்ப, அவளுடைய கையும் காலும் மெய்யும் இயைந்தன. பரத நாட்டியங் கற்றவர் அவள் அவிநயத்தை வியக்கிருர்கள். அவள் பந்தடிப்பதால் உண்டாகும் ஒலி தாளத்தோடு ஒத்ததாக இருக்கிறது; அதனுல் பாடல் வல்ல பெண்டிர் அவள் பாணியைப் பாராட்டுகின்றனர். அவள் இரண்டு காலையும் 'தம்' 'தம்' என்று பெயர்த்து வைக்கிற திறத்தைப் பார்த்து மத்தளங் கொட்டுவோர் கொண்டாடுகின்றனர். அவளால் எழுப்பப்படும் பந்துகள் நிலத்திற்கும் விசும்பிற்குமாகப் போன வண்ணம் இருக்கின்றன; சூறைக் காற்றிலே அகப்பட்டுச் சுழலும் இலைகளைப் போல உள. பந்துகள் வந்து வந்து திரும்பிப் போவதையும் ஏறுவதையும் இறங்குவதையும் ஆகாயத்தில் நிற்பன போல இருப்பதையும் கொங்குவேள் அழகுபெறத் தீட்டியுள்ளார்.

இவளுக்கும் இரண்டு கைகளே. ஆயினும், வளைத்து வளைத்துப் பந்துகளை அடிப்பதை நோக்கினுல், பல கைகள் உள்ளவள் போல் இவள் காணப்படுகிருள். தேர்ச் சக்கரத்தைப் போலச் சுழன்று சுழன்று அன்ருே அடிக்கிருள், நடக்கிருள், ஓடுகிருள், ஒடிகிருள், துவளுகிருள்! பந்து எழ எழ, அதனுடன் எழுகிருள்! 'இவள் கை யெங்கே, கால் எங்கே, மெய் எங்கே, தெரிய வில்லையே' என்கிருர் சிலர். 'இவள் மண்ணில் இருக்கிருளா, விண்ணில் இருக்கிருளா' என்கிருர் சிலர். இது, 'மாயமா, மந்திரமா' என்கிருர் சிலர்.

இவர்கள் கண் பட்டதுபோலக் கூந்தல் குலைந்தது; மாலை சுழன்றது; மேகலை சுழன்றது; வியர்வை எழுந்தது; சாந்தம்

இழிந்தது. அப்பொழுதும் பந்தடித்தலை நிறுத்தவில்லை மான னீகை; ஆடையைத் திருத்திக் கொண்டு அடிக்கிறாள்; வியர்வை யைத் துடைத்துக் கொண்டு அடிக்கிறாள்; கண்ணை மூடிக்கொண்டு அடிக்கிறாள்; சக்கரத்தைப்போலச் சுழற்றிவிட்டு அடிக்கிறாள்; தோழியோடு பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் அடிக்கிறாள்; வாழ்த்திக் கொண்டு அடிக்கிறாள்.

இவள் இப்படியெல்லாம் எண்ணாயிரம் முறை தன்னுடைய கைகளால் அடித்தாள். எடுத்துக்கொண்ட பந்துகள் இருபத் தொன்று. மொத்தத்தில் இவள் அடித்த முறை எண்ணாயிரம். அடிக்கும்போது, கூத்தும், பாட்டும், தாளமுஞ் சேர்ந்தன. இது வியக்கத்தக்க செய்தி அன்றோ! இப்படிப் பந்தடிக்கின்ற வழக்கம் அக்காலத்துத் தமிழ் நாட்டில் உண்டு. ஆதலினாலே கொங்கு வேள் ஆகிய தமிழ்ப் புலவர் "பந்தடி கண்டது" என்று ஒரு தனிப் பகுதியைத் தாம் இயற்றிய பெருங் கதையிற் புகுத்தினார்.

பெருங்கதை, சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற தமிழ்க் காவியங்களைத் துணையாகக்கொண்டு தமிழ் நாட்டு மகளிர் பண்டைக் காலத்திற் பந்தாட்டம் போன்ற ஆடல்களை இயற்றி மகிழ்ந்ததையும், மகிழ்வித்ததையும் அறிந்து இன்புறலாம்.

அருஞ்சொற்பொருள்

பெருங்கதை - வத்தவநாட்டு அரசனான உதயணன் வரலாற்றைக் கூறும் காவியம்; இதனைச் செய்தவர் கொங்குவேளிர்; கி. பி 5-ஆம் நூற்றாண்டினர் என்னலாம்; நொய்மை - மென்மை; எற்றி - எறிந்து; குள்ளன் (ஆண்பால்), குள்ளி (பெண்பால்); மேகலை - மாதர் இடையில் அணியும் ஏழு அல்லது எட்டுக் கோவையுள்ள அணிவகை; ஆர்த்தது - ஒலித்தது; கலம் - நகை; எள்ளி - பரிகசித்து; பைய - மெல்ல; இயைந்தன - பொருந்தின; பரதநாட்டியம் - பரதர் என்ற முனிவர் எழுதிய நடனக்கலைநூல்; அவிநயம் - மனக்கருத்தைக் குறிப்பாய் விளக்கும் அங்கச்செய்கை; பாணி-ரீதி. (Style, Manner); விசும்பு - வானம். எழஎழ - அடுக்குத் தொடர்; காவியம் - ஒப்பற்ற தலைவனது வரலாற்றைக் கூறும் பெருநூல்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. பண்டைக்காலப் பந்துகளைப் பற்றிக் கொங்குவேள் யாது கூறி யுள்ளார்?
2. கூனி எவ்வாறு பந்தாடினாள்?

3. குள்ளி பந்தாடிய விவரத்தைக் கூறுக.

4. தனக்குமுன் பந்தடித்தவர்களை எள்ளி முன் வந்த 'வேருெருத்தி' எவ்வாறு பந்தடித்தாள் ?

5. மானனீகை பந்தடித்த திறத்தை விளக்கிக் கூறுக.

6. " இது வியக்கத்தக்க செய்தியன்றே !" இடம் சுட்டி விளக்குக.

7. பெண்கள் பந்தாட்டம் பற்றிக் கூறும் தமிழ்க் காவியங்கள் யாவை ?

II. 1. பிரித்துக்காட்டுக :— வெண்ணிறம் , செந்நிறம், கருநிறம், அவ் விருவர், பொன்னிறம், பெருங்கதை, இரண்டல்ல, சிலப்பதி காரம்.

2. வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :— வியக்கத்தக்க, அவிநயம், மேலும் கீழும், சொற்பொழிவு, நுண்மையாக, பல்வேறு வகை.

3. எதிர்ச் சொற்களைக் கூறுக :— அருமை, இமையாமல், அவிழ்ந்த, புறங்கை, குவிந்த.

4. ஆண்பாற் பெயர்களைக் கூறுக :— கூனி, குள்ளி, மனைவி, தோழி, ஒருத்தி, பெண்.

III. 1. பந்தாடுவதனுல் பெண்களுக்கு ஏற்படும் நன்மைகளைக் குறிப் பிட்டு 15 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

2. இக்கால வழக்கில் இருக்கும் பந்தாட்டங்களின் பெயர்களை எழுதுக.

3. இக்காலப் பெண்கள் விளையாடும் பல்வேறு விளையாட்டுக்களைக் குறிப்பிட்டு, அவற்றுல் அவர் எய்தும் நலன்களைக் குறிப்பிடுக.

IV. புது + பாய் = புதுப்பாய், புது + பானை = புதுப்பானை எனப் பண்புத் தொகையிலும் வல்லினம் மிகும்.

சாரை + பாம்பு = சாரைப் பாம்பு என்பது போன்ற இருபெய ரொட்டுப் பண்புத் தொகையிலும் வல்லினம் மிகும். பனை + தோள்- பனைத்தோள் என உவமைத் தொகையிலும், பேசா + பெண் = பேசாப்பெண் என ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்திலும் வல்லினம் மிகும்.

திரு + குறள் = திருக்குறள், அணு + குண்டு = அணுக்குண்டு, நடு + தோட்டம் = நடுத்தோட்டம், இரா + பகல் = இராப்பகல் என இவ்வாறு குறிலைச் சார்ந்து வரும் முற்றியலுகரம், குறிலைச் சார்ந்து வரும் ஆகாரம் முதலியவற்றின் முன் வல்லினம் மிகும்.

2. பயிர் வண்டும் படர் கொடியும்

பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, B.A., B.L.

[இப்பேராசிரியர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்; சொல்லின் செல்வர்; சிறந்த ஆராய்ச்சியாளர்; இனிய எளிய செந்தமிழ் நடை எழுதுவதில் இணையற்றவர்.]

"வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கை
கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ்செய் குற்றாலம்"

என்று பிள்ளைப் பெருமான் போற்றும் பெருமை வாய்ந்த திரிகூட மலையின் ஒருசார் ஓங்கி வளர்ந்த ஒரு வேங்கை மரம் விண்ணளாவி விளங்கிற்று. அதன் மருங்கே முளைத்தெழுந்த ஒரு மெல்லிய பூங்கொடி அவ்வேங்கையின் அழகிய கொம்புகளில் பின்னிப்படர்ந்து செழித்து வளர்வதாயிற்று. மஞ்சு தோய வளர்ந்து மாண்புற்று இலங்கிய வேங்கையின்மீது அவ்விளங் கொடி வரிவரியாய்ச் சுற்றி விளங்கிய கோலம் கண்டோர் கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கவரும் தன்மை வாய்ந்து விளங்கிற்று. அவ்வேங்கையின் பூங்கொம்புகளில் தீங்குயில்கள் மணந்து மகிழ்ந்தன. வண்டினங்கள் பண்ணமைந்த இசைபாடி மலர்களின் மதுவை மாந்திக் களித்தன.

"தீங்குயில் மணந்துதேன் துஞ்சவண்டு பாண்செய
வேங்கை நின்று பொன் உகுக்கும்"

என்று சிந்தாமணி ஆசிரியர் வியந்துரைத்த இயற்கை அழகு அளவிலா உவகையளித்தது.

அவ்வேங்கை மரத்தின் அடிப்புறத்தில் ஆழ்ந்து அகன்ற ஓர் ஆறு அணி பெறச் சென்றது. மலையிடைப் பிறந்து சவியுறத் தெளிந்து, ஆழ்ந்து அமைந்து ஆன்றோர் மனம்போல் அவ்யாறு அழகுற நடந்து சென்றது. அம்மலையில் வீசிய மெல்லிய இளங் காற்றில் வேங்கையின் பூங்கொம்புகள் அசைந்து பொன் மலர் சொரிந்தன. இளங்கொடி வேங்கையின் கிளைகளில் இனிதாய்த் துவண்டது. இளந்திரைகள், ஆற்றில் அலைந்து இன்புற்று இலங்கின. அப்போது சேய்மையில் ஒல்லென ஓர் ஒலி கிளம்பியது.

அதன் தன்மையை மனத்தாற் கருது முன்னரே கடுங்காற்று வேகமாய்ச் சுழன்று வீசத் தலைப்பட்டது. விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல் வீசிய புயல் காற்றின் வெம்மையால் மலைப் பொருள்கள் எல்லாம் மயங்கிச் சுழன்றன. அக்கடும் புயலின் வேகத்திற்கு ஆற்ருது மலையே நிலை குலைந்தது. வெறி கொண்ட புயலில் அகப்பட்ட வேங்கை மரம் வேரொடு அற்று அருகே சென்ற ஆற்றில் விழுந்தது. வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து பூத்துச் செழித்து விளங்கிய வேங்கை விழுவதைக் கண்ட எமது உள்ளம் வெதும்பியது. உலகப் பொருள்களின் நிலையாமையை நினைந்து நெஞ்சம் குழைந்தது.

இவ்வாறு வேங்கை சாய்ந்து வேகமாய்ச் செல்லும் ஆற்றில் விழுந்த போது, அதனைச் சுற்றிப் படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வேரற்று அம்மரத்தோடு சாய்ந்தது. மது உண்ண வந்திருந்த வண்டுகள் நிலையழிந்த வேங்கையை நீத்து ஆர்த்தெழுந்து அயல் நின்ற மற்ருேர் மலரில் சென்று சேர்ந்தன. இதனை நோக்கிய போது மதுவுண்டு மயங்கும் வண்டின் இழிகுணம் மனத்தை வாட்டி வருத்தியது.

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனில் பலராவர்—ஏலா
இடர்ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்றநாட ?
தொடர்புடையேம் என்பார் சிலர்"

என்னும் பெரியாரது மொழிகளின் பொருளைத் தெள்ளிதில் தெரிந்தோம். கெடுமிடத்துக் கைவிடும் கருவண்டு போலாது பெருந் துயர் நேர்ந்த போதும் பிரியாத பெருந்தன்மை வாய்ந்து திகழ்ந்த பூங்கொடி அருங்குல மங்கையர்போல் அமைந்து விளங்கிற்று. வேரூன்றி முளைத்த இடத்தினின்று படர்ந்து போந்து வேங்கையைப் பற்றித் தளிர்த்து வளர்ந்த கொடியின் தன்மை, மணப் பருவம் வாய்ந்த மங்கை பிறந்த மனையினின்றும் போந்து தலைமகனைச் சேர்ந்து வாழும் தகைமையில் அமைந்திருந்தது. பூங்கொடி படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பாய் அமைந்த பெருமை சால்வேங்கையின் தோற்றம், ஆண்மையும் பெருமையும் பொருந்தித் திகழும் தலைமகனது விழுமிய கோலம் போல் விளங்கிற்று.

அவ்வேங்கையில் நன்ருய்ப் படர்ந்த அதன் கிளைகளுக்குப் புதிய தோர் அழகளித்த கொடியின் கோலம், தலைமகனுடன் ஒன்றி வாழ்ந்து இல்வாழ்க்கைக்கு அழகளிக்கும் குலமங்கையின் குணத்தை விளக்கி நின்றது; இன்னும் வேங்கை துயர் உற்று ஆற்றில் விழும் நிலையில் அதனோடு தானும் வீழ்ந்து துயர் உற்ற கொடியின் தன்மை, தலைவன் துயருறும் போது தான் துயருறும் நிறை அமைந்த மங்கையின் மனப்பான்மையை விளக்கி நின்றது. இத்தகைய பெருமை, கற்பமைந்த மாதர் வாழ்க்கையில் கவின் பெற விளங்கக் காணலாம்.

தேனடைந்த சோலைத் திருநாடு துறந்து கானகம் செல்ல இசைந்த கமலக் கண்ணன், தலைமகளாகிய சீதையிடம் விடை பெறுமாறு அவள் மாளிகைக்குச் சென்ருன். அங்கு அறமே உருவாயமைந்த திருமகளைக் கண்டு, "மாதே! இணையற்ற என் தம்பி இந்நாட்டை அரசாள்வான். நான் தாய் தந்தையரது ஆணையைத் தலைமேற் கொண்டு வெளியே போந்து மலைவளங் கண்டு வருவேன். நான் வரும் அளவும் நீ வருந்தாதிரு" என்று மொழிந்தான். அம்மாற்றம் கேட்ட மங்கை நாயகன் வனம் நண்ணலுற்ருன் என்றேனும், நாடாளும் நற்பதத்தை இழந்தான் என்றேனும் வருந்தினள் அல்லள். ஆயினும் "நீவருந்தாதே; நான் உன்னை விட்டுப் பிரிவேன்" என்று நாயகன் உரைத்த சொல் நஞ்சுபோல் மங்கையின் நெஞ்சை நலிவுறச் செய்தது.

"நாய கன்வனம் நண்ணலுற் ருன்என்றும்
மேய மண்இழந் தான்என்றும் விம்மலள்
நீவருந் தலை நீங்குவன் யான்என்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்"

என்று கவியரசராகிய கம்பர் மங்கையின் மனப்பான்மையை மாண் புற விளக்கிப் போந்தார். இவ்வாறு மயங்கித் தளர்ந்த மங்கையை நோக்கி மன்னவன், "மாதே பஞ்சினும் மெல்லிய உன் கமல பாதம் வெம்மை நிறைந்த கானகத்தில் தோய்ந்து வருந்தும்; கதிரவன் கொடுமையால் கானக் கற்களெல்லாம் கனல் உமிழும்; அக்கொடிய சூடு உன்னுல் தாங்குதற் கரிதாகும்" என்று வனத் தின் வெம்மையை மங்கை அறியுமாறு எடுத்துரைத்தான். அப் போது மையறு மனத்தாளாய மங்கை, "ஐய நின் பிரிவினும்

சுடுமோ அப்பெருங்காடு" என்றும், "அத்துன்பத்திற்கு இணையாய துன்பம் வேறில்லை" என்றும் கூறினுள். தலைவனைப் பிரிவதே பெருந் துன்பம் என்று நிறை அமைந்த மாதர் கருதுவர் என்பதற்குச் சீதை ஒரு சிறந்த சான்ருய் அமைகின்ருள்.

இவ்வாறே கலியின் கொடுமையால் நாடும் வீடும் இழந்து, கல்லும் முள்ளும் நிறைந்த கானகம் நோக்கிச் சென்ற நளன் தன்னேடு போந்த தமயந்தியின் மென்மை நோக்கி மனம் நொந்து விதர்ப்ப நாட்டிற்குச் செல்லும் வழியைக் கண்டபோது, "மாதே உன் தந்தையின் ஊருக்குச் செல்லும் வழி இதுவே" என்று எடுத்துரைத்தான். அது கேட்ட மங்கை மனம் பொருது அழுது,

"ஆங்கது கேட்டலும் அழுது மாழ்கிநொந்து
சங்குநின் அடியனேன் பிழைத்தது யாதுகொல்!
பூங்கழற் குரிசிலோய்! பொறியி லேந்தனை
நீங்கவோ இவ்வுரை நிகழ்த்தினுய் என்ருள்"

என்று கவி கூறுமாறு தயங்கித் தலைவனைப் பிரியாது பின் தொடர்ந்து சென்ருள் என்று இனிது அறியப் படுகின்றது.

இன்னும் பெற்ருேர் சேர்த்து வைத்த பெருஞ்செல்வம் எல்லாம் பொது மாதிடம் இழந்து வறியனுய், மாடமதுரையில் மனையாளது மணிச்சிலம்பை விற்று வாணிகம் செய்யுமாறு புகார் நகரினின்றும் போந்த கோவலனைப் பிரியாது பின்னே சென்று, கடுகையார் கானகத்தில் கமலபாதமும் மெல்லிய மேனியும் தளர்ந்து வருந்த, அத்துயரைப் பொறுத்து, தலைவனது துயரைக் கண்டு தளர்ந்த கண்ணகியின் பெருமையை,

"கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்கு துயர்எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடி"

என்று சிலப்பதிகாரம் இனி தெடுத்துரைக்கின்றது. இவ்வாறு மண்மகளும் அறியாத வண்ணச் சீறடிகள் வருந்தக் கானகத்தில் நடந்து கணவன் துயர்களைந்த கண்ணகியின் பெருமையைக் கோவலன் கண்டு மனங்குழைந்தான்.

நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்து ஈங்குஎன் துயர்களைந்த
பொன்னே ! கொடியே ! புனைபூங் கோதாய் !

என்று புகழ்ந்து போற்றினன்.

இவ்வாறு கணவனைப் பிரியாத் பெருவாழ்வு வேண்டி இறைவனை வாழ்த்துவதே நிறை அமைந்த மாதர் நெறியாகும். இத்தகைய மாதர் கணவரோடு இன்பமும் துன்பமும் ஒருங்கே நுகர்ந்து, அவர் ஆவி துறப்பின் அந்நிலையே உயிர் நீப்பர் என்பதும் அறியப்படுகின்றது. நீரில் அமைந்து வாழும் நீலமலர் அந்நீர் வற்றியபோது அவ்விடத்தே வற்றி உலரும் தன்மைபோல், கற்பமைந்த மங்கையர் கணவன் வாழுங் காலத்து அவனுடன் இனிது வாழ்ந்து, அவன் அழியும் காலத்துத் தாமும் அகமகிழ்ந்து அழிவர். இத்தன்மை வாய்ந்த குலமாதர் நெறியைக் கொடியின் தன்மையோடு ஒப்பு நோக்கிக் கம்பர் அமைத்துள்ள கற்பனை, தேன் எனத் தித்திக்கும் தகையதாகும்.

“நிலமரங்கிய வேரோடு நேர் பறித்து
அலமலரும் துயர் எய்திய ஆயினும்
வலமரங்களை விட்டில மாசிலாக்
குலமடந்தையர் என்னக் கொடிகளே”

என்னும் கம்பர் கவியில் அமைந்துள்ள சொல்நயமும் பொருள் நயமும் ஆயுந்தோறும் அளவிறந்த இன்பம் பயப்பதாகும்.

* * * *

ஆகவே, அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல், இடருற்ற போது நீங்கும் வண்டனையாரோடு இணங்காது இணைபிரியா இயல்பு அமைந்த கொடியனைரைத் துணையாகக் கோடலே இருமையும் இன்பம் தருவதாகும் என்னும் உண்மை இனிதறியப்படும்.

அருஞ்சொற்பொருள்

வம்பு – நறுமணம்; சவி - அழகு; மருங்கு - பக்கம்; மஞ்சு - மேகம்; மாந்துதல் - அருந்துதல்; காலாடுபோழ்து - செல்வம் மிகுந்த பொழுது; கழிகிளைஞர் - மிகுந்த உறவினர்; ஈர்ங்குன்றம் - குளிர்ந்தமலை; தலைமகன்- கணவன்; கவின் – அழகு; மை – குற்றம்; சிறுமை + அடி = சீறடி. ஏத்து- புகழ்; அரங்குதல் - பொருந்துதல்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. ஆசிரியர் சோலையில் கண்ட காட்சியினை விவரிக்க.
2. மதுவுண்டு மயங்கும் வண்டும், மரத்தை விடாமற் பற்றிப் படர்ந் திருக்கும் பைங்கொடியும் நமக்குக் காட்டும் உண்மைகள் யாவை?
3. நங்கை சீதையின் மனத்தை நலிவுறுத்தியது யாது?

II. தமயந்தி, கண்ணகி – இவர்களின் உயர்பண்பினை விவரிக்க.

III. தீ + பிடித்தது = தீப்பிடித்தது, பூ + பறி = பூப்பறி, கை + துண்டு = கைத்துண்டு இவ்வாறு ஓரெழுத்தொரு மொழிகளுக்கு முன்னால் வல்லினம் மிகும்.

நன்றாய் + பாடினாள் = நன்றாய்ப் பாடினாள், போய் + பார் = போய்ப்பார், அன்றி + செய்யான் = அன்றிச் செய்யான், இன்றி + பேசான் = இன்றிப்பேசான், நன்றாக + பேசினான் = நன்றாகப் பேசினான், என + சொன்னான் = எனச்சொன்னான், பாட + கேட்டான் = பாடக்கேட்டான், தேடி + சென்றான் = தேடிச்சென்றான் இவ்வாறு, ஆய், போய், அன்றி, இன்றி, ஆக, என = என்னும் வினை எச்சங் களின் முன்னாலும், அகர ஈற்று வினை எச்சங்களின் முன்னாலும், இகர ஈற்று இறந்தகால வினை எச்சங்களின் முன்னாலும் வல்லினம் மிகும்.

3. சொற்பொழிவு

திரு. N. D. சுந்தர வடிவேல், M. A., L. T.

[இக்கட்டுரை யாசிரியர் தற்போது சென்னை மாநிலக் கல்வித்துறை இயக்குநராகப் பணியாற்றுகின்றார்.]

மாணவ மாணவியர்களே! உங்கள் பருவம் மீண்டும் கிடைக்காத பருவம்; பொன்போற் போற்றிப் பயன்படுத்தப்பட வேண்டும் பருவம். வாய்ப்போ, கிடைத்தற்கரிய வாய்ப்பு. தொடக்கப் பள்ளிக்கூடங்களே இல்லாத ஆயிரக் கணக்கான சிற்றூர்களும், படிக்க வாய்ப்பில்லாத பல இலட்சம் மக்களும் உள்ள இந்நாட்டில் உங்களுக்காவது ஏதோ படிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறதென்றால் அதை எளிதானதாகவோ, அலட்சியப் படுத்தக் கூடியதாகவோ கருதாதீர்கள்; இப்பருவத்தையும் வாய்ப்பையும் நன்றாக முழுதும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்; மாணவப் பருவத்தில் கற்க வேண்டுவதை எல்லாம் கற்றுக்கொள்ளுங்கள்; பெறவேண்டும் திறமைகளை எல்லாம் பெற்றுக்கொள்ளுங்கள்; தேடிக்கொள்ள வேண்டுவன எல்லாம் தேடிக்கொள்ளுங்கள்.

கல்வி கரையற்றது: கற்க வேண்டுபவை உங்கள் பாட நூல்களோடு முடிந்துவிட்டனவாக எண்ணாதீர்கள். கற்க வேண்டுபவைகளை அறிமுகப்படுத்துபவைகளே அவை. பாட நூல்களுக்கு அப்பால் பரீட்சைகளுக்குத் தொடர்பில்லாதவை பலவற்றை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்; படிப்பை முடித்தபின், அவைகளைக் கற்கலாம் என்றுமட்டும் காலந் தாழ்த்தாதீர்கள். அன்று குறைந்தால் ஆறு மாதங்கள்தான்.

வெறும் ஏட்டுப் படிப்புத் தகவல்களைத்தான் கொடுக்கும். அறிவொளியைத்தான் வீசும். அவற்றை வாழ்க்கையோடு இணைத்துப் பயன் பெறும் திறமையை நீங்கள் பெற முயல வேண்டும். வாழ்க்கைக்கு ஊக்கம், உறுதி, உழைப்பு, தன்னம்பிக்கை இன்றியமையாதவை. அவற்றை யெல்லாம் நீங்கள் இடைவிடாத பயிற்சியாற் பெறலாம்; அப்படிப் பெறத் தவற வேண்டா.

பிஞ்சிற் பழுக்க வேண்டா: இளம் பருவத்தே மயக்கக் கூடியவை பற்பல.

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

என்ற அறவுரையை மனத்திற் கொண்டு, கல்வியிலே உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள். கல்வியின் பகுதியாகத் தான் நீங்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றைப் பற்றிப் படித்துச் சிந்தித்துத் தெளிவு பெறவேண்டும். மாணவர் களாக இருக்கும்போதே, அரசியல் வாதிகளாகிவிட வேண்டா என்றுமட்டும் அறிவுறுத்த விரும்புகின்றேன். எதற்கும் கால முண்டு. காலம் வரும்போது கருத்தோடு செயலாற்ற ஆயத்தம் செய்துகொள்ள வேண்டுவதே மாணவர் கடமை. மாணவர்களாக இருக்கையிலேயே அரசியல் வாதிகளாவது, பிஞ்சில் பழுப்பதாகும். அப்பழத்தின் சுவையும் பயனும் எப்படி இருக்குமென்பது நீங்கள் அறியாததன்று.

உடலோம்பல்: உடலோம்பலின் இன்றியமையாமையை நான் அதிகம் வற்புறுத்தத் தேவையில்லை. அதன் தேவையையும், சிறப்பையும் நீங்கள் உணர்ந்திருந்தாலும், வசதிக் குறைவும், வேறு பொழுது போக்குக் கவர்ச்சிகளும் உடற் பயிற்சியை மறக்கச் செய்து வருகின்றன. இது பெருந்தீங்கு. "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்பது பொருள் நிறைந்த மொழி. உடல் வலிமை இல்லாதவன் எல்லா வலிமைகளும் பெற்றிருந்தாலும் தனக்கும் பிறருக்கும் முழுப்பயன் அற்றவனாகத்தான் இருக்க நேரிடும். எனவே, எப்படியும் ஒழுங்காக உடற்பயிற்சி செய்ய வழிவகை செய்து கொள்ளுங்கள்.

ஒப்புரவு:

" ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் "

என்ற பொய்யாமொழியையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்பு கிறேன். கல்வி, ஏட்டுப் படிப்பு அல்லது தொழிலறிவு ஆகிய வற்றை ஊட்டுவதோடு நிற்கக் கூடாது. அது நமக்குக் கட்டுப்

பாட்டையும் ஒழுங்கையும் கற்பிக்கவேண்டும். ஒழுக்கம் என்னும் போது வழக்கமாகக் கூறும் ஐம்பெருங் குற்றங்களை நீக்குவதை மட்டும் நான் குறிக்கவில்லை. மக்களோடு மக்கள் எப்படிப் பழகுவது, எங்கெங்கு எப்படி நடப்பது, பொது இடங்களில் எப்படி நடப்பது என்பவைகளையும் சேர்த்துத்தான் குறிக்கிறேன். கட்டுப்பாடும் ஒழுங்கும் அற்ற அறிவாளி, கூடிய இடமெல்லாம் புரண்டோடிக் கண்டதை யெல்லாம் பாழாக்கும் காட்டாறு போன்று தீமை பயப்பவன் ஆவான். எனவே, கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் இளமையிலேயே கற்றுக்கொள்க.

கற்றதனுல் ஆயபயன் : நல்ல உறுதியான உடலும் கூரிய மதியும் கட்டுப்பாடும் ஒழுங்கும் எதற்குப் பயன்பட வேண்டும்? யாருக்குப் பயன்பட வேண்டும்? ஆக்கத்திற்கா? அழிவிற்கா? தனக்கா? பிறருக்கா?

அணுவைப் பிளந்து ஆற்றல் மிக்க சக்தியைக் கண்ட மனித சமுதாயம், அச்சக்தியால் உலகம் என்று அழிக்கப்படுமோ என்று அஞ்சி அஞ்சி அல்ல லுறுகின்றதல்லவா? காரணம் என்ன? ஆக்க வேலைக்கு அவற்றைப் பயன்படுத்தத் தவறியதே. அறிவும் வலிவும் வளர்ந்த அளவு, மக்கள் உள்ளம் வளர்ந்தபாடில்லை. ஆகவே வலிமை எல்லாம், அறிவெல்லாம் இதுவரை ‘தான்’ என்கிற சிறையிலிருந்து வெளிப்படவில்லை. தன் பெண்டு, தன் பிள்ளை என்கிற தன்னலம், பொதுநலத்திற்கு ஊறுக நிற்கிறது. ‘தான்’ என்பதைக் குறைத்து, ‘நாம்’ என்பதைப் பெருக்கப் பெருக்கத்தான் நாம் மக்கள் நிலையை எய்துவோம். தனி உணர்ச்சி குறைந்து, சமூக உணர்ச்சி வளர வளரத்தான் நம் துன்பங்கள் தொலையும்.

மக்கட்பண்பு : பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் உள்ள குறள்,

“ அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் ”

என்று இடித்துரைப்பதை மறந்து விடாதீர்கள். கல்வியின் நோக்கம் மக்கட்பண்பைப் பெறுவதே. எது மக்கட்பண்பு என்று சிறிது சிந்திப்போம். மக்கட்பண்பாவது, பிறிதினேய் தந்நோய்

போல் நோக்குதலாகும். எனவே, மக்கள் துன்பத்தைத் தன் துன்பமாக எவன் கருதுகிருனே, அவனே கல்விமான். மற்ற வர்கள் எவ்வளவு அறிந்திருந்தாலும், எத்துணைப் பட்டங்கள் பெற்றிருந்தாலும் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் அவன் கல்விமான் ஆகமாட்டான். மக்கள் நிலையை அடையவே நாம் எல்லோரும் விரும்புவோம் என்பது உறுதி. எனவே, நம்மைச் சூழ்ந்துள்ளோர் அடைகிற துன்பங்கள் எவை எவை? அவற்றை நீக்க வழிகள் எவை எவை என்றும் கவனிப்போம்.

துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்: வறுமை, அதன் விளை வான பட்டினி, அறியாமை, அதன் விளைவான மூட நம்பிக்கைகள், மூடப்பழக்க வழக்கங்கள், சாதி ஏற்றத் தாழ்வு, அதன் விளைவான சாதிச் சண்டை, சமயவெறி, அதன் விளைவான சமயப் போராட் டங்கள், இவற்றின் விளைவான அமைதியின்மை - ஆகிய துன்பங்களை நாம் அநுபவித்து வருகிருேம். இத்துன்பங்களை நீக்க முடியுமா? இப்படியே விட்டுவைக்கலாமா? நீக்கமுடியும், நீக்க வேண்டும் என்பதே என் முடிவு. பிறநாடுகள் செய்து காட்டிய முடிவுமாகும்.

நல்குரவு: வறுமை சமூகத் தொத்து நோய். அதைப் போக்குவது சமூகத்தின் முதற்கடமை. அதனை எவ்வழியிற் போக்குவது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். உழைப்பைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்கினுல் எல்லாரும் வறுமையின்றி வாழலாம் என்பது உண்மையா? பெற்ற பொருள்களை இப்போ துள்ள முறைக்கு மாருக வினியோகிப்பதன் மூலம் வறுமையைப் போக்குவதா? என்ற கேள்விகளுக்குப் பதில் என்னிடத்திலிருந்து எதிர் பார்க்காதீர்கள். இரண்டில் எதைக் கொண்டாலும், இரண்டும் மறந்துவிட்ட மற்ருென்றை நான் நினைவூட்டக் கடமைப் பட்டுள்ளேன். அது எது? செலவு முறை; நம் மக்கள் செலவு முறையைக் குறிப்பிடுகிறேன். மயக்கத்திற்கோ, வீண் பெருமைக்கோ ஆனவற்றிற்கு நாம் ஏராளமான செல்வத்தைப் பாழாக்குகிருேம். அவற்றைத் தடுத்து வாழ்க்கையை நிரந்தரமாக நல்வழிப்படுத்தும் துறைகளுக்குப் பெரிதும் செலவிடக் கற்றுக் கொள்ள வேண்டும். அளவறிந்து செலவிடத் தெரியாத மக்களை எம்முறையும் காப்பாற்ருது என்பதை மறக்காதீர்கள்.

அறியாமை: தற்குறித்தன்மை நமக்குள்ள அடுத்த துன்பம். மக்கட் பெருக்கத்திற்குப் பெயர்போனதைப் போன்றே தற்குறித் தன்மைக்கும் நம் நாடு உலகறிந்ததாய் இருக்கிறது. அறியாமையின் விளைவான், நம்மிடையே உள்ள மூட நம்பிக்கைகளும் கண்மூடி வழக்கங்களும் எண்ணிறந்தன. நாம் முழு மக்கள் தன்மை அடைவதற்குக் குறுக்கே நிற்கும் இவற்றை யெல்லாம் விரைவில் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். மன்னர்களாகி விட்டவர்களை மண்ணுங்கட்டி நிலையில் விட்டுவைப்பது இழிவு மட்டுமன்று, பெருந் தீங்குமாகும். எனவே இத் தலைமுறையின் முழுக் கவனமும் முயற்சியும் 'எல்லோரும் கல்வி கற்றுப் பன்னரும் கலைஞானத்தால், பராக்கிரமத்தால் உன்னத இமமலை போல் கீர்த்தி எய்திடுவதற்கான பணிகளில் திருப்பப்பட வேண்டும். இதற்கான பொறுப்பையும், உழைப்பையும் நாட்டு அரசிற்குமட்டுமே விட்டுவிடாமல், பொதுமக்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும்; விரைவில் பகிர்ந்து கொண்டு வேகமாகப் பணிபுரிய வேண்டும். 'அப்படிப் பகிர்ந்துகொள்ள முடியுமா?' என்ற ஐயம் எழலாம். முடியுமென்பதில் எனக்கு ஐயமில்லை. இன்றும் நாட்டில் நடக்கும் தர்மங்களைப் பார்த்தவர்களுக்கு ஐயமிராது. நாட்டில் நடக்கும் அறங்களை யெல்லாம் கல்விக் கூடங்கள் மூலமாக நடக்கும்படி செய்வது நம்முடைய கடமை.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"

என்ற காலத்திற்கேற்ற நல்லுரையை எடுத்துக்காட்டி, கல்விப் பணிக்கான எல்லா உதவிகளையும் செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதி வேற்றுமை: சாதி உயர்வு தாழ்வு நம்மைப் பிடித்துள்ள மற்றொரு பெரு நோய்; தமிழர்கள் நல்ல நிலையில் இருந்த காலத்தே இல்லாத நோய்; இடையிலே பெற்ற நோய்; விரைவில் ஒழிக்கப்பட வேண்டும் நோய். உயர்வு தாழ்வு எங்கு இல்லை?

ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் உருவில் இருக்கிறது என்கிற முடக்குவாதம் நம்மை முன்னேற வொட்டாமல் தடுக்கும். அவ் வாதத்திற்குச் செவி கொடுத்தால் நீங்கள் மக்கள் தன்மையை எட்ட முடியாது.

"எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம், யாதும் ஊரே யாவரும் கேளிர்" "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற நல்லுரைகளை நாம் பல்லாண்டுகளாகப் பலப்பல மேடை களிலும் கேட்டுத்தான் வருகிறோம். இவற்றைத் தமிழனின் உயர்விற்கு எடுத்துக் காட்டாகப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றோம். ஆனால் நாம் உண்மையிலே சாதிகளை விட்டு மக்களாகும் பாதையிலே நடக்கிறோமா? தேர்தல்களில் ஆதரவு தேடும் முறையைக் கவனித்தாலே போதுமே, நம்மைவிட்டுச் சாதி வெறி போகவில்லை என்பதற்கு! காரணம் என்ன? சாதிகளை வைத்துக்கொண்டே சாதிப்பற்று வேண்டாமென்று கூறிக் கொண்டு பொழுது போக்கு வேலை செய்துகொண்டிருந்தோம். எனவே, இடமும் காலமும் கிடைத்தபோது சாதிவெறி முழு ஆட்டம் ஆடுகிறது. மக்கட் பண்பை மறைக்கும் சாதிப்பற்று ஒழியவேண்டுமென்றால், சாதிகள் இல்லாத நிலை ஏற்பட வேண்டாவா? அதற்கான வழியை இனித்தானா அறிந்து கொள்ளப் போகிறீர்கள்? அந்நிலை வெறும் விறுவிறுப்பான பேச்சால் கிட்டுமா? கூட்டத்திற் கூடி நின்று, கூடிப் பிதற்றி விட்டு, நாட்டத்திற் கொள்ளாவிட்டால் ஏற்படுமா? நெஞ்சில் உரத்தோடு நேர்மைத் திறனோடு எல்லாச் செயல்களிலும் சாதியை நீக்கினால் அல்லவா முடியும்? அந்த நேர்மையும் உரமும் உங்களிடம் எதிர் பார்ப்பது அதிகமா?

சமயவெறி: சமயப் பற்றும் சமய வெறியாக மாறி அடிக்கடி நம்மை அலைக்கழிக்கிறது. சமயம் மனிதனுடைய தனி விவகாரம். கூட்டு மொத்த வெளிச்சத்திற்காக அதைப் பொது விவகாரமாக்கிப் பகையை வளர்க்கும் வெறியாக மாற்றுவது நல்லதன்று. சமயம் மக்களை ஒழுங்குபடுத்திப் பண்படுத்தாமல் சண்டையை வளர்ப்பதா? சமயத்தின் மதிப்பு அதைப் பின்பற்றுபவர்களின் வேடத்தில் இல்லை, நடையில் இருக்கிறது என்பதை நினைந்து, அதற்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்.

முடிவுரை: உருவால் மக்களாய்ப் பிறந்த நாம் நிலையால் மக்களாகாமல் இருப்பதற்கான காரணங்கள் சிலவற்றை உங்களிடம் காட்டினேன். அவற்றைச் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதன் விளைவாக உங்களுக்குத் தெளிவு ஏற்படும் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. உங்கள் தெளிவில் பிறக்கும் நேரிய வழியில் நடக்க உரமும் உறுதியும் பெருக உங்களுக்குத் துணையாக நிற்கும்படி நாட்டின் நலத்தில் நாட்டமுடைய பெரியோர்களை வணக்கத்துடன் வேண்டிக்கொள்கிறேன்.

" கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக "

என்ற வள்ளுவரின் வழிகாட்டியை நினைவூட்டுவதோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

அருஞ்சொற்பொருள்

வாய்ப்பு - சந்தர்ப்பம்; கரையற்றது - எல்லையில்லாதது; அறிமுகப் படுத்துபவை - தெரிவிப்பவை; 'எப்பொருள் ..... அறிவு' - எப்பொருள் எத்தன்மையை உடையதாக இருப்பினும் அப்பொருளின் உண்மையை உணர்தலே அறிவாகும்; உடலோம்பல் - உடலைப் பாதுகாத்தல்; ஒப்புரவு - உலக நடையை அறிந்து ஒழுகல்; பொய்யாமொழி - திருக்குறள்; ஐம்பெருங் குற்றங்கள் - பொய், கொலை, களவு, கள், காமம்; ஆக்கவேலை ; நன்மை தரும் செயல்; இடித்துரைப்பதை - வற்புறுத்தி அறிவுரை கூறுவதை; பிறிதினேய் - மற்றொன்றின் துன்பம்; நல்குரவு - வறுமை; தற்குறித்தன்மை - எழுதப் படிக்கத் தெரியாமல் கையெழுத்துக்குப் பதில் பெரு விரல் அடையாளத்தை இடும் அறிவில்லாத்தன்மை; பன்னரும் - சொல்லுதற்கு அரிய; கலைஞானம் - கலையறிவு; பராக்கிரமம் - வீரம்; உன்னத-உயர்ந்த; கீர்த்தி - புகழ்; 'அன்ன சத்திரம்......எழுத்தறிவித்தல்' - எளியவர்க்கு உணவிடும் அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுதல், பதினயிரம் கோவில்களைக் கட்டுதல், மற்றுமுள்ள தருமங்கள் எல்லாம் தம் பெயர் சிறந்து விளங்குமாறு நடத்துதல் ஆகிய எல்லாவற்றினும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம் உடையதாகும்; கேளிர் - சுற்றத்தார்; உரம் - வலிமை; அலைக்கழிக்கிறது - துன்புறுத்துகிறது; நாட்டம் - எண்ணம்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. தற்கால மாணவர்களைப் பற்றி ஆசிரியர் கூறுவது யாது ?
2. மாணவர்கள் எத்தகைய கல்வி கற்க வேண்டும் ?

3. மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது குறித்துத் திரு. சுந்தர வடிவேல் கூறுவது யாது?
4. மாணவர்கட்கு உடற்பயிற்சியின் இன்றியமையாமையை விளக்குக.
5. மாணவர்கட்குக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் ஆசிரியர் எங்ஙனம் வற்புறுத்துகிருர்?
6. மக்கள் நிலை உயரவும், துன்பங்கள் குறையவும் வழி என்ன?
7. மக்கட் பண்பாவது யாது? அப்பண்பிலாதவர் எத்தகையவர்?
8. நாட்டில் அமைதியின்மைக்குக் காரணம் என்ன?
9. சமூகத் தொற்று நோய் என்று கூறப்படுவது யாது? அதனைப் போக்கும் முறைகள் யாவை? அதற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?
10. நம் நாட்டின் தற்குறித் தன்மையைப் பற்றி ஆசிரியர் கூறுவது யாது?

II. 1. சாதி வேற்றுமையின் கொடுமையையும் அதனைக் களைய வேண்டியதன் இன்றியமையாமையையும் விளக்குக.
2. சமய வெறி குறித்து ஆசிரியர் கூறுவதை விளக்கி எழுதுக.
3. உருவால் மக்களாய்ப் பிறந்த நாம் தன்மையால் மக்களாகாமல் இருப்பதற்கான காரணங்களை விளக்குக.

III. மாணவர் எப்படிப் பழக வேண்டும்? - எப்படி + பழக - எப்படிப் பழக என்ருயிற்று.

அப்படி + பழகு = அப்படிப் பழகு
இப்படி + சொல் = இப்படிச் சொல்
எப்படி + கூறினன் = எப்படிக் கூறினன்.

இவ்வாறு அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் முன் வல்லினம் மிகும்.

ஆனல் போகும்படி, கூறும்படி, ஓடும்படி, எடுக்கும்படி என, படி என்னும் சொல் வினைச் சொல்லோடு சேர்ந்து வந்தால் வல்லினம் மிகாது என்பதை நினைவில் வை. அதாவது போகும்படி + சொன்னன் = போகும் படி சொன்னன் என்றுதான் எழுத வேண்டும். போகும்படிச் சொன்னன் என்று எழுதுவது தவறு.

அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்கள் வருமொழி முன் வல்லினம் வர மிகுவதுபோல், அவ்வகை, இவ்வகை, எவ்வகை, அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு, மற்ற, மற்று, மற்றை முதலிய சொற்களின் முன்னும் வல்லினம் மிகும்.

4. நாகரிகம்

பண்டித - புலவ - வித்துவ - ஞா. தேவநேயப் பாவாணர், M.A.

இக்கட்டுரை யாசிரியர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் மொழி யாராய்ச்சித் துறையில் பணியாற்றி வருகின்ருர். சிறந்த மொழியாராய்ச்சி யாளர்.

நாகரிகம் என்னும் சொல் நகரம் என்னும் சொல்லினின்று பிறந்தது. நகரகம் என்பது முறையே நகரிகம், நாகரிகம் எனத் திரிந்தது. ஆங்கிலத்திலும் நாகரிகம் பற்றிய வினை நகரப் பெயரினின்று பிறந்ததே.

நாகரிகம் என்னுஞ் சொல் நாகர் என்னும் பெயரினின்று பிறந்ததென்றும், நாகரென்பார் பண்டைக் காலத்தில் நாகரிகத்தில் சிறந்திருந்தனரென்றும் ' ஆயிரத் தொண்ணூருட்டை முற்றமிழர் ' என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது. நாகர் என்பவர் பண்டைக் காலத்தில் நாக நாடெனப்பட்ட கீழ்த்திசை நாடுகளில் வாழ்ந்து வந்த ஒரு மக்கள் வகுப்பார். நாகருடைய நாடு, நாக நாடு. நாகரில் நாகரிகரும், அநாகரிகருமென இரு வகுப்பார் இருந்துள்ள மையும், அவருள் நாகரிகரும் எவ்விதத்தும் தமிழரினும் உயர்ந்தவ ரல்லர் என்பதும் மணிமேகலையிலிருந்தறியப்படும். ஆதலால் நாகரிகம் என்னும் சொல் நாகர் என்னும் பெயரடிப் பிறந்ததன்று.

நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை எனப் பொருள்படும். திருந்திய வாழ்க்கை உலகத்தில் முதன் முதல் நகரத்தில் தோன்றி யமையின் நாகரிகமெனப்பட்டது. இக்காலத்தும் நாகரிக மில்லாதவனைப் பட்டிக்காட்டானென்றும், நாட்டுப் புறத்தா னென்றும் பகுத்தல் காண்க. நகரமல்லாதது நாடும், பட்டியும். நாகரிகம் என்னும் சொல்லைத் திருவள்ளுவர்,

> " பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர் "

என்னும் குறளில் கண்ணேட்டம் என்னும் பொருளில் வழங்கி யுள்ளார். இது பரிமேலழகர் உரையால் விளங்கும். கம்பரும் இச்சொல்லை இதே பொருளில் ஆண்டுள்ளார். கண்ணேட்டம் திருந்திய குணங்களில் ஒன்ருதலின் நாகரிகம் எனப்பட்டதென்க.

நாகரிகம் என்பது அறிவும் அதன் வழிப்பட்ட ஒழுக்கமுஞ் சேர்ந்து திருந்திய வாழ்க்கையாகும். ஒழுக்கமின்றி அறிவு மட்டு மிருப்பின், அது நாகரிகமாகாது; அநாகரிகத்தின் பாற்படுவதே யாகும். ஒழுக்கமில்லாத கற்ருேன், கற்ற மூடன் என இழித்திடவே படுவான். அறிவென்பது ஒழுக்கத்திற்குக் காரணமாகிய, இயற்கை யும் செயற்கையுமாகிய இரு வகையாயிருப்பது. இவற்றுள் இயற்கை யாவது குடிப்பிறப்பாலும் தெய்வத்தாலும் அமைவது. செயற்கை யாவது கல்வியாலும் நல்லினத்தாலும் உண்டாவது. ஒழுக்க மென்பது அகம்புறமென்னும் இருவகைத் தூய்மை. அவற்றுள் அகத்தூய்மையாவது—மனம், வாய், மெய் என்னும் முக்கரணங்-களும் தூயவாயிருத்தல். புறத்தூய்மையாவது உடம்பு, உடை, உணவு, காற்று, உறையுள் முதலியன தூயவாயிருத்தல்.

பரிமேலழகர் திருக்குறளுரைப் பாயிரத்தில் ஒழுக்கத்தைப் பற்றி, 'ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்' என்று கூறியுள்ளார். இஃது எல்லார்க்கும் பொதுவான உயர்தர வொழுக்கமன்று. இதை இவ்வுரை யாசிரியரே மீண்டும் "இதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மை யாகிய அச் சிறப்பியல்புக ளொழித்து, எல்லாவுயிர்க்கு மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறந் துறவற மென இருவகை நிலையாற் கூறப்பட்டது" என்று நூலாசிரியர் கருத்திற் கேற்பக் குறித்துள்ளார். ஆதலால் ஒழுக்கமென்பது எல்லார்க்கும் பொதுவான முக்கரணத் தூய்மையே யன்றிக் குலந்தோறும் வேறுபட்ட வருணச்சிரம தருமமன்று.

இல்லறத்தில் அகத் தூய்மையும் புறத்தூய்மையும் ஒரு நிகரவா யெண்ணப்படும்; துறவறத்தில் அகத்தூய்மை புறத் தூய்மையினும் பன்மடங்கு சிறந்ததா யெண்ணப்படும்.

ஒருவன் எத்துணை எளியவனுயிருப்பினும், தன்னையும் தன் பொருள்களையும், உள்ளும் புறமும் தூயவாய் வைத்துக் கொள்வதே நாகரிகமாகும். கந்தையானுலும் கசக்கிக் கட்டுவதும், கூழானுலும் குளித்துக் குடிப்பதும், குடிலானுலும் கூட்டிக் குடி யிருப்பதும் உயர்தர நாகரிகமே. அழகியனவும் விலையுயர்ந்தனவு

மான உடைகளால் உடம்பைப் பொதிவதும், விலையும் சுவையுமிக்க உண்டிகளைப் பன்முறை யுண்பதும், மேனிலையும் அகலிடமுமுள்ள மாளிகையில் வாழ்வதும், வசதியும் விலை யுயர்ந்தனவுமான ஊர்திகளிற் செல்வதும், இயந்திரத்தாலும் ஏவலாளராலும் வினை செய்வதும், இன்னும் இவை போன்ற பிறவும், அறிஞரும் அறிவிலிகளுமான செல்வர்க்கே யுரிய ஆடம்பர வாழ்க்கை யன்றி நாகரிக வொழுக்கமாகா. இவற்றை நாகரிகமென் றெண்ணுவது மேலைப் புது நாகரிகம் பற்றிய திரிபுணர்ச்சியாகும்.

மேலைக் கல்வி கற்று மேனாட்டுடை யணிபவரெல்லாம் நாகரிகத்திற் சிறந்தவரென் றெண்ணுவதும் அறியாமையே. கல்வி எம் மொழியினு மிருக்கலாம். உடை, தட்ப வெப்ப நிலை பற்றித் தேசந் தோறும் வேறுபடுவதாகும். நாகரிகத்திற்கு இன்றி யமையாத வேளாண்மை (பிறரை யுபசரித்தல்), விருந்தோம்பல், தாழ்மை முதலிய சிறந்த குணங்களை, மேலை நாகரிக மறியாத நாட்டு மக்களிடையே மிகுதியாய்க் காண்கிறோம்.

ஆகையால் நாகரிக மென்பது, செல்வர் வறிஞர் என்னும் இரு சாரார்க்கும் பொதுவான துப்புரவும் ஒழுக்கமும் பற்றியதே யன்றி, செல்வர்க்கும் மேலை யொழுக்கத்தார்க்குமே உரிய பொருள் அழகும், பெருஞ் செலவும் பற்றிய தன்று.

திருந்திய உழவு, நுண்கைத் தொழில், நீர்வணிகம், போக்கு வரவுக் குரிய வாயில் வசதி, ஓவிய உணர்ச்சி, மொழி வளர்ச்சி, கலைப் பெருக்கம், திருந்திய அரசு, குலப்பிரி வின்மை முதலியன நாகரிகத்தின் சிறந்த அடையாளங்களாம்.

மக்களை மற்ற வுயிர்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது நாகரிகமே யாதலின், தம்மை உயர்திணை யென்று கூறிக்கொள்வா ரெல்லாம் நாகரிக முடையவராயிருத்தல் இன்றியமையாததாகும்.

அருஞ்சொற்பொருள்

ஆட்டை - ஆண்டு; உறையுள் - இருப்பிடம்; பாயிரம் - முன்னுரை; வருணம் - மரபு; முக்கரணம் - மெய், வாய், மனம்; வருணச்சிரம தருமம் - மரபுக்கேற்ற ஒழுக்கம்; நிகரவாய் - தன்மையாக; குடில் - குடிசை; பொதிதல் - மூடுதல்; மேனிலை - மேல் மெத்தை; திரிபுணர்ச்சி - மாறு பட்ட உணர்ச்சி.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. நாகரிகம் என்ற சொல் பிறந்த வரலாற்றை ஆராய்க.
2. வள்ளுவரும், கம்பரும் நாகரிகம் என்ற சொல்லை எப்பொருளில் வழங்கியுள்ளனர்? ஏன்?
3. வாழ்க்கை என்பது யாது? விளக்குக.
4. ஒழுக்கம் என்பதற்குப் பரிமேலழகர் கண்ட பொருள் என்ன?
5. நாகரிகம் என்பது யாது? விவரிக்க.
6. நாகரிகத்திற்கு இன்றியமையாத குணங்கள் யாவை?
7. நாகரிகத்தின் சிறந்த அடையாளங்களைக் குறிப்பிடுக.

II. நாகரிகம், நல்லொழுக்கம், உயர்ந்தவர், இயற்கை, அகம், சிறு பான்மை, இல்லறம், வறியவன், அறிஞர், தட்பம், உயர்திணை - இச் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் எழுதுக.

III. 'தமிழர் நாகரிகம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

IV. 1. நாகரிகம் என்னும் சொல் எப்பொருளில் வழங்கப்பட்டது :—

எ + பொருள் = எப்பொருள் என்றாயிற்று.

அ + பொருள் = அப்பொருள்
இ + குடில் = இக்குடில்
எ + சமயம் = எச்சமயம்.

இவ்வாறு, அ, இ முதலிய சுட்டெழுத்துக்களின் முன்னும் வினா எழுத்தாகிய எ முன்னும் வல்லினம் வந்தால் மிகும்.

இதே போல, அந்த + பொருள் = அந்தப் பொருள்
இந்த + குடில் = இந்தக் குடில்
எந்த + சமயம் = எந்தச் சமயம்

என அந்த, இந்த என்னும் சுட்டிடைச் சொற்களின் முன்னாலும், எந்த எனும் வினா விடைச் சொல்லின் முன்னாலும் வல்லினம் மிகும்.

5. நம் பண்டைய நீதிநூல் ஆசிரியர்கள்

பண்டித மணி மு. கதிரேசன் செட்டியார்

[இவ்வாசிரியர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராயிருந்தவர். வடமொழியிலும் வல்லவர். சிறந்த நூலாசிரியர்.

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வண்ணம் நம் பெரியோர் நமக்கு உதவிய நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் பற்றியனவேயாம். இவ் வெல்லாம் நீதியின்பால் அமைவன வெனினும், இவற்றுள் பொருட்பகுதியைப் பற்றி யெழுந்த நூல்களையே 'நீதிநூல்' எனப் பெரி யோர் வழங்குவர். அப்பொருட்பகுதியை மாத்திரம் சிறப்பாக எடுத்துக் கூறிய ஆசிரியரும் உளர். அதனெடு அறம் முதலிய ஏனைய உறுதிப் பயன்களையும் இயைத்துக் கூறிய ஆசிரியர்களே பெரும் பான்மையோராவர். இம்முறையில் தமிழிற் சிறந்த நீதி களை வழங்கிய வண்மையிற் சிறந்த பெரியோர் திருவள்ளுவரே யாவர். அவர்க்கு முன்னும் பின்னும் நீதி நூலருளிய ஆசிரியர்கள் வடமொழியிலும் தமிழிலும் பலரிருந்தனர். எனினும், அன்னர் புகழொளி யெல்லாம் வானத்து விளங்கும் மீன்களாக, வள்ளுவர் கீர்த்தி அப்பன் மீன் நடுவண் பான்மதி போலத் திகழ்வதாகும். "எல்லாப் பொருளும் இதன் பாலுள: இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்றபடி உள்ளுநர் உள்ளும் பொரு ளெல்லாம் வள்ளுவர் வாய் மொழியிற் காணப்படுவனவேயாம். தம் தெள்ளிய கல்வியானும், ஒள்ளியமதி நுட்பத்தானும் உல கியலையும் மக்கள் ஒழுக்கங்களையும் அழுந்தி யறிந்து, உள்ளத்தமைத்துத் 'திருக்குறள்' என்னும் நீதிக் களஞ்சியத்தை உலக முள்ளளவும் நிலைபெற யாத்துதவிய பெருமையே அப் பொய்யிற் புலவர் புகழொளி விஞ்சுதற்கு ஏதுவாயிற்று.

திருவள்ளுவர் எழுதிய நூல் ஒழுங்கிற்கும், ஏனையோர் நூன் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் பலவாம்: தாம் கூற மேற் கொண்ட பொருளை நன்ருக ஆராய்ந்து இவ்வாறு தெளிவுபடுத்த வேண்டுமென்று உள்ளத் தமைத்துப் பின்னர்ச் செய்யுள் வடிவில் இவர் வெளியிட்டுள்ளார். பெரும்பான்மையும் மேற்கொண்ட பொருளின் இலக்கணம், அதன் சிறப்பு, அதனுலாம் பயன்,

அஃதில் வழி வருந் தீங்கு என்று இன்னோரன்ன பாகுபாடுகளை வரையறுத்துக் கொண்டு கூறுதல் இவர் இயல்பு. எப்பொருட்கும் வரையறையும் தெளிவும் இன்றியமையாதன. வரையறுத்துத் தெளிவு படுத்தப்படாத பொருள்கள் மக்கள் உளங் கோடற்கு ஏற்றனவாகா என்பது பெரியார் துணிபு.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்கு, வடமொழி தென் மொழிகளிலுள்ள பற்பல நீதிநூல்களையும் நன்கு கற்று ஆராய்ந்த பரிமேலழகர் என்னும் புலவர் பெருமான் இயற்றிய உரையே எல்லா உரைகளினும் சிறந்ததாகப் போற்றப்படுவது. அவ்வுரையாளர் ஓரிடத்து, "தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ, வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்" என்று எழுதி யிருத்தலால், வடமொழியிற் புகழ் மிக்கவர்களான வியாழ, வெள்ளி களின் நூற்கருத்துக்கள் நம் வள்ளுவர் வாய் மொழியிற் புலப்படு கின்றன வென்பது பரிமேலழகர் கருத்தாம். ஒரு நாட்டினர் வழக்க ஒழுக்கங்களை உணர்ந்து, அவற்றிற்கேற்ப நீதிகளை வரையறுக்கும் ஆசிரியர்கள், கால இடையறவால் சேய்மைக் கண் உள்ளா ரெனினும், பொருள் ஒற்றுமைக் கருத்தால் அண்மையில் உள்ளவ ராகவே கருதப்படுவர்.

வடமொழியில் மனு முதலிய நூல்களில் அறம் பொருள் இன்பங்கள் விரவக் கூறப்பட்டுள்ளன. பொருட்பகுதியாகிய அர சியல் முறையைத் தனிமையில் விளக்க எழுந்த நூல்களுள், பிருகற் பதியாகிய வியாழ குருவால் தேவர்கள் பொருட்டு இயற்றப்பட்ட பாருகற் பத்தியமும், உசனஸ் என்னும் சுக்கிராச்சாரியரால் அசுரர் பொருட்டு இயற்றப்பட்ட ஔசநசமும் முதலில் நினைக்கத்தக்கன வாம். இவற்றின் பின் எழுந்தன சந்திரகுப்தன் காலத்து அமைச்சராக இருந்த சாணக்கியரால் ஆக்கப்பட்ட கௌடலிய மும், காமந்தகனால் இயற்றப்பட்ட காமந்தக முதலியனவும் ஆம்; இவற்றுள் இக்காலத்துச் சட்ட நூல் வல்லோராற் பெரிதும் தழு வப்பட்டு வருவது கௌடலியம் என்னும் நூலேயாம். வியாழனால் ஆக்கப்பட்ட நூலினும் வெள்ளியாகிய சுக்கிரரால் ஆக்கப் பட்ட நூல் தென்னாட்டு வழக்க ஒழுக்கங்களுக்குப் பெரிதும் இயைபுடையதாகும். இவற்றின் பின்தோன்றிய கௌடலிய நூலின்

தொடக்கத்தில் அதன் ஆசிரியர் பூர்வாசார்ய வணக்கமாகச் "சுக்கிர பிருகஸ்பதிப்யாம் நம" (சுக்கிரற்கும், பிருகற்பதிக்கும் வணக்கம்) என்று கூறியுள்ளார். இதனலேயே வெள்ளி நூலின் விழுப்பம் புலப்படுவதாகும். பிற்காலத்துக் கவிஞர் பெருமானுகிய கம்பர், "வெள்ளியும் பொன்னும் என்பார் விதிமுறை வகுத்த நூலில்" என்று முறைப்படுத்திக் கூறியதும் இதனை வலியுறுத்தும். இங்ஙனம் சிறந்துள்ள ஔசநசத்தின் சுருக்கமே "சுக்கிரநீதி'. யென்னும் பொருள் நூலாகும்.

இச்சுக்கிர நீதியைத் தமிழ் மக்கள் நலங் குறித்து மொழி பெயர்த்த பொழுது யான் கண்ட புதுமைகளும் பழமைக்குரிய சான்றுகளும் பலவாம்: 'புதல்வர்ப் பேற்றை விரும்பும் பெண் மக்கள் வயிரமணியை அணிதலாகாது' என்று கூறப்பட்டுள்ளது. கருவைத் தடைப்படுத்தற்கு வைரவொளி எங்ஙனம் காரணமாகும் என்பதைக் கலவை (இரசாயன) நூலார் ஆராய்தல் வேண்டும். இது போன்றன புதியனவாம். நீர்ப்பொறி, இசைப்பொறி, காற் றியக்கும் பொறி, கம்பிவழிச் செய்தியனுப்புங் கருவி, நீராவியால் இயக்கப் படும் பொறிகள் முதலியவைபற்றியும் இக்காலத்துக் காணப்படும் இயந்திரத் தொழில்களைப் பற்றியும் அந்நூல் கூறி யுள்ளது. ஆனல் இவற்றின் அமைப்பு முறைகள் வேறுபட்டிருக்க லாம். போர்த்தொழில் முறைகளும், போர்க்கருவிகளும், பொறி வழி யாக ஆயுதங்களைச் செலுத்தும் முறையும், வெடிமருந்து செய்யும் முறையும், படைகளின் அணி வகுப்புக்களும் பிறவும் செவ்வகை யாகக் கூறப்பட்டுள்ளன. மக்கள் இயங்குஞ் சாலை (Road) ஆமை முதுகுபோல் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆமை முதுகு இருமருங்கும் தாழ்ந்து நடுவிடம் சிறிது உயர்ந் திருக்கும். இது சாலை வழியிற் பெய்யும் மழை நீரால் அச்சாலை கெடாமலிருப்பதற்குக் கருதப்பட்டதாகும். மேலும், இந் நூலின் கண் அரசனியல்பு, அவன் சுற்றங்களாகிய அமைச்சர் முதலியோ ரியல்பு, வினை செய்யும் ஏவலரியல்பு, கிராம பரிபாலனம், வாணிக முறை, நியாய மன்றங்கள், நீதிபதிகளின் அதிகாரங்கள், வழக்கின் இயல்புகள் முதலிய விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

கரிகாற் சோழ அரசனைக் குடிமக்களுள் ஒருவனுகச் சிலப்பதி காரம் கூறும். இதனல் அரசன் குடிமக்களின் உயர்ந்தவனுகத்

தன்னை எண்ணலாகாது என்பது புலனாகும். செங்கோன்மை தவறாது செலுத்தும் நல்லரசற்கு அரசியற் காரியம் தன்னலங் குறித்ததாகாது; குடிமக்கள் நலங் குறித்ததேயாம். இங்கே, கோவலனைக் குற்றமில் வழியும் கொலை புரிவித்த பாண்டியனைக் கண்ணகியார் வெகுள, அது காரணமாகப் பாண்டியன் உயிரிழந் தான் என்று தண்டமிழ்ப் புலவர் சாத்தனார் செங்குட்டுவற்குக் கூறினாராக, அது கேட்ட செங்குட்டுவன், பாண்டியன் தவறின் மையையும் அரசியல் நடாத்தும் சிரமத்தையும் சாத்தனார்க்குக் கூறுமுகமாக,

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பமல்லது தொழுதக வில்லென"

என்று இளங்கோவடிகள் கூறியது நினைந்தின்புறத்தக்கது. "அரசன் குடிகளிடத்தினின்று தனக்குரிய அரசிறையாகிய வேதனத்தைப் பெறுதலால் அக்குடிகளுக்கு ஏவலாளர் தன்மை யுடையவனாவான்" எனவும், "பூமரத்தை வளர்த்து மலர் பறித்து மாலை கட்டிப் பயன் பெறுபவனை யொப்பக் குடிகளைப் பாதுகாத்து அவர்பால் அரசிறை பெற வேண்டும்" எனவும், "அங்ஙனமின்றி அம்மரத்தை எரித்துக் கரி செய்து பயன் பெறுதல் போலக் குடி களைக் கெடுத்துச் சிறு பயன் கொள்ளலாகாது" எனவும் சுக்கிர நீதி கூறுகின்றது. இச் செய்திகள் மிகவும் பாராட்டற்குரியனவாம்.

திருக்குறட் பொருட்பகுதியில் அரசர், அமைச்சர், படைத் தலைவர் முதலியோரின் இலக்கணங்களாகக் கூறப்பட்டனவும் பிறவும் யாண்டும் காண்டற்கரியனவாம். ஒற்றர் இயல்பு கூறுங் கால், ஒற்றும் நீதிநூலும் ஆகிய இரண்டும் அரசர்க்கு இரு கண் களாகும் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் இலக்கணங் கூறுங் கால், ஒரு நாட்டில் வாழ்வார் தேடி வருந்தாமல் வேண்டுவன வெல்லாம் ஆங்கே பெறத் தக்கதாக இருத்தல் வேண்டும் என் னும் கருத்தமைய "நாடென்ப நாடா வளத்தன" என்கிறார். பிணியின்மையும், நிரம்பிய செல்வமும், விளைவும், இன்பமும், காவலும் ஆகிய இவ்வைந்தும் நாட்டிற்கு அழகு செய்வன

வெனவும் கூறப்பட்டுள்ளன. இதனுல் அரசன் தன் நாட்டை இத் தகுதிகளுக்கு உரியதாக அமைத்துக் கொள்ளல் வேண்டுமென்பது புலனுகும். அமைச்சரியல்பு கூறுங்கால், வினைத்தூய்மை, வினைத் திட்பம், வினை செயல்வகை என மூன்றதிகாரங்கள் காணப்படு கின்றன. இவற்றை ஊன்றிப் படிப்பார்க்குத்தாம் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றிய தெளிவு கல்லெழுத்துப் போல நெஞ்சிற் பதிவதாம். திருக்குறளே யல்லாமல் நாலடியார், நான்மணிக் கடிகை, திரிகடுகம், சிறுபஞ்ச மூலம் முதலிய சங்க மருவிய நீதி நூல்களும் தமிழிற் பல உள. அவையெல்லாம் மக்கள் ஒழுக்க முறைகளை வரையறுத்துத் தெளிவு படுத்துவனவாம்.

நாலடியார் என்னும் நூல், கற்பார் மனத்தைக் கவரவல்லது. "ஆலும் வேலும் பல்லிற்குறுதி, நாலு மிரண்டுஞ் சொல்லிற் குறுதி" என்னும் பழமொழியில், நாலென்பது நாலடியாரையும், இரண்டு என்பது ஈரடியா னமைந்த திருக்குறளையுங் குறிப்பன வாம். ஒருவன் சிற்சில செயல்களிற் செவிடனுய்க் குருடனுய் ஊமையாய் இருத்தல் வேண்டுமென நாலடி கூறுகின்றது. இம் முறை வியக்கத்தக்கது. இதன் கருத்து, பிறர் இரகசியங்களைக் கேட்பதில் செவிடனுகவும், பிறர் மனைவியரைக் காம நோக்க மாகக் காண்பதிற் குருடனுகவும், பிறரைப் பற்றிக் காணுவிடத்துப் புறங்கூறுவதில் ஊமையாகவும் இருத்தல் வேண்டும் என்பதாம். இங்ஙனம் சாதுரியமாகக் கூறுமியல்பை இந்நூலில் பல விடங் களிற் காணலாம். ஒருவன் மற்ருெருவன் பால் இல்லாத குணங் களைப் புகழ்தலினும் அவனை வைதல் நல்ல தென்ருர். கடையா யர், இடையாயர், தலையாயர் ஆகிய இம் முத்திறத்தாரும் அஞ்சு தற்குரியன யாவை என்னும் வினவை எழுப்பி விடையிறுக்கு முகமாக முறையே கடையாயர் பசிக்கு அஞ்சுவ ரெனவும், இடை யாயர் துன்பத்திற்கு அஞ்சுவர் எனவும், தலையாயர் பழிச் சொல்லிற்கு அஞ்சுவர் எனவும் கூறுகிருர். குலப்பெருமை பேசுவார்க்கு, "நல்ல குலமென்றும் தீய குலமென்றும் சொல்லள வல்லாற் பொருளில்லை" என்றும், "தவங்கல்வி ஆள்வினை என்றி வற்ருன் ஆகுங்குலம்" என்றுங் கூறுவர். இன்னேரன்ன சிறந்த நீதி மணிகள் பல ஒளி செய்தலை இந் நூலாகிய பொற்பேழையில் பரக்கக் காணலாம்.

பிற்காலத்து ஔவைப் பிராட்டியார் அருளிய ஆத்திசூடி, வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதி நூல்கள் சிறுவரும் உணர்ந்து இன்புறத்தக்க நிலையில் அமைந்து பேரறிவாளர்க்கும் விருந்தாக விளங்குவன. "இயல்வது கரவேல்" என்னும் சூத்திரம் ஒருவன் மனம், மொழி, மெய்களாற் பிறர்க்குச் செய்யக் கூடிய உதவியை ஒளித்தலாகாது என்னும் பொருளை உட்கொண்டு இப்பொருளின் விரிவுகளுக் கெல்லாம் நிலைக்களமாக நிற்றலை நோக்குவார்க்கு இதன் திட்பநுட்பங்கள் இனிது விளங்கும்.

"சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்"

என்பதனாற் சூத்திரத்தின் இலக்கணத்தை அறியலாம். இவ்விலக்கணத்துக்குப் பெரிதும் இவ் ஆத்திசூடிச் சூத்திரங்கள் இயையுடையனவாக விளங்குவன. இந்நூல், மாபாடியம் போன்ற விரிவுரையை ஏற்குந் தகுதி வாய்ந்தது. உயர்ந்த நீதிகளைச் சிறுவர் எளிதிலுணர்ந்து கொள்ளுதற்கும், பெரும் புலவர்கள் பலதிறமாக வகுத்து ஆராய்ந்து உரை காண்டற்கும் இஃது இலக்கியமாகத் திகழுமாயின், இதனை உபகரித்த தமிழ்ச் செல்வியின் அறிவின் திட்பம் எத்துணைச் சிறந்ததாகும் என்பதை அறிவுடையார் உணர்வாராக.

பண்டை நீதி நூலார், கூடியவரை முயன்று தம் அனுபவத்திற் கண்ட உண்மைகளை நெடுங்காலமாயினும் சிதையாமலிருத்தற் பொருட்டுச் சூத்திர வடிவிலும் செய்யுள் வடிவிலும் யாத்துதவினர். அவை உரை நடையில் ஆக்கப்படாமை குறை என்ப ஒரு சாரார். முற்காலத்தில் இவ்வளவு விரிவாக அச்சிடுதற்குரிய கருவிகளில்லை. கற்பவர் நெஞ்சத்தில் உரை நடையினும் செய்யுள் நடை நிலை பெற்று ஞாபகத்திற்கு நன்கு பயன்படும். காலந்தோறும் மக்கள் வழக்க ஒழுக்கங்கள் மாறுபடுதல் இயல்பே. அம்மாறுபாட்டிற்கேற்ப நீதிகளும் திருத்தப்படு மென்பது சொல்லாமலே விளங்கும். மகாபாரதத்துக் கண்ட சில அறங்கள் இக்காலத்துப் பொருத்தமாகக் காணப்படா. அதுபற்றிப் பேரறிஞராகிய வியாச முனிவர் இழித்துரைக்கப் படுவாரல்லர்.

ஆகவே எத்தகைய நீதிகளையும் காலம் நோக்கிக்கொள்ளுதலும் தள்ளுதலுஞ் செய்தல் வேண்டும். ''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்பதைக் கடைப்பிடித்து மனம் போனபடி செய்யத் துணிதல் நன்றன்று. இங்ஙனம் வடமொழி தென்மொழிகளிற் சிறந்த நீதி நூல்களை ஆக்கிய பெரியாருடைய இயல்புகளை இங்கே கூறியன கொண்டு தெரிந்து கொள்க.

அருஞ்சொற்பொருள்

வண்மை - கொடைத்திறமை ; பால் - வெள்ளிய ; நடுவண் - இடையில் ; உள்ளுநர் - எண்ணுவோர்; யாத்து - செய்து ; சேய்மை - தொலைவு ; மன்பதை - மக்கள் ; செவ்வன் - செம்மையாக ; இடையறவு - இடையீடு ; இயைபு - பொருத்தம் ; கரவேல் - ஒளிக்காதே ; ஆடி - கண்ணடி ; திட்பம்- வலிமை.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. நீதி நூல்கள் என்பன யாவை ?
2. திருக்குறளின் சிறப்பு யாது ?
3. திருவள்ளுவர் எழுதிய நூல் ஒழுங்கிற்கும் ஏனையோர் நூல் ஒழுங்கிற்கும் உள்ள வேறுபாடுகள் எவை ?
4. வட மொழியில் சிறந்த நீதிநூல்கள் யாவை ?
5. சுக்கிர நீதியால் அறியப்படும் பழமை புதுமைகள் யாவை ?
6. அரசியல் பற்றிச் செங்குட்டுவன் சாத்தனுர்க்குக் கூறியது யாது?
7. தமிழில் வழங்கும் நீதிநூல்கள் யாவை ?

II. 1. நீதிநூல்கள் வாழ்க்கைக்கு எவ்வகையில் துணைசெய்யும் என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

2. சுக்கிர நீதி, திருக்குறள் — இவை இரண்டும் அரசன் இயல்பு பற்றிக் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக

III. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :--- புகழொளி, ஒள்ளிய, வரையறை, வாய்மொழி, இடையறவு, ஆள் வினை.

IV. நேற்று + பேசினன் = நேற்றுப் பேசினன், பட்டு + துணி = பட்டுத் துணி, கொக்கு + பறந்தது = கொக்குப் பறந்தது— இவ்வாறு வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.

களா + பழம் = களாப்பழம், பூனை + குட்டி = பூனைக் குட்டி, பலா + சுளை = பலாச்சுளை — இவ்வாறு நிலை மொழி ஈற்றில் உயிர் எழுத்திருந்து, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வல்லினமெய் மிகும்.

6. பெண்களுக்கு

புலவர் சா. மருதவாணன்

[இவர், மாணவர்க்குரிய நூல்கள், பொதுநூல்கள் எனப் பலவற்றை இயற்றியவர். பொதுநலத் தொண்டில் ஈடுபாடுடையவர். இப்போது கோயமுத்தூர் தூய மைக்கேல் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருப்பவர்.]

தமிழ் நாட்டின் பொற்காலமாம் சங்க காலத்தில், தமிழ்ப் பெண்கள் எத்துணை அளவு கலைத்திறனும், கடமை யுணர்வும், விடுதலை வேட்கையும், விருந்தோம்பும் பண்பும், தாய்மை நலனும், தாயகப்பற்றும், வழக்கறி வன்மையும், வாய்மை நெறியும், அரசியலறிவும், அருந்தமிழ்ப் புலமையும், கற்புமேம்பாடும், காதலில் தூய்மையும், மறமும், மானமும், மங்காப்புகழும், மனைவாழ் முறையும், மக்கள் வளர்ப்பும் நன்கு தெரிந்தவராய் நன்மையை யுணர்ந்தவராய்ச் சுற்றந் தழுவித் துயர் களைந்து தொல்லுலக மக்க ளெலாம் பல்லாற்றானும் பாராட்டும் பண்புடையவராய் இலங்கினர்!

இடைக்காலத்திலோ தன்னிலை கெட்டுத் தலைதடுமாறிப் பண்பையும், பகுத்தறிவையும் இழந்து, கடமை மறந்து, கலை நலம் துறந்து, கல்வி கேள்வியில்லாது, அடிமை மனத்தவராய், மூடப் பழக்கமும் மூத்த பொய்மைகளும் கொண்டவராய், முத்தமிழ் அறியாதாராய்ப் பிறநாட்டாரின் பேதைமைப் பண்பெனும் இருளிலே அகப்பட்டு இடர்ப்பாட்டிற் காளாயினர்.

இம்மட்டோ! பெண்கள் மாயப்பிசாசு என்றும், 'சேலை கட்டிய மாதரை நம்பினல் தெருவில் நிற்கவேண்டு' மென்றும், 'நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும்பேதமைத்தே' என்றும், அடுப்பூதும் பெண்களுக்கு அறிவை வளர்க்கும் கல்வி வேண்டாம் என்றும், பெண்கள் அடிமைகள் என்றும், ஆடவர்களின் வேலைக்காரிகள் என்றும், ஆன்மநேயத் திற்குக்கூட அருகதையற்றவர்க ளென்றும் ஏசவும் பேசவும் பட்டு இழிநிலைக்காளாயினர்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலோ நமது பெண்களின் நிலையைக் கூறக்கூட வேதனையாக விருக்கிறது. அன்று அன்பின் ஊற்றாயிருந்தவர்கள், வம்பின் பிறப்பிடமாகவும், மனை விளக்காக

இருந்தவர்கள் மனையிருளாகவும், ஒருவன் ஒருத்தி என்ற உயர் நிலையிலிருந்தவர்கள், சிலவேளைகளில் ஊதாரிகளாகவும், அச்சம் மிகுந்தவர்களாகவும், அமைதியற்றவர்களாகவும், அறிவுத் தெளி வில்லாதவர்களாகவும், சிலர் ஆடவர்களை ஆட்டிப் படைப்பவர் களாகவும். மனையறத்தையே வெறுத்த மாண்பற்றவர்களாகவும், சாதி வெறிகளிலே தடுமாறுகின்றவர்களாகவும், ஒழுக்கத்தை ஓம்பி உயிர்நாடியாய்ப் பேணுதவர்களாகவும், ஆய்வு மனப் பான்மை யற்றவர்களாகவும், அறியாமை மிகுந்தவர்களாகவும், உண்மைக் காதலை உணராதவர்களாகவும், பயனில் மொழி பேசும் பதடிகளாகவும், வம்புச்சண்டை பேசும் வறியர்களாகவும் வாயாடிகளாகவும், பொறுமையிழந்த பொதுநலங் கருதாத புல் லியர்களாகவும், சோம்பல் கொண்டு தேம்பித் திரிகின்றவர்களாக வும், வருவாயறியாத வனிதைகளாகவும், அறத்தை மறந்த அரிவையர்களாகவும், நாட்டுப் பற்றில்லா நங்கைகளாகவும், உண்மை நாகரிகத்தை ஓர்ந்துணராதவர்களாகவும், அக அழகில் லாத அணங்குகளாகவும், அழகும் அகவையும் இருந்தும் மனை யறத்தில் வாழ விரும்பாத மங்கைகளாகவும், எப்பொழுதும் நங்கைகளாகவே இருக்க விழையும் தன்மையுடையவர்களாகவும், பெரும்பாலோர் இருந்து வருகின்றனர்.

இந்நிலை நாட்டிற்கேற்ற நன்னிலையல்ல வென்று எண்ணுவ தாலும், இவற்றை மாற்றியமைப்பதே மாணும் மதியும் உடை யோர் செயலாகையாலும், இது தமிழ் இலக்கியங் கற்றவர்களின் தவிர்க்க முடியாத கடமையாதலானும் நமது முன்னோர்கள் மொழிந் துள்ள முதுமொழிகளாய தமிழ் இலக்கியங்களின் இனிய நற்றுணை கொண்டு சில அறிவுரைகளை எடுத்துக் காட்டி ஆவன செய்ய முற்படுகின்றோம்.

முதலில் பெண் என்பவள் யார்? அன்ன நடையும், பின்னல் சடையும், மின்னலிடையும், மேகலை அணியும், பாட்டும் படிப்பும், பகட்டான உடைகளும், எழிலும் எடுப்பும், இனிய குரலும், அட்டிற்றொழில் வன்மையும், அளவான மக்கட்பேறும் அமையப் பெற்றிருந்தாலும், கீழ்வருகின்ற பண்பாடு இல்லை யென்றால் அவளைப் பெண் என்று சொல்லுவதற்கியலாது.

"அழகும் குணமும் உள்ளவள் நல்லசோடு
அழகு இல்லையாயினும் குணத்தையே நாடு
பழகு நற்பண்பில்லா அழகின் வீடு
பாம்பு புலிகரடி வாழ்ந்திடுங் காடு"

வித்தகர் வேதநாயகரின் இந்தப் பாட்டைப் படிப்பதனால் பெண்களுக்குப் பெரிதும் இன்றியமையாதிருக்க வேண்டியது பண்பும் நல்ல பழக்கமும் என்பது தெரிகின்றது. இங்ஙனம் இல்லையேன்றால் மக்கள் வடிவிலே இருந்தாலும் மக்களல்ல மாக்களே என்று தெளியவைத்துள்ளார் நம் மாயூரம் வேதநாயகர்.

இரண்டாயிர மாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருவள்ளுவரோ ஓர் அழகிய கவி ஓவியத்தையே செம்மையாக வரைந்து சீருடன் கூடிய நல்ல பெண்ணை நமக்குத் தெள்ளத் தெளியத் தேனினும் இனிய செந்தமிழிலே திறம் படக் காட்டியுள்ளார்.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

உடல் நலத்தாலும், உள்ள உறுதியாலும், உலையாத கல்வியாலும், கற்பு நெறியாலும் தம்மை முதலிலே நன்கு காப்பாற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் அன்பாற் காதலால் மணஞ்செய்து கொண்ட மாண்புடைத்தலைவனை இன்முகம், இன்சொல், அறுசுவையுண்டி முதலியவற்றால் ஓம்பி, சோர்வைக் களையும் சோர்விலாதவளாக இலங்கவேண்டும். கணவன் விரும்பும் ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டும் மணங்கமழும் மலர்களைச் சூடிக்கொண்டும் வீட்டில் கவர்ச்சியோடிருக்க வேண்டும். தலைவனது குறிக்கோளையும் குணநலத்தையும் அறிந்துகொண்டு அதற்கேற்ப ஒழுக வேண்டும். அவன் விரும்பியுண்ணும் உணவை யறிந்து அதன் சுவை குன்றாது ஆக்கிப் படைக்கவேண்டும். அண்டை வீட்டாரின் அறியாமையைப் பற்றியோ ஆணவத்தைப் பற்றியோ கவலைப்படக் கூடாது. மேலும் தம் கணவரது ஒழுக்கம் வழுக்காம லிருக்கக்கூட இல்லாள் இயன்றளவு துணை செய்யவேண்டும். தமது மனையறம் பேணும் மாண்பையும், மக்களை வளர்க்கும் முறையினையும், கணவனைக் காக்கும் வகையினையும், கருத்தறியும் நிலையினையும் அறிந்து ஊர்ச்சான்றோர்களும், உறவினர்களும் பாராட்டுமாறு,

பணிவோடும், துணிவோடும், பக்குவத்தோடும், சுறுசுறுப்போடும், நடந்து வருபவளே நல்ல பெண் என்று நமது செந்நாப்போதார் குறட்பாவிலே கூறியிருப்பது உண்மையிலேயே நமது சிந்தைக்கு நல்விருந்தாகும். இவற்றையெல்லாம் நம் தீந்தமிழ் நாட்டுப் பெண்கள் தெளிவாகக் கற்க வேண்டும். அப்பொழுது தான் திருவும் திறமையும் மிக்குச் செம்மையாய் வாழ முடியும்.

மேற்காட்டிய முறையில் சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழகத்துப் பெண்கள் சீரோடிருந்தன ரென்பதை நமது இலக்கியங்கள் இனிதே எடுத்தியம்புகின்றன. சான்ருகச் சில காட்சிகளைக் காட்ட விழைகின்ரேம். முதலில் நற்றிணையிலிருந்து ஒரு நல்ல காட்சி :

நீரின்றமையாத நீணிலம் போலத் தம்மை யின்றித் தனித்து நடவாத தலைவன் ஏதோ ஓர் ஏதுவினல் வாழ்க்கையில் வறுமை யுற நேரிடுகின்றது. இதை யுணர்கின்ருர் தலைவியின் தந்தை. அவரே படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணும் உடைப் பெருஞ் செல்வர். தமது மகளைத் திருமணம் செய்து கொடுப்ப தற்கு முன்னர்ச் செல்வ மனையிலே சீராகவும் சிறப்பாகவும் வறுமையின் சாயல் கூடத் தெரியாத நிலையிலும் வேண்டுவன கொடுத்து வளர்த்து வந்தார்.

பொற்கலனிலே நெய்யும் பாலும் நிரம்ப ஊட்டி வளர்க்கப் பட்ட தமது மகள், நல்குரவால் நாளும் நலிவதை அறிந்தவுடன் தாமும் பழமையை எண்ணி நைவுற்ருர்; பரிவு கொண்டார்; வறுமை களைய வழியொன்று கண்டார்; பணியாட்களை அழைத்தார்; பல்வகையான செல்வங்களையும் பட்டாடைகளையும் கொடுத்தார்; உடனே தமது மகளிடம் கொண்டு சென்று கொடுத்துக் குறை நீக்குமாறு பணித்தார். ஏவலாளர்கள் விரைந்தனர் தலைவியரது வீட்டை நோக்கி. இல்லிலே இல்லாமை வருத்த வீற்றிருந்த தலைவியைக் கண்டு தந்தையார் கொடுத்துத் தாம் கொணர்ந் திருக்கும் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பெரிதும் வேண்டிக் கொடுத்தனர். தலைவியோ அந்நிலையில் தமது தந்தை யின் இல்லிலிருந்து அனுப்பப்பட்ட அணி அணியான செல்வங் களைப் பெற்று வறுமையை ஓட்டலாம், வாட்டத்தைப் போக்கலாம், இல்லாமையை இன்றே இல்லாமல் செய்யலாம் என்று

எண்ணுமல் அவற்றை வாங்கிக்கொள்ள மறுத்து விட்டாள்; ஏன்? கொள்ளேன் என்றல் தமிழ்ப் பண்பல்லவா?

இந்த நிலையிலே, தமது செல்வத் திருமகளின் இல்லறத்தின் இயல்பைக் காணச் செவிலித்தாய் வருகின்றுள். வந்தவள் காணும் காட்சியோ அவளை வியப்பிலாழ்த்துகின்றது. மணம் நிகழா முன்னர்த் தமது மனையிலே தேன் கலந்த பாற்சோற்றையும், நெய் யடிசலையும் பக்குவமாகவும் பரிவோடும் பயங்காட்டியும் ஊட்டவும் சரியாக உண்ணுதவள், இன்று தலைவியானதும் தன் தகுதிக் கேற்ப குடும்ப வறுமை யறிந்து ஒரு வேளை விட்டு ஒரு வேளை உணவு கொள்ளும் இத்தகைய கல்வியறிவையும் கவின்தரு அமைதியை யும் உயர்ந்த ஒழுக்கத்தையும் எந்தக் கலைக்கூடத்தில் யாரிடம் கற்றனளோ என்று எண்ணி மகிழ்கிருள்.

''பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
....
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளான்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே!'

என்று செவிலித்தாய் வியந்தும் உவந்தும் கூறுகின்றுள்.

ஏன்? இவ்வாறு அத்தாய் கூறுகின்றுளென்றுல் மனைமாட்சி என்பது இத்தன்மைத்து ஆதலின் இவ்வாறு குறிப்பிட்டாள். இன்று போல் வளமும் வசதியும் குறைந்து, கொண்டவன் வறுமை யுற்றுல் மணமான பெண்கள் பெற்றவர்கள் வீட்டிற்கும் உற்றவர் கள் இல்லிற்கும் ஓடி விடுவதும், கணவனிடம் கண்டவாறு சண்டையிடுவதும், சால்பைக் கெடுப்பதும், கணவனைக் கடன் வாங்குமாறு கட்டாயப் படுத்துவதும், தாய் தந்தையரிடம் சென்று தம் தலைவரைப்பற்றித் தாமே இழிவாகவும் ஏளனமாகவும் பேசுவ தும், பொருள் கேட்டு முறையிடுவதும், போலியாய் அழுவதும், பக்கத்து வீட்டுக்காரர்களிடமெல்லாம் பண்பில்லாமல் நடந்து

கொள்வதும், பிறரது உழைப்பால் பெருமையாக வாழ நினைப்பதும் இல்லறப் பெண்களுக்குரிய நல்லறமாகாது. கற்புடைய ஆடவரை மட்டும் தம் தலைவராகப் பெற்றுவிட்டால் சுவர்க்கத்தை வீட்டிலேயே காணலாம், கண்டு களிக்கலாம் என்று அக்கால மகளிர் எண்ணினர்.

தெளிந்த நீர் கலந்த கூழானாலும் தமது இல்லிலே இருந்து தம் கொழுநனோடு கூடி உண்பதே குறைவற்ற பேரின்பத்தைத் தரும். ஏனென்றால்,

“மனையுறை மகளிர்க்கு ஆடவருயிரே” என்ற குறுந்தொகையின் கருத்தையுணர்ந்து ஒழுகியமையேயாகும். மற்றும் பிறன் மனை நோக்காத பேராண்மையில் தலைவனும், தமது தலைவரையன்றிப் பிறரை நினையாத பீடுமேம்பாட்டில் தலைவியும் சிறந்து விளங்கினர் நம் திருநாட்டார் என்பதை மேதை வேதநாயகனாரின் மேன்மையான பாட்டால் அறிந்து அனைவரும் மகிழ்க.

“ஓவியர் நீள்சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியை யாம்அழைத்திட ஆண்சித்திரமே நான்பாரேன்
பவையர்தம் உருவெனில்நீர் பார்க்கமனம் பொறேனென்றாள்
காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால்.

நீண்ட பெருஞ்சுவரினிலே கைபுனைந்தியற்றும் கைவன்மை மிக்க ஓவியரால் தீட்டப்படும் கவின் மிகு ஓவியத்தைக் கண்ணுற்ற தலைமகன் தலைவிக்கு அதனைக் காட்டுதற்கு அவளை அழைக்க, அதற்கவள் ஆடவனின் வடிவென்றால் நான் காண மாட்டேன், ஆரணங்கின் உருவ மென்றால் நீர் பார்க்க என்னுள்ளம் பொறுக்க மாட்டேன் என்று கூறினாள். இவற்றால் நாம் தெரிந்துகொள்வது யாதெனில் ஆண் பெண் இருவரும் கற்புடனிருந்தால்தான் கணவன் மனைவியரிடத்தில் கடமையொழுங்கும் கட்டுப்பாடும் கண்ணியமும் மேலோங்கி வளர முடியும் என்பதாகும்.

பெண்கள் கடமையில் தவறாதது மட்டுமல்ல, கடமையில் வழுவிய பிறர்க்கும் கடமையை அறிவுறுத்தியிருக்கின்றார்கள் என்பது புறநானூற்றில் பொன்முடியாரின் பொன்னான பாடலால் அறிய வருகின்றது. அந்தப்பாடல் குடியாட்சியிலே குடும்பத்திலே

வாழும் மாந்தர்களுக்கும் நாடாளும் நல்ல தலைவர்களுக்கும் பயன் படும் என்று உணர்வதால் இதோ அந்தப்பழம் பாடலைத் தருகின்றேன்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

பார்த்தீர்களா! கடமையறிவூட்டும் கன்னியரின் கவித்திறனை! இத்தகைய கல்வியைப் பெற்றிருந்த காரிகைகள் நற்றமிழ் நாட்டில் நனிமிகுந்திருந்தமையா லன்றோ செங்குட்டுவன், இளங்கோ, கணைக்காலிரும்பொறை, கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, நெடுஞ்செழியன், கரிகாலன், தழும்பன், புலிகடிமால், மாங்குடி மருதன் போன்ற புரைதீர்ந்த அறிவும் புகழ்மிகு கல்வியும், ஆட்சித் திறனும், ஆண்மையும் மிக்க ஆண் சிங்கங்கள் தோன்றி னார்கள் அற்றைய நாளில்!

ஆதலின் இன்றுள்ள என்னருந் தமிழகத்தைச் சார்ந்த பெண்கள் அச்சத்தையும் மடமையையும் அழித்தொழித்து, சூழ்ச்சியையும் சுயநலத்தையும் தவிர்த்து, அன்பையும் அறத்தை யும் உணர்ந்து, குறளையும் குறுந் தொகையையும் கற்று, காதல் ஒருவனைக் கைப் பிடித்துத் தம் கட்டழகும் கலைநலமும் பயன்பெற இருதலைப்புள்ளின் ஓருயிராக ஒன்றி வாழவேண்டும். காழ்ப்பும் கறுவும் கடுகளவு கூடத் தோன்றக்கூடாது. சிறுசிறு குற்றங்களை யெல்லாம் 'நன்றல்லது அன்றே மறப்பது நன்று' எனும் நல்லோர் மொழிக்கிணங்க மறக்கவேண்டும் மகளிர்கள். கணவனது வருவாயறிந்து வழங்கி வாழ வேண்டும். வருவிருந்தோம்பும் வண்மையில் சிறக்க வாழவேண்டும். சுற்றம் தழுவும் தூய்மை யுடனிருக்கவேண்டும். உறவினர்களையும், பெற்றோர்களையும், பெரி யோர்களையும் ஓம்புவதில் கணவனுக்குத் துணை புரிய நம் கன்னித்தமிழ்ப் பெண்கள் முன் நிற்கவேண்டும். மேலும் வையத் துள் வாழ்வாங்கு வாழும் முறையினை நன்கு தெரிந்து நாட்டின்

நலம் பேணி நன்மக்கள் பலர் தோன்றுமாறு வாழவேண்டும் நமது நற்றமிழ் நாட்டு நங்கைகள் என்று கூறி எமது உரையை முடிக்கின்றோம்.

அருஞ்சொற்பொருள்

வேட்கை - விருப்பம்; நெறி - வழி; வன்மை - வலிமை; தொல் - பழமை; இலங்கினர் - விளங்கினர்; பேதைமை - அறியாமை; மங்கா - குறையாத; ஓம்பி - பாதுகாத்து; பதடி - உள்ளீடு இல்லாதது; ஓர்ந்து - ஆய்ந்து; அட்டிற்றொழில் - சமையல் தொழில்; மாக்கள் - விலங்குகள்; தகைசான்ற - பெருமையமைந்த; வழுக்காமல் - தவறுமல்; நீணிலம் — பெரிய உலகம்; கலன் - பாத்திரம்; பரிவு - இரக்கம்; ஏவல் - கட்டளை; கொழுநன் - கணவன்; பிரசம் - தேன்; அறல் - மணல்; கவின் - அழகு; பீடு - பெருமை; மேதை - அறிவில் உயர்ந்தவர்; காவி - குவளை; வெற்பு - மலை; புறந்தருதல் - நன்கு பேணி வளர்த்தல்; நன்னடை - நல்லொழுக்கம்; தலை - முதன்மையான; ஒன்றி - இணைந்து.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. சங்ககாலப் பெண்கள் எத்தகைய சால்புடைய ராயிருந்தனர்?
2. இடைக்காலப் பெண்களின் இழிநிலையினை ஆசிரியர் எவ்வாறு சுட்டிக் காட்டுகின்றார்?
3. இக்காலத் தமிழ்ப் பெண்களின் நிலை யாது?
4. நல்ல பெண்ணின் இயல்பினை வித்தகர் வேதநாயகனார் எவ்வாறு நவின்றுள்ளார்?
5. வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் துணையாம் பெண்ணிலக்கணத்தை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?
6. நற்றிணைப் பாடலை நம் நற்றமிழ் நங்கையர்கள் ஏன் நினைவிலிருத்த வேண்டும்?
7. இக்காலப் பெண்கள் வறுமையடைந்த கணவனிடம் எந்த முறையில் நடந்து கொள்கின்றனர்?
8. தமிழ்ப் பெண்களின் கற்பு மேம்பாட்டை வேதநாயகனார் எவ்வாறு விளக்கியுள்ளார்?
9. பொன்முடியார் கூறும் கடமைகள் யாவை?
10. இக்காலத்தமிழ் மகளிர் எவ்வாறு ஒழுக வேண்டுமென்று ஆசிரியர் ஆசைப்படுகின்றார்?

II. 1. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்துக :—மங்காப்புகழ், தாயகப் பற்று, துயர்களைந்து, தொல்லுலகம், குறிக்கோள், குண நலம், கைபுனைந்தியற்றும் வன்மை, கடமையறிவு.

2. வேறுபாட்டை அறி :— கலை—களை, மனை—மணை, தலை—தளை, மனம்—மணம், அரி - அறி, வேளை—வேலை, வருத்தல்—வறுத் தல், அறம்—அரம், தன்மை—தண்மை, புலி—புளி.

III. 1. கணவனை+பேணும் = கணவனைப் பேணும், அவளை+காண் =அவளைக்காண், கணவனை+காக்கும் = கணவனைக்காக்கும்— இவ்வாறு இரண்டாம் வேற்றுமை உருபுடன் வரும் சொல்லின் முன் உள்ள வல்லினம் மிகும்.

2. மகளிருக்கு+பண்பு = மகளிர்க்குப்பண்பு, மனைவிக்கு+கடமை =மனைவிக்குக் கடமை—இவ்வாறு நான்காம் வேற்றுமை உருபுடன்வரும் சொல்லின்முன் உள்ள வல்லினம் மிகும்.

3. தயிர்+குடம்=தயிர்க்குடம் (தயிர் உடைய குடம்), இதுபோன்று இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும், வாய்+சொல்=வாய்ச்சொல் (வாயிலிருந்து வரும் சொல்) என ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும், நல்லாரிடை+புகுந்து=நல்லாரிடைப் புகுந்து என ஏழாம்வேற்றுமை விரியிலும், மலை+குகை=மலைக்குகை யின் கண் உள்ள குகை) என ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் வல்லினம் மிகும்.

7. வாழ்க்கைக்கு ஒரு வழி காட்டி

டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் (Bar-at-law)

[உலகப் பொருளாதார வல்லுநர்களில் ஒருவர்; இந்திய அரசாங்கத்தில் நிதி அமைச்சராகத் தொண்டுபுரிந்தவர். சிலப்பதிகாரத்துக்குப் புத்துரை எழுதியவர். தமிழ் இலக்கியங்களில் பேரார்வம் படைத்தவர்.]

கலைகள் அறுபத்துநான்கு வகைப்பட்டவை என்று நம் முன்னோர்கள் வகுத்திருக்கின்றனர். சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்திலும் 'எண் எண் கலையோர் இரு பெரு வீதியும்' என்று வருவது குறிப்பிடத்தக்கது. கலைகள் மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தும் சாதனங்களாகும். ஆனால் எல்லாக் கலைகளிலும் சிறந்த கலை, வாழ்க்கைக் கலை. அன்றாட வாழ்க்கையை ஒரு கலையாய்ப் பண்படுத்துபவனைத்தான் மக்களில் சிறந்தவன் என்று சொல்லவேண்டும்.

வாழ்க்கையைக் கலையாய்ப் பண்படுத்துவதற்கு அறிவுதான் கருவி. ஆனால், இயற்கை அறிவைக் கொண்டே எல்லோரும் இந்தப் பயனை அடைய முடியாது. வாழ்க்கையில் என்னென்ன வற்றை விலக்க வேண்டும், கையாள வேண்டும், எந்தவிதத்தில் கையாளவேண்டும் என்றெல்லாம் எடுத்துச்சொல்ல ஒரு வழி காட்டி வேண்டும். வாழ்க்கையின் வழி நுட்பங்களை அறிந்த பெரியோர் உலகத்திற்குத் தந்த நூல்களே இவ்வழிகாட்டிகளில் சிறந்தவை.

ஜொராஸ்டர் (Zoroster), கன்பூசியஸ் (Confucius), புத்தர், இயேசு கிருஸ்து, முகமதுநபி—இவர்களெல்லாரும் வழிகாட்டிகளாவர். இவர்கள் உலகில் தோன்றி வாழ்வின் வழியை மக்களுக்கு எடுத்துக் காட்டிய மகான்கள். இவர்கள் விளக்கிய அடிப்படையான உண்மைகள் உலக மக்களுக்கெல்லாம் பொருந்தியவை.

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வாழ்க்கை நூல் ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை, உலகிற்கு அளித்தது தமிழ். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டில் பிறந்த திருவள்ளுவர்

இந்தக் குன்றுச் சிறப்பைத் தந்தவர். அவர் தந்த திருக்குறளே தலைசிறந்த வாழ்க்கைத் துணை நூல்.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஒரு நூல் இக்காலத்தில் வாழும் மக்களுக்கு வாழ்க்கைத் துணையாய் இருக்க முடியுமா? உலகம் மாறுதல் அடைந்துகொண்டே போகின்றது. மக்களின் நடை, உடை, பாவனை, மனக்கருத்து, நம்பிக்கை, அரசியல் முறைகள், நாகரிகம் இவையெல்லாம் சென்ற இருபது நூற்றாண்டுகளில் எவ்வளவு மாறுதல் அடைந்திருக்கின்றன! அப்படி இருக்க, நாம் வாழும் இன்றைய அமைப்புக்குத் திருக்குறள் முழுதும் பொருந்துவதா?" என்று கேட்பதில் தவறில்லை.

இந்த ஐயத்தை ஓரளவிற்குச் சுருக்கமாய் ஆராய்தல் இன்றியமையாதது. நடை, உடை, பாவனை, நாகரிகம் இவையெல்லாம் நாம் உடலில் அணியும் ஆடை யாபரணங்களைப் போன்றவை. அவை நாளுக்குநாள் மாறுதல் அடையத்தான் செய்யும். நாடுகள் தோறும் அவை மாறுபட்டும் இருக்கும். ஆனால், உயிரின் அடிப்படையான உண்மை என்றும் மாறாதது.

மனித வாழ்க்கையில் எக்காலத்திலும், எந்நாட்டிலும் மாறாத அடிப்படையான உண்மைகளைத்தான் திருவள்ளுவர் குறளில் கையாண்டிருக்கிறார். அதனால்தான் குறளை உலக மக்களுக்கெல்லாம் எக்காலத்திலும் பயன்படும் வாழ்க்கை வழிகாட்டி என்று போற்றுகின்றோம். அணுவில் உலகத்தை அழிக்கவல்ல மாபெரும் சக்தி இருக்கிறதென்று விஞ்ஞானம் நிலைநாட்டி விட்டது. இரண்டு வரிகள் கொண்ட சிறு குறள் வெண்பாவில் உலகத்தைக் காக்கவல்ல தலைசிறந்த உண்மை இருக்கிறதென்று எத்தனை பேர் அறிந்திருக்கிறார்கள்?

குறளில் காணும் வாழ்க்கை விதிகள் மக்களில் ஒரு சிலர் மட்டும் கையாளவேண்டியவையல்ல; உலக மக்கள் எல்லாரும் கையாளவேண்டியவை; கையாளக் கூடியவை. துறவறம் எவ்வளவு மேம்பட்டதாயிருந்தாலும், அது எல்லாரும் அடையக் கூடிய நிலையுடையதன்று. இந்த நிலையை அடைய முடியாத ஒருவன் அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. இல்வாழ்க்கையை அறநெறியில் நடத்தி வந்தால், துறவறத்தின் பயனை அடையலாம்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்?"

அதுமட்டுமன்று. அறத்தின் வழியில் ஒருவன் இல்வாழ்க்கையை நடத்திவந்தால், துறவிகள் முதலிய மற்ற எல்லாரையும் விட அவன் மேம்பட்டவனுவான்.

"இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை"

தவம், தவம் என்று சொல்லப்படுகின்றதே, அதன் உண்மை என்ன? மனைவி, மக்கள், சுற்றத்தார் எல்லோரையும் விட்டுக் காட்டிற்குப் போய்த் தனித்த நிலைமையில் தியானம் செய்வது தானு தவம்? இம்முறையே தவத்திற்கு அறிகுறி என்று கூறுவதற்கு இல்லை. இல்வாழ்க்கையிலிருந்தே தவம் புரியலாம் என்கிருர் திருவள்ளுவர். காட்டில் தவம் புரிகின்றவர் தம்முடைய நன்மையை மட்டும் நாடுபவர். ஆனுல் இல்வாழ்க்கையை மேற்கொண்டவர் பிறர் நலமும் தன்னலமும் கருதுபவர் என்பது திருவள்ளுவர் கருத்து.

"ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"

பொருளின்மேல் ஆசை வைக்கக்கூடாது என்பதும், பொருளாசை ஒருவன் நல்ல கதியை அடைவதற்கு இடையூருனதென்பதும் பல சமயங்களின் கொள்கை. திருவள்ளுவர் இந்தத் தத்துவத்தை ஒப்புக்கொள்வதில்லை. உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் பொருளை விலக்கிவிட்டால், உலகம் நடைபெறுவது முடியாது. உலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. இதனுல்தான்,

"அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்ருர், இதன்மூலம் பொருளின் அவசியத்தை வலியுறுத்துகிருர். அருள் வளர்வதற்குங்கூடப் பொருள் வேண்டும். அன்பு பெற்ற அருள் என்னும் குழந்தையைப் பொருள் என்னும் செவிலித்தாய் வளர்த்தால்தான் வளரும் என்பது அவர் உள்ளக் கிடக்கை.

" அருள்என்னும் அன்பின் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு "

பொருள் கட்டாயம் வேண்டும் என்று சொன்ன அவர் அப்பொருளை நியாய வழியிலும், பிறர்க்குத் தீங்கு விளைவிக்காமலும் சேர்க்க வேண்டும் என்பதையும் நினைவூட்டுகின்றார். அப்படி நியாயமான வழியில் சம்பாதித்த பொருளின் மூலமாகத்தான் அற வாழ்க்கையையும், இன்ப வாழ்க்கையையும் பெறலாம்.

" அறன்ஈனும், இன்பமும் ஈனும், திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள் "

காலப்போக்கில் அரசியல் துறை எத்தனையோ மாறுதல்களை அடைந்திருக்கின்றது. முடிவேந்தர் ஆண்ட காலத்தில் எழுதப்பட்ட குறள், குடியரசு தலையோங்கி நிற்கும் இக்காலத்திற்கும் பொருந்தியிருப்பது அந்நூலின் அழியாத உண்மைக்குச் சான்றாகும். அரசியலில் அரசனுடைய மாளிகையைப்பற்றியோ அவன் ஆடையாபரணங்களைப்பற்றியோ அவர் சொல்லவில்லை. மன்னனுக்கு இருக்க வேண்டிய குணங்களையே எடுத்துக் காட்டுகின்றார். அவை குடியரசில் ஆட்சித் தலைவனாயிருப்பவனுக்கும் பொருத்தமாய் இருக்கின்றன.

அரசன் தன்னிடம் முறையிட்டுக்கொள்ள வந்தவர்க்குக் காணுதற்கு எளியவனாகி, யாவரிடத்திலும் கடுஞ்சொல் சொல்லாதவனாயு மிருந்தால், அவனுடைய நாட்டை உலகம் உயர்த்திச் சொல்லும். அது அரசனுக்கு மட்டுமின்றிக் குடியரசு ஆட்சித் தலைவனுக்கும் பொருத்தமானதுதானே ?

" காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் "

பொருளாதாரத் துறையில் இக்காலத்தில் அரசாங்கத்தாருக்குள்ள பொறுப்பு மிகப் பெரியது. நாட்டின் பொருளைப் பெருக்குவதோடல்லாமல், அப்பொருள் ஒரு சிலருடைய கைகளில் போகாமல் அதை ஏழை மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் நியாய முறையில் பங்கீடு செய்து கொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் முக்கியக் கடமை என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய தத்துவத்தையும் திருவள்ளுவர் அறிந்திருக்கிறார்.

நாட்டிற்குப் பொருள் பெருகும் வழிகளை மேலும் மேலும் உண்டாக்குவதிலும், உண்டான பொருள்களை ஓரிடத்தே தொகுப்பதிலும், அப்பொருளைப் பிறர் கொள்ளாமல் காப்பதிலும், காக்கப்பட்டவைகளைக் குடிகளுக்குப் பங்கீடு செய்தலிலும் வல்லவனுயிருப்பவன்தான் அரசன்.

" இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு "

இக்காலக் குடியரசு முறையில் அரசாங்கம் குடிகளின் ஆதரவைப் பெற்று நடக்க வேண்டும். பொய்யில் புலவர் அரசனின் பல குணங்களையும் பற்றிச் சொல்லும்போது, தன் குடிகள் அரசனின் செவி கேட்கக்கூடாத கடுஞ் சொற்களைச் சொன்னபோதிலும், அச்சொற்களைப் பொறுக்கும் குணமுடைய அரசனது குடை நிழலின்கீழ் உலகம் பொருந்தும் என்றூர்.

" செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு "

மேலே எடுத்துக் காட்டப்பட்ட சில குறள் வெண்பாக்களிலிருந்து உலக நாகரிகம் எவ்வளவு மாறுதல் அடைந்தபோதிலும், திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான வாழ்க்கைத் துணை நூல் என்பது நன்கு விளங்குகிறது. இது காரணம் பற்றித் தான் வள்ளுவருக்கு 'பொய்யா மொழிப் புலவர்' என்ற சிறந்த பட்டத்தை நம் முன்னோர்கள் வழங்கினுர்கள். வள்ளுவர் வாக்கு எக்காலத்திலும் பொய்யாகாது. வாழ்க்கையில் என்றும் அழியாமல் நிலைபெற்ற உண்மைகள் நிறைந்த நூல் திருக்குறள்.

மக்களில் மிகப் பெரும்பான்மையோர் கடைப் பிடிக்க வேண்டிய இல்லற வாழ்க்கையின் பெருமையை வலியுறுத்தும் நூல்களில், திருக்குறளைவிடச் சிறந்த நூல் எந்த மொழியிலும் இல்லையென்று துணிவுடன் சொல்லலாம். மனிதனுக்கு அறிவு வளர்ச்சி உண்டான காலம் முதல், தான் நற்கதி அடையும் வழியை விடா முயற்சியுடன் தேடிக் கொண்டிருக்கின்றுன். எல்லாச் சமய நூல்களின் முடிவும் அதுவேதான். யாகம், தவம், துறவறம் முதலிய எத்தனையோ கடினமான வழிகளை மனிதன் நம்பி நடக்கின்றுன். ஆனுல், எல்லாரும் எளிதில் பின்பற்றக்கூடிய

இல்லற வழியும் மனிதனுக்கு நல்ல கதியைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை—உண்மையை வள்ளுவர் நமக்குக் காட்டுகிறார்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுதிகளோடு குறளை முடித்துவிட்டனரே அன்றி நான்காம் பகுதியான வீட்டைப்பற்றி அவர் சொல்லவில்லை. அறம், பொருள், இன்பம் என்ற மூன்று வழிகளைச் சரிவரக் கடைப்பிடித்து வாழ்க்கையை நடத்தினால் அந்த வாழ்வின் பயனே 'வீடு' அல்லது 'மோட்சம்' என்பது அவரது நம்பிக்கை.

தெய்வலோகம் என்று ஓர் உலகம் மேலே இருக்கிறதென்றும், அவ்வுலகில் வாழும் தெய்வ மக்கள் அழியாத இன்பநிலையில் மூழ்கி இருக்கின்றார்கள் என்றும் சாதாரண மக்கள் நம்புகிறார்கள். ஆனால், நாம் வாழும் இந்த மண்ணுலகத்தையே தெய்வலோகமாகச் செய்யலாம் என்பது வள்ளுவர் கொள்கை. தான் வாழும் இல்லத்தையே தெய்வலோகமாகச் செய்து, தன்னையும் தெய்வ மக்களில் ஒருவனாய் மாற்றிக்கொள்ளக்கூடிய சக்தி மனிதனுக்கு உண்டு. இந்த உன்னத நிலையை ஒவ்வொருவருமே எளிதில் அடையலாம். இந்த மண்ணுலகில் அறநெறி தவறாமல் இல் வாழ்க்கையை நடத்துபவன் வானுலகில் வசிக்கும் தெய்வ மக்களில் ஒருவனாவான் என்கிறார் தெய்வப் புலவர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

பாமர மக்களுக்கு நம்பிக்கையையும் ஊக்கத்தையும் ஊட்டிப் பயனையும் தரும் சிறப்பு இதைவிட வேறொன்றுக்கு உண்டோ?

அருஞ்சொற்பொருள்

எண் எண் கலை - அறுபத்துநான்கு கலை; ஆபரணம் - அணிகலன்; அறத்தாற்றின் = அறத்து + ஆற்றின் - அறத்தின் வழியில்; ஆற்றின் - நடத்தினால்; புறத்து ஆற்றில் - துறவறம் முதலிய புறவழிகளில்; இயல்பினான் - உலக இயற்கையான அறவழியில்; முயல்வாருள் - இறைவனைக் காண முயலும் துறவிகள்; தலை - சிறந்தவனாவான்; பொய்யில் புலவர்-திருவள்ளுவர்; வையத்துள்-உலகத்தில்; வானுறையும்-வான உலகில் வாழும்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. கலைகள் என்பவை யாவை?
2. மக்களிற் சிறந்தவன் எவன்?

3. வாழ்க்கையைக் கலையாய்ப் பண்படுத்த வழிகாட்டிகள் எவை?
4. தலைசிறந்த வாழ்க்கைத் துணை நூல் எது? எங்ஙனம்?
5. நாளுக்குநாள் மாறுபவை எவை? என்றும் மாறாதது எது?
6. உலக மக்களுக்கு எக்காலத்திலும் வாழ்க்கை வழிகாட்டி என்று குறளைப் போற்றுவதேன்?
7. இல்வாழ்க்கையில் இருந்தவாறு துறவறத்தின் பயனை அடைவதெப்படி?
8. துறவிகளைக் காட்டிலும் மேம்பட்டவன் எவன்?
9. துறவறம் - இல்லறம் - இவ்விரண்டிலும் எது சிறந்தது?
10 பொருளின் அவசியத்தை வள்ளுவர் எவ்வாறு வற்புறுத்துகிறார்?
11. தலைவன் எவ்வாறு அமைய வேண்டுமென்கிறார் வள்ளுவர்?
12 அரசின் கடமை திருக்குறளில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
13. தெய்வலோகம்பற்றி இப்பாடம் என்ன கூறுகிறது?
14. வள்ளுவர் வீட்டைப்பற்றி ஒன்றும் கூறாததேன்?

II. 1. துறவறத்தை விட இல்லறம் சிறந்தது என்பதை விளக்க ஒரு கட்டுரை வரைக.

2. பொருள்மீது ஆசை வைக்கலாமா? கூடாதா? வள்ளுவர் வழி நின்று ஆராய்ந்து ஒரு கட்டுரை வரைக.

3. தமிழகத்தின் பண்டைக்கால முடியரசு, இக்காலக் குடியரசு - இவ்விரண்டையும் ஒப்பிட்டு ஒரு கட்டுரை வரைக.

III. வேறுபாட்டினை அறிந்து கொள்:—துறை - துரை; கருப்பு - கறுப்பு; எண் - என்; வழி - வலி - வளி; விலக்க - விளக்க; துறவு - துரவு; வாழ் - வால் - வாள்.

IV. தமிழில் எழுது :—தெய்வம், சக்தி, உன்னதம், தெய்வலோகம், மோட்சம், யாகம், தவம், நியாயம், அவசியம், தியானம், ஆசை, சந்தேகம், மகான்கள்.

V. 1. அது+கலை - அது கலை, இது+கருவி - இது கருவி, எது+கூறியது - எது கூறியது - இவ்வாறு அது, இது, எது எனும் சொற்களின் முன் வல்லினம் மிகாது.

2. அவை+பெரியவை, - அவை பெரியவை, இவை+சிறியவை - இவை சிறியவை, எவை+போயின - எவை போயின, யாவை+கிடைத்தன - யாவை கிடைத்தன—இவ்வாறு அவை, இவை, எவை, யாவை எனும் சொற்களின் முன் வல்லினம் மிகாது.

3. அத்தனை+புலிகள் - அத்தனை புலிகள், எத்தனை+பேர் - எத்தனை பேர், இத்தனை+கற்கள் - இத்தனை கற்கள் - இவ்வாறு அத்தனை, இத்தனை, எத்தனை எனும் சொற்களின் முன் வல்லினம் மிகாது.

8. வெண்ணிலா

தஞ்சை - புலவர் இளங்கோ

[இவர் வெண்ணிலா, தென்னாட்டுச் சிங்கம் முதலிய நாடக நூல்களை இயற்றியவர். காணிக்கை யன்னை உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றுபவர். அவர்தம் "வெண்ணிலா" என்ற நாடக நூலிலிருந்து இப்பகுதி தரப்படுகிறது]

காட்சி 1

இடம் : வாகை நாட்டு மறவர் தெரு.

இருப்போர் : திருமலை, வெள்ளையன், முத்தையன், முத்தம்மா.

(வஞ்சி நாட்டான் வாகை நாட்டை முற்றுகையிட்டான்; வாகை நாட்டில் போர்ப்பறை முழங்குகிறது.)

முரசாள் : துடும்! துடும்!! துடும்!!! (முரசொலிக்கிறது) இதனால் இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதென்னவென்றால் .... வஞ்சிநாட்டு மன்னன், இந்த வாகை நாட்டோடு வம்பிழுத்துப் போர்புரியு வந்திருப்பதால், போட்டியிட்டுக் கொண்டு வீட்டுக்கு ஓர் ஆள் போர்க்களம் வரவேண்டும். நற்றமிழ் நாட்டவரே! போர்க்குறிக் காயமே, புகழ்க்குறிக் காயம்; யார்க் கது வாய்க்கும்? போர்க்குடன் எழுவீர்! இத்தனிப் போரில் நீர் ஏற்றிடும் வடுக்கள் வெற்றிச் செல்வி முத்தமிட்டளித்த முத்திரை; எத்தனை தலைமுறைக்கு உங்கள் பெயரை எத்திக்கொண்டிருக்கும். சித்தங்கலங்கார் செம்மை நெறி கண்டார்; இத்தரை பெற்றெடுத்த ஏற்ற மிகக் கொண்டோர்! மானம் உடையார்! மறத்தமிழர் வழி வந்தோர்! போகும் உயிர்க் கஞ்சாப் போர் மறவர்! வாரீர்! வாரீர்!! வாரீர்!!! என அழைக்கிறது போர் முரசு.

(திருமலை என்னும் இளைஞன் முரசறைவோனின் அருகில் நெருங்கி உற்றுக் கேட்டு)

திருமலை : போர் தொடங்கி விட்டதா? போகின்றேன் என் தாயிடம்; கேட்கின்றேன் விடை; புறப்படுகிறேன் போருக்கு.

காட்சி 2

இடம் : முத்தம்மா வீடு.

இருப்போர் ; திருமலை, வெள்ளையன், முத்தையன், முத்தம்மா.
(போர் வெறியுடன் குமுறி எழும் வீரர்கள்; அவர்கள் இடையில் முத்தம்மா)

முத்தையன் : முத்தம்மா! (நடந்துகொண்டே) முத்தம்மா! ஏய் முத்தம்மா!

முத்தம்மா : (கையில் வேலுடன் வெளியே வந்து) வந்து விட்டேன் அத்தான் ... வஞ்சிநாட்டான் படையெடுத்து வந்திருக்கின்றானும் ....

முத்தையன் : (வேலினை வாங்கி) செந்தமிழ் வாகை நாட்டுச் சிங்கக் கூட்டத்திடம், அந்த வஞ்சி நாட்டுச் சிறுத்தைக் கூட்டமா வாகை சூட வந்திருக்கிறது? புள்ளிச் சிறுமான் புலியை எதிர்க்கின்றதாம்! பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுகின்றதாம்! புறப்படுகிறேன் போர்க்களம் நோக்கி. பகைவரைக் கசக்கிப் பிழிந்து வாகை நாட்டான் பாதம் பணிய வைக்கின்றேன். கும்மாளம் கொட்டிவரும் கோழையர் கூட்டத்தை இம் மாநிலத்தை விட்டே ...... ஏன்? இந்த உலகத்தை விட்டே விரட்டுகின்றேன். தெம்மாங்கு பாடி வரும் வஞ்சி நாட்டாரைக் களத்திலே அம்மா! என அலறச் செய்கின்றேன்.

[திருமலை வருகிறான்]

திருமலை : அம்மா! அம்மா!!

முத்தம்மா : வாடா மகனே! வந்துவிட்டது போர்!!

திருமலை : அதனைச் சொல்லத்தானம்மா அவசரமாக வந்தேன். 'வீட்டுக்கோர் ஆள் தேவை'. புறப்படுகிறேன் அம்மா!

முத்தையன் : சிறுவன் நீ .... பத்து வயதுகூட ஆகவில்லை; அதற்குள் படைக்கு முந்துகிறான். முத்தம்மா இவனுக்குப் புத்தி கூறு : நான் சென்று வருகிறேன்.

வெள்ளையன் : போகாதே ! நில் !!

முத்தையன் : யாரடா தடுப்பவன் !!

வெள்ளையன் : நான்தான் .... உன் மைத்துனன் !

முத்தையன் : ஏன் ? என்னைத் தடுக்கிறாய் ! தங்கையின் மேலுள்ள பாசமா ?

வெள்ளையன் : இல்லை .... குடிக் கொருவன்தான் வஞ்சி நாட்டான் குடியழிக்கச் செல்லவேண்டும் என்பது அரசனின் ஆணை. அப்படியிருக்கப் போர்க்களம் செல்வது யார் ? அன்பு மிக்க அண்ணனா ? ஆசைக் கணவனா ? நான் செல்லுகிறேன். அண்ணனாகிய நான்தான் போர்க்களம் செல்லவேண்டும். ஏனென்று கேட்பாய் ? என்றால் வாழ வேண்டியவர்கள் யாரும் இந்த உலகில் இல்லை. மனைவி மக்கள் என்ற பாசம் எனக்கில்லை. வாழ்ந்தாலும் கெட்டாலும் என்னைப் பொறுத்தது என் வாழ்க்கை.

உனக்கோ முத்தம்மா இருக்கின்றாள், மனைவி என்ற பாசக் கயிற்றால் கட்டிப்பிடிக்க; திருமலை இருக்கின்றான் மகன் என்ற அன்புச் சங்கிலியால் அணைத்து இழுக்க. நானோ .... நாடோடியாக வாழலாம்; கேட்பதற்கு நாதியில்லை. படைக்கலம் மார்பிலே பட்டழியலாம் படுகளத்திலே; பார்த்து மனம் பதற ஆளில்லை.

நல்ல குடும்பம் மைத்துனனை நாடி நிற்கின்றது. இந்த நாடும் அவனைத் தேடி அழைக்கின்றது. நானோ ....! நாட்டிற்குத் தொண்டாற்றும் ஒரே கடமையுடையவன். இப்போது தெரிகிறதா ? தடுத்ததன் காரணம் ....

முத்தையன் : வழக்காடும் திறத்தால் சளைக்காது பேசுகின்றாய் ! நீ கூறும் வழக்கு ... நேர்மையற்றது ; நீதிக்குப் புறம்பானது.

(முத்தம்மாவைப் பார்த்து)

முத்தம்மா! நான் கூறுகின்றேன் கேள்! வாழ்விலே இன்ப துன்பம் இரண்டையும் கண்டவன் நான். இன்பங்களைத் துய்த்திருக்கின்றேன்; எதிர் கொண்டழைத்த துன்பங்களை வென்றிருக்கின்றேன். இனி நான் பெற வேண்டிய ஒரே ஒரு பேறு — வெஞ்சமரிலே சிறுத்தை எனச் சினந்து — வேங்கையெனச் சீறி — சிங்கமெனப் பகையைச் சீரழித்து — வெற்றி பெற்று வீறுடன் திரும்ப வேண்டும். விண்ணகம் எட்டவேண்டும் என் புகழ். இல்லை .... இல்லை — இந்த நாட்டின் புகழ். (திருமலையைக் காட்டி) களத்திலே விழுப்புண் பட்டிறந்தால் இதோ என் காளை என் பெயரெடுப்பான். நீ இருக்கின்றாய்! வெற்றிப் பாலூட்டி வீரமகனை வளர்க்க. முத்தம்மா! இப்போது சொல்! போருக்குப் புறப்படுவது யார்? வெள்ளையனா? முத்தையனா?

முத்தம்மா: நான் என்ன சொல்ல முடியும்? யார் சென்றாலும் எனக்கு மகிழ்ச்சிதான்.

திருமலை: மாமா! இந்த வழக்கிற்கு நான் முடிவு கூறுகிறேன்.

வெள்ளையன்: சிறுவன் நீ! உனக்கென்ன தெரியும்?

திருமலை: மாமா! நீங்கள் சொன்ன கதையையே மறந்து விட்டீர்கள்! பால்மணம் மாறாப் பருவத்திலே படையைப் புறங்காட்டி ஓட்டவில்லையா ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்? பைந்தமிழ்க் கொடியை இமயத்திலே பறக்கவிட வில்லையா கரிகாலன்? நீங்கள் தானே சொன்னீர்கள்! முதுமையாளர் இருவர் வழக்குரைக்க முன்வந்தனர்; கண்டனர் கரிகாலனை; இளைஞன் வழக்குரைக்க வல்லனோ என இகழ்ந்தனர். ஒற்றர் வாயிலாக அறிந்தான் வேந்தன். இளமையை எண்ணி நாணமுற்றான். முதுமைப் பருவத்துக் குரிய முகமூடியை அணிந்தான். வந்த முதியோர்க்கு நீதி வழங்கினான். மகிழ்ந்தனர்; முதியோர்: மனமாரப் பாராட்டினர் என்றீர்களே. ஆ! அப்படியிருக்க நானுரைப்பது எப்படித் தப்பிதமாகும்?

7

முத்தையன் : சரி; நீயே சொல்!

திருமலை : போட்டி போட்டுக் கொண்டிருக்கும் நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள்! நான் புறப்படுகின்றேன்.

(வெடுக்கென்று முத்தையனிடமிருந்த வேலினைப் பறிக்கின்றான்)

முத்தையன் : வேண்டாம்! நீ போகக்கூடாது.

திருமலை : அப்பா! இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் போருக்குப் புறப்படுவது எப்போது?

வெள்ளையன். ஆம்! பொழுதாகிறது மைத்துனரே! இரண்டி லொன்று இறுதியாகக் கூறும்! போருக்கு நான் போக வேண்டும் — இல்லையென்றால் திருமலையை அனுப்ப வேண்டும்; ஆனால் ...... உம்மை மட்டும் போக விட மாட்டேன்; என் தங்கை உயிரோடிருக்கும் வரை.

முத்தையன் : சித்திரவதை செய்கிறாய் உன் மைத்துனனை .... சரி உன் விருப்பம். (திருமலையிடமிருந்த வேலினை வாங்கி வெள்ளையனிடம் கொடுத்து) வெள்ளையா! வெற்றியுடன் திரும்பு! தீந்தமிழ் நாட்டான் தீரன்; அதிலும் வாகை நாட்டான் பகைவரை வராமல் விரட்டுவான் என்பதைக் காட்டு. புறப்படு போர்க்களத்திற்கு. பகைவர் தம் மார்பிலே குருதியாறு பொங்கி வழியட்டும் போ! வஞ்சியானை வென்று வாகை சூடி வா!

[நிழற்காட்சியில் போர் நடைபெறுகிறது; போர் ஆர வாரம்; புலியேறென வீரர்களின் முழக்கம். அழுகைக் குரல்; ஆரவாரக் குரல்.]

அருஞ்சொற்பொருள்

மறவர் - வீரர்; வடு - என்றும் மறையாத தழும்பு; ஏற்றிடும் - பெற்றிடும்; வெற்றிச்செல்வி - வெற்றித் திருமகள்; குறி - அடையாளம்; பாசம் - பற்று.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. முரசறைவோன் கூறுகின்ற மொழிகள் யாவை ?

2. போர்முனை செல்ல விரும்பும் முத்தையனின் வீரமொழிகள் யாவை ?

3. வெள்ளையனுக்கும் முத்தையனுக்கும் நடக்கும் உரையாடலால் நாம் உணர்வது என்னை ?

4. சிறுவர்களும் போருக்குச் சீறியெழலாம் என்பதற்குத் திருமலை காட்டும் சான்றுகள் யாவை ?

II. 1. மாணவர் இந்தப் பகுதியை நடித்துப் பழகவேண்டும்.

நாடகத்தால் நல்ல கருத்துக்களை ஊட்டமுடியும் என்பதை ஆசிரியர் மெய்ப்பித்து இருப்பதை விளக்கி வரைக.

III. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்துக :— போட்டியிட்டுக்கொண்டு, யாருக்கு அது வாய்க்கும், உயிர்க்கஞ்சாப் போர், மறவர், கசக்கிப் பிழிந்து, கும்மாளம் சொட்டிவரும்,

IV. 1. அவ்வளவு + பெரியது - அவ்வளவு பெரியது, இவ்வளவு + சிறியது — இவ்வளவு சிறியது, எவ்வளவு + சிறந்தது - எவ்வளவு சிறந்தது — இவ்வாறு அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு எனும் சொற்களின் முன் வல்லினம் மிகாது.

2. பல + பொருள்கள் - பலபொருள்கள், சில + குறைகள் - சில குறைகள், சிறு + பையன் - சிறுபையன் - இவ்வாறு பல, சில, சிறு எனும் சொற்களின் முன் வல்லினம் மிகாது.

9. தம்பிக்கு

டாக்டர் மு. வரதராசனார், M.A., M.O.L., L.T.

[இக்கட்டுரையாசிரியர், சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக விருப்பவர்: நவீனம், இலக்கியம், ஆராய்ச்சி முதலிய துறைகளில் நூல்கள் எழுதித் தமிழ் மக்கள் பயனடையுமாறு செய்பவர். இப்பகுதி அவர்தம் 'தம்பிக்கு' என்ற நூலிலிருந்து இங்கு எடுத்துத் தரப்படுகிறது.]

அன்புள்ள எழில்,

உன்னுடைய தமிழ்ப் பற்றையும் தமிழ்நாட்டுப் பற்றையும் போற்றுகிறேன்; வாழ்த்துகிறேன். ஆனால், இன்றைய கடிதத்தில் நீ எழுதியது போன்ற வீண் கனவு மட்டும் வேண்டாம். மேடைப் பேச்சு நம்முடைய உணர்ச்சி வெள்ளத்திற்குப் பெரிய வாய்க்-காலாக இருந்து ஆத்திரத்தைத் தணித்து வற்றச்செய்து நம்மைச் சோம்பேறிகளாக ஆக்குவதுபோல், இப்படிப்பட்ட வீண் கனவுகள் நம்மை வீணர்களாக ஆக்காமலிருக்க வேண்டும் என்ற எண்-ணத்தால் இதைக் குறிப்பிடுகின்றேன். வேறொன்றும் தவறாக எண்ணவேண்டாம்.

"நான் சர்வாதிகாரியாக ஏற்பட்டால், திருக்குறள் ஓதாத திருமணம் தமிழ் நாட்டில் செல்லுபடி ஆகாது என்றும், தேவாரம் திருவாசகம் பிரபந்தம் முதலான தமிழ் மறை ஓதாத கோவில்கள் தமிழ்நாட்டில் திறந்திருக்கக் கூடாது என்றும், தமிழில் உத்தரவு அனுப்பத் தெரியாத பட்டதாரிகள் தமிழ்நாட்டில் அதிகாரிகளாக இருக்கக் கூடாது என்றும், தமிழ்நாட்டுக் கவர்னரும் தமிழில் கையெழுத்து இடவேண்டும் என்றும் ஆணையிடுவேன்" என்ற வீரமான எழுத்துக்களை உன் கடிதத்தில் பார்த்ததும் நானும் சோர்வு நீங்கியவனாய்த் தலை நிமிர்ந்த தமிழனாய் எழுந்து உட்கார்ந்தேன். ஆனால், சிறிது நேரம் எண்ணிப் பார்த்த பிறகு தான், உனக்கு ஏன் இந்த வீண் கனவு என்ற எண்ணம் வந்தது. மறுபடியும் சொல்லுகிறேன். உன் மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் போற்றுகிறேன். ஆனால் உணர்ச்சி வெள்ளம் மட்டும் இருந்தால் போதாது. அது என்றைக்கேனும் ஒருநாள் வடிந்து

வற்றிவிடும். வற்ருத ஊற்று உன் உள்ளத்தில் இருக்கட்டும்; செயல் திறன் வளரட்டும்.

நான் எதை வீண் கனவு என்று குறிப்பிடுகிறேன், தெரியுமா? திருக்குறள் ஓதியே திருமணம் நிகழவேண்டும், தமிழ்நாட்டுக் கோவில்களில் உத்தமர்களின் தமிழ்ப் பாட்டு முழங்க வேண்டும், அதிகாரிகள் தமிழை மதிப்பவர்களாக இருக்க வேண்டும், கவர்னர் தமிழில் கையெழுத்து இடவேண்டும் என்னும் இவைகளை ஒரு காலும் வீண் கனவு என்று ஒதுக்கவே மாட்டேன். இது உனக்கே தெரியும். தமிழுக்கோ, தமிழ் நாட்டுக்கோ பகைவனுக இருப்பவன் தான், இந்த நல்லெண்ணங்களை வீண் கனவு என்று குறை கூறுவான். நம் தாயை நாம் வழிபட்டு, நம் குடும்பக் கடமையை நாம் ஆர்வத்தோடு செய்யும்போது, இதைத் தவறு என்றும் குறுகிய நோக்கம் என்றும் ஒருவன் குறுக்கிடுவானுனல், அவனைப் பகைவன் என்று ஒதுக்குவது கடமையாகும்.

"கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணுத செய்வான் பகை"

என்று நம் தலைவர் திருவள்ளுவர் ஆணையிட்டது இப்படிப்பட்ட பகைவர்களைக் கருதித்தான். அறத்துப்பால் மட்டும் எழுதினுல் தமிழர்கள் வாழத் தெரியாதவர்களாய்த் திகைத்துச் சீரழிவார்கள் என்று எண்ணித்தான், திருவள்ளுவர் பொருட்பாலையும் எழுதினுர். அறத்துப் பாலைவிட விரிவாக, இரண்டு மடங்கு உள்ளதாகப் பொருட்பாலை எழுதினுர். 'இன்னு செய்யாமை' என்று 'அஹிம்சை'யை அறத்துப் பாலில் வற்புறுத்தியவர், 'பகைமாட்சி' 'உட்பகை' என்ற பகுதிகளைப் பொருட்பாலில் விளக்கிய காரணம் அதுதான். உலகம் எப்படிப்பட்டது என்பது திருவள்ளுவர்க்கு நன்ருகத் தெரியும். அதனுல்தான் இவ்வளவு தெளிவாகப் பொருட்பாலை எழுத முடிந்தது.

தம்பி! நீ இன்னென்று கவனித்திருப்பாய். தமிழராகிய நம்மிடம் ஒரு பெருங்குறை இருந்து வருகிறது. அது வேருென்றும் அல்ல; பிறருடைய சொல்லால் மயங்கும் பேதைமை நமக்கு மிகுதியாக இருக்கிறது. மற்றவர்கள் இதைத் தெரிந்து கொண்டுதான், உயர்ந்த சொற்களைத் திரும்பத் திரும்பச்

சொல்லித் தமிழரை ஏமாற்ற முடிகிறது. மக்களுக்குள் எந்த வகையான வேறுபாடும் வேண்டாம். கடவுள் படைப்பில் எல்லோரும் சமம் என்ற உயர்ந்த பேச்சைத் தமிழரிடம் ஒருவர் பேசட்டும்; கேட்ட தமிழர் பற்றை உடனே வெறுப்பார்; துறப்பார்; எந்த வேறுபாடும் இல்லாத தூய வாழ்க்கையைத் தொடங்கி விடுவார். காரணம் என்ன தெரியுமா ? தமிழர் நெஞ்சம் உயர்ந்த கொள்கைகளை உணர்ந்து உணர்ந்து தலைமுறை தலைமுறையாகப் பண்பட்டு வந்தது. அதனால், சொல்லுகிறவர் யார்? உண்மையாக உணர்ந்து சொல்கிறாரா ? நம்மை ஏமாற்றச் சொல்கிறாரா ? அவர் எந்த வேறுபாடும் பார்க்காமல் வாழ்கிறாரா என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல், உடனே தாம் அந்தக் கொள்கையை நம்பி உணர்ந்து வாழத் தொடங்கி விடுவார். இது நல்லதுதான். சொல்லப்பட்ட உண்மையை எடுத்துக் கொள்வது எப்போதும் நல்லதுதான்.

ஆனால் சொன்னவர் யார் ? அவருடைய வாய்க்கும், வாழ்க்கைக்கும் ஏதாவது உறவு உண்டா ? என்பதையும் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இல்லையானால் ஏமாந்த வாழ்வு தான் வாழவேண்டும். இந்த ஏமாந்த தன்மையைப் பகைவர்கள் பயன்படுத்திக் கொண்டு, ஒன்றில் நன்மை செய்து மற்றொன்றில் நஞ்சு ஊட்டி விடுவார்கள். சாதி வேறுபாடு முதலியவை ஒழிய வேண்டியதுதான். ஆனாலும், நமக்கு அதை எடுத்துச் சொன்னவர் சாதிப் பித்தராக இருந்தால் அதையும் ஒருவாறு நினைவில் வைத்துக் கொண்டு, வாய்க்கும் வாழ்க்கைக்கும் உறவு வைக்காமல் பற்றின்றி வாழவல்லவர் அவர் என்பதைத் தெளிய வேண்டும். இந்தத் தெளிவு இருந்தால், அவரே மற்றொரு நாள் பொய் சொல்லி நம்மை ஏமாற்ற முடியாது. இன்றைக்குச் சாதி முதலான வேறுபாடு வேண்டாம் என்று உபதேசம் செய்தவர், மற்றொரு நாள் மெல்ல வந்து, " மொழி வேறுபாடு வேண்டாம்; தமிழ் என்றும், தமிழ்நாடு என்றும் பேசுகிற குறுகிய நோக்கம் வேண்டாம் " என்று உபதேசம் செய்வார். அதைக் கேட்ட பேதைத் தமிழர் சாதியைத் துறப்பது போலவே மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் துறந்து நிற்பார். உடனே அடுத்த மேடையில் ஏறி உன்னையும் என்னையுமே தூற்றத் தொடங்குவார்.

அந்த எழிலும், அவருடைய அண்ணனும் குறுகிய நோக்கம் உடையவர்கள் என்று நம்மைப் பற்றி எவ்வளவோ சொற்களைப் பொழிவார்; வீர முழக்கம் செய்வார்; உடனே அவருக்கு ஒரு படை திரளும். முதலில் உபதேசம் செய்தவர் இத்தனை மாறு தலையும் திண்ணைமேல் இருந்தபடியே காண்பார்; உள்ளத்திற்குள் எக்களிப்பார்; தம் எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்வார். "புறமுதுகு காட்டாத தமிழராம்; இதோ என் சொல்லால் அவர்களை வீழ்த்தி விட்டேன். எதனாலும் கலங்காத தமிழரை என் சொல்லால் மயக்கிவிட்டேன். ஒற்றுமையாக இருந்தவர்களைப் பிரித்துவிட்டேன். இனிமேல் வெற்றி எனக்குத்தான். இனித் தமிழர்களே தமிழர்களை அழித்துக் கொள்வார்கள். நமக்குக் கவலை இல்லை'' என்று அவர் தம் உபதேசத்தின் பயனைக் கண்டு களிப்பார்.

இப்படிப் பட்டவர்களால் தமிழர்கள் ஏமாந்து போகக்கூடாது. கொள்கை எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், சொல்கின்ற வர்கள் யார் என்ற ஆராய்ச்சியும் செய்ய வேண்டும். யாழின் கொம்பு வளைவானது; அம்பு நேரானது. ஆனால் யாழை வெறுத்து அம்பைப் போற்றுவது அறியாமை அல்லவா? திருவள்ளுவர் தான் இந்த உவமையைச் சொன்னவர். வாய்ச்சொல் நேர்மை யானதாக இருக்கலாம்; அதைக் கொண்டு ஒருவரை நம்பிவிடக் கூடாது; அவருடைய வாழ்க்கை எப்படிப் பட்டது என்பதை ஆராய்ந்த பிறகே நம்பவேண்டும். குறுகிய நோக்கம் வேண்டாம் என்று நமக்குச் சொல்கிறவர்கள் நம்மைவிடப் பரந்த நோக்கம் உடையவர்களா என்று பார்க்க வேண்டும். நாம் எவ்வளவோ பரந்த நோக்கமும் இரக்கமும் உடையவர்கள்; நம் பற்றெல்லாம் சில நல்ல நூல்களைப் பற்றிச் சில பெரியோர்களின் பாடல்களைப் பற்றி நம்மைப் பற்றி இருக்கும். அவர்களுடைய பற்று மிக மிகக் குறுகியது; தன்னலமான பல துறைகளில் அழுத்தமான பற்று அவர்களுக்கு இருப்பதை எண்ணினால் வியப்பாக இருக்கும்.

சாதி முதலான வேறுபாடுகள் உண்மையானவை அல்ல; பொய்யானவை; அவற்றை ஒழிப்பது கடமைதான். ஆனால் மொழி வேறுபாடும் நாட்டு வேறுபாடும் அப்படிப் பட்டவை அல்ல; பொய் அல்ல. மொழி உண்மையாக உள்ள ஒன்று; அது

கண்ணுக்கும் தெரியும், காதுக்கும் தெரியும், மூளைக்கும் தெரியும். மொழியால் இனம் அமைவதும், நாகரிகம் அமைவதும், நாடமைவதும், நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள். இவற்றை எல்லாம் பொய் என்றும் வேண்டாதவை என்றும் உபதேசம் செய்கிறவர்கள் நம்மைப்பற்றி நல்லெண்ணம் இல்லாதவர்கள். அவர்களுக்கு வேலை நம்மிடம் இல்லை. வல்லரசுகளிடம் சென்று அவர்கள் அந்த உபதேசம் செய்யட்டும். நாட்டுப் பற்றையும் இனப்பற்றையும் பொருட் பற்றையும் வல்லரசுகள் முதலில் கைவிட்டால், உலகம் ஒரு குடும்பமாக வாழும். குறுகிய நாட்டுப் பற்று அங்கே ஒழிந்தால், அடுத்த நொடியிலேயே தமிழன் தன் முதல் பாடத்தை, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பழைய பொதுப் பாடத்தை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டத் தயங்கமாட்டான். அதை விட்டு விட்டு, நம்மிடம் செய்யப்படும் போலி உபதேசம் ஏமாற்றும் நோக்கம் உடையதே ஆகும். பெருஞ் செல்வன் தன்னுடைய இரும்புப் பெட்டியை ஏழெட்டுச் சாவிகளால் பூட்டி, அந்த அறையையும் சில பூட்டுக்களால் பூட்டிவிட்டு, தன் மாளிகையின் முன்புறத்தில் அகலமான திண்ணைமேல் சாய்ந்து கொண்டு, எதிர் வீட்டு ஏழையைப் பார்த்து, "டே! என்னடா! எப்போது பார்த்தாலும் அந்தப் பொத்தல் கதவை மூடியே வைத்திருக்கிறாய்! எங்கள்மேல் உனக்கு நம்பிக்கையில்லையா?" என்று கேட்பது போல் இருக்கிறது இது. அந்த ஏழையும் அவருடைய பரந்த நோக்கப் பேச்சைக் கேட்டு மயங்கித் தன் குடிசைக்கு இருந்த அந்த ஒரே கதவையும் எடுத்து அப்பால் வைத்தான் என்றால், அவனைப் பேதை என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது? தமிழர்கள் அப்படிப்பட்ட பேதைகள் ஆகக் கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. உலகம் ஒரு குடும்பமாய் அன்பாக வாழக் கற்றுக்கொள்ளும் வரையில் தமிழனுக்குத் தற்காப்பு உணர்ச்சி கட்டாயம் வேண்டும்.

அதற்கு வழி இதுதான்: தமிழர்களைச் சிறிது நேரம் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்துப் பிறகு வறண்ட பாலையில் திகைக்க விடும் போக்கை விட்டு, அவர்களைக் கடமைப் பற்று உடைய செயல் வீரர்களாக ஆக்க வேண்டும். உன்னுடைய

எழுத்தில் அந்த உணர்ச்சி வெள்ளத்தைக் கண்டதால் தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். நீ சர்வாதிகாரியாக ஆவது பற்றி எனக்குத் தடையில்லை. ஆனால் அந்தப் போதையில் மயங்கி அன்றாடக் கடமையை மறந்துவிடாதே; மற்றவர்களையும் மறக்க விடாதே.

நீ சர்வாதிகாரியாக ஆவதையே வீண் கனவு என்று குறிப்பிட்டேன். தமிழரின் திருமணங்களில் திருக்குறள் ஓதுவது கனவு அல்ல; தமிழரின் கடமை. கோவில்களில் தேவாரம் முதலியன முழங்குவது கனவு அல்ல; அந்தக் கோவில்களைத் தமிழால் பாடி அவற்றின் பெருமையைக் காத்த சான்றோர்களுக்கு நன்றி யுணர்வோடு ஆற்ற வேண்டிய கடமை அது. அதிகாரிகள் தமிழில் எழுத வேண்டியதும் கனவு அல்ல; காந்தியடிகளின் கருத்துப்படி மொழிவாரி மாகாணம் கட்டாயமாக ஏற்படும்போது கவர்னர் தமிழில் கையெழுத்து இடுவதும் கனவு அல்ல. வங்காளத்திற்குத் தொண்டு செய்யச் சென்ற முதுமையில், எழுபத்தெட்டாம் வயதில், அந்த நாட்டு மொழியில் கையெழுத்து இடவேண்டும் என்று வங்காளி எழுத்தைக் கற்றுக்கொண்ட காந்தியடிகளின் பெருந்தன்மையான நெறி அது.

ஆகவே, இன்று தமிழர்க்கு வேண்டியது அன்றாடக் கடமையைப் பற்றிய ஆராய்ச்சியே; மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் செயலில் காட்டும் முறையே. நான் இப்படியானால் அப்படிச் செய்வேன், அப்படியானால் இப்படிச் செய்வேன் என்று 'ஆனால்' போட்டுப் பேசுவது இப்போது வேண்டாம். அது வெறும் போதை; உண்மை நெறி அல்ல; எண்ணிப் பார்; விளங்கும்.

உன் அன்புள்ள,

வளவன்.

அருஞ்சொற்பொருள்

மன்ற - நிச்சயமாக; தணித்து - குறைத்து; வற்றாத - குறையாத. பேதைமை - அறியாமை; எக்களிப்பார் - மகிழ்ச்சியடைவார்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. மேடைப் பேச்சுத் தேவையா? இதுபற்றி ஆசிரியர் கருத்து யாது?
2. எழிலின் கனவாக ஆசிரியர் எவற்றைக் கற்பிக்கின்றார்?
3. ஆசிரியர் எதனை வீண் கனவு என்று குறிப்பிடுகின்றார்?
4. திருவள்ளுவர் பொருட்பால் எழுதிய நோக்கம் யாது?
5. தமிழன் தாழ்நிலைக்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் யாவை?
6. தமிழன் வாழ்க்கை எவற்றால் செம்மையுறும்?

II. 1. கடிதம் எழுதுகையில், தாளின் தலைப்பில், வலப் பக்கத்தில் கடிதம் எழுதுபவரின் முகவரியும் எழுதுகின்ற நாட்குறிப்பும் இருத்தல் வேண்டும். பின்னர், எழுதப்படுபவரின் தகுதிக்கேற்ப அன்பும் பெருந்தகைமையும் பண்பும் கூடிய சொற்களைக்கொண்ட விளித்தொடர் அமைத்தல் வேண்டும். பிறகு எழுதப்போகும் செய்தியைத் தெளிவாக எழுதவேண்டும். இறுதியில், விளித் தொடரில் அமைத்த பண்புச் சொற்கள் அமைத்துக் கையொப்பத்துடன் முடிக்க வேண்டும். தாளின் அடியில் இடப்புறத்தில் எழுதப்படுபவரின் முகவரி இருத்தல் வேண்டும்.

இதனை மனத்திற் கொண்டு, வளவனின் கருத்தைச் சுருக்கி உன் தோழனுக்கு ஒரு கடிதம் எழுது.

III. 1. அவனா + போனான் - அவனா போனான்; அதுவோ + சிதறியது- அதுவோ சிதறியது; நானே + செய்தேன் - நானே செய்தேன்— இவ்வாறு ஆ, ஓ, ஏ என்னும் இடைச் சொற்களின் முன் வல்லினம் மிகாது.

2. புலி + பாய்ந்தது - புலி பாய்ந்தது என எழுவாய்த் தொடரிலும்; தம்பி + செய்யாதே - தம்பி செய்யாதே என விளித் தொடரிலும் வல்லினம் மிகாது.

10. நிலாப் பாடம்

(கரந்தைக் கவியரசு - அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்)

[திருவையாற்றுத் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் கரந்தைப் புலவர் கல்லூரியில் தலைவராகவும் பணியாற்றியவர்; நூலாசிரியர்; உரை யாசிரியர்.]

ஆசிரியர் சோமசுந்தரம் பிள்ளையும் அவர்தம் அருமை மாணவர்களும் தாயும் சேய்களும் போல விண்ணாற்றங்கரையில் மணல்மீது நெருங்கி உட்கார்ந்திருக்கும் அழகினையும், அம் மாணவர்கள் அவர்தம் அருமை முகத்தினைத் தேவர்களைப் போல் இமையாது பார்த்துக் கொண்டிருக்கும் எழிலினையும் ஒரு முறை யாவது பார்த்து மகிழாதவர்கள் அடுத்த சித்திரை நிலாவிலாவது பார்த்து மகிழ்தல் வேண்டும். முற்காலத்தில் நளன் தன் மனைவி மக்களோடு, நற்காலம் பெற்று மீண்டும் தன் நகரத்திற்கு வந்த போது அந்த நகரத்து மக்கள் 'மேகத்தைக் காணாதிருந்து கண்ட மயிலெனவும், கண்ணைப் பெறாதிருந்து பெற்ற முகமெனவும், நீரைப் பெறாது வாடியிருந்து பெற்ற பயிரெனவும் மிகமிக மகிழ்ந்தார்கள்' என்ற பொருளில் புகழேந்திப் புலவர் பெருமான்,

"கார்பெற்ற தோகையோ! கண்பெற்ற வாண்முகமோ!
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ! — பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகர்க்(கு)
ஏதோ வுரைப்பன் எதிர்"

என்று பாடியுள்ளார் அல்லவா? சுந்தரம் பிள்ளையின் இனிய முகத்தை அவர் மாணவர் பார்த்திருக்கும் இக்காட்சிக்கும், அப் புலவரது அழகிய அடிகளையே வைத்துக்கொண்டு,

"கார்பெற்ற தோகையோ! கண்பெற்ற வாண்முகமோ!
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ!—ஏர்பெற்ற
சுந்தரனார் அன்பொழுகும் தூமுகத்தை, அன்னவர்தம்
மைந்தரனார் பெற்றிருக்கும் மாண்பு"

என்று பாடி முடிப்பது பொருந்துவதேயாகும்; பொய்ப் புகழ்ச்சி யாகாது.

நிலாப் பாடம் தொடங்கி ஒரு வாரம் ஆகிய பின் முழுமதி நாள் வந்தது. ஆசிரியர் தம் மாணவர்களைப் பார்த்து, "என் அருமைச் சிறுவர்களே,! இன்றைய மதியைப் பாருங்கள் !" என்று தொடங்கி ஏதோ சொல்லப் போகுமுன், ஒரு மாணவன் தன் மகிழ்ச்சியை அடக்க முடியாமல் ' ஐயா! இன்று நிலா மிக அழகாக இருக்கிறது " என்றான். ஆசிரியர் தலையை அசைத்துக் கொண்டு, " ஆம் ! சோமு ! நான் சொல்ல நினைத்ததும் அதுவே " என்று கூறி, " எங்கே பார்ப்போம்! இந்த இனிமையை எடுத்துக்காட்டும் ஒரு பாட்டினை யாரேனும் கூறுங்கள் " என்ன, மாணவர்கள் சற்று நேரம் எண்ணிப் பார்த்தார்கள். கண்ணப்பன் துள்ளியெழுந்து மண்டி போட்டுக் கொண்டு, " ஐயா ! எனக்குத் தெரிந்துவிட்டது! எனக்குத் தெரிந்துவிட்டது ! ' அங்கண் விசும்பின் அகனிலாக் காண்பினிதே " என்று கூறினான். ஆசிரியர் " கெட்டிக்காரன் " என்றுகூறி " அப்பாட்டின் அழகினைப் பாருங்கள் ! திங்கள் பொதுவாக மகிழ்ச்சியைத் தருவதாக இருந்தாலும், இன்றுபோல முழுத் திங்கள் தரும் மகிழ்ச்சிதான் மிகப் பெரிது என்பதை இனியவை நாற்பது பாடிய பூதஞ் சேந்தனார் என்னும் புலவர் ' அகல் நிலாக் காண்பு இனிது ' என்று எடுத்துக் காட்டியுள்ளார். இதுபோலவே, அவ்வடியிலுள்ள மற்றொரு சிறப்பினை உற்று நோக்கிக் கூறுங்கள் " என்றார். சற்று நேரம் எண்ணிய பின், மாணிக்கம், ஆசிரியர் முகத்தினைப் பார்க்க, ஆசிரியர் " சொல் பார்ப்போம்" என்றனர். " அகல் நிலா மிகுந்த மகிழ்ச்சி தருவதாக இருந்தாலும், வானம் மப்பு மாசின்றி இருத்தல் வேண்டும். அப்போதுதான் மிகமிக இனிமையாக இருக்கும். இதனாலேதான் அங்கண் விசும்பின் அகனிலா " என்று கூறியிருக்கிறார் என்றான். மாணவர்கள் எல்லாரும் மாணிக்கத்தின் உரையைக் கேட்டு வியந்தார்கள். ஆசிரியர் மகிழ்ந்தார்.

பின்னர் ஆசிரியர், " நல்லது, மாணவர்களே ! இன்று முழு மதியானதால், முழுமதியைப் பற்றிய சிலவற்றை முதலில் தெரிந்து கொள்வோம். மற்றைய நிலா நாட்களிலில்லாமல், இன்றைக்கு மட்டும் நடக்கக் கூடிய செயல்களைச் சொல்லுங்கள் பார்ப்போம் " என்றார். முருகையன், " ஐயா ! நான் சொல்லுகிறேன். இன்றைக்குத்தான் கிரகணம் உண்டாகும் " என்றான். ஆசிரியர்.

"ஆம்; இன்னொன்று உண்டு. அதுவோ இன்றைக்குத்தான் கடல் மிகுதியாகப் பொங்குவது. அது இருக்கட்டும். முதலில் கிரகணம் என்பது யாது? அது எப்படி உண்டாகிறது? என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். கிரகணம் என்ற வட மொழிக்குப் பற்றுதல், அதாவது பிடித்தல் என்பது பொருள். இராகு என்ற பெயருடையதொரு பாம்பும், கேது என்ற பெயருடையதொரு பாம்பும் ஞாயிற்றினையும், திங்களையும் பிடித்துக் கொள்ளும். பிறகு விட்டு விடும் என்பது நமது முன்னோர் கொள்கை. ஆனால் உண்மையில் அத்தகைய பாம்புகளும் இல்லை; அவை பிடிப்பதும் இல்லை. பூமி சூரியனைச் சுற்றுவதும், புவியை மதியம் சுற்றுவதும் நீங்கள் படித்திருப்பீர்களே! இவ்வாறு சுற்றிக் கொண்டு வரும்போது, ஏதோ ஒரு காலம் சூரியனுக்கும், அதன் ஒளியை முழுவதும் பெற்றுப் பூமிக்குத் திருப்பித் தந்து கொண்டிருக்கும் முழுமதிக்கும் நடுவில், பூமியின் ஒரு கோடி வருவதுண்டு. இப்படி வரும்போது பூமி மறைப்பதால் சூரியன் ஒளியை இழக்கும் மதியின் பகுதியையே 'சந்திர கிரகணம்' என்பார்கள். இப்படியே தான் 'சூரிய கிரகணமும்' உண்டாகும். சூரியனுக்கும் அதன் ஒளியைப் பெற்றுக்கொண்டிருக்கும் பூமிக்கும் நடுவில், பூமியைச் சுற்றிவரும் சந்திரன் எப்போதாவது வந்துவிடும். அப்போது சந்திரனால் மறைக்கப்படும் சூரியனின் பகுதிக்குத்தான் சூரிய கிரகணம் என்பது பெயர்" என்று கூறி அதனை நன்கு விளங்கச் செய்ய ஒரு மாணவனை நிறுத்தி இருவர்களைப் பூமி போலவும், சந்திரன் போலவும் சுற்றிவரச் செய்து விளக்கிக் காட்டினார். பிறகு அவர், இவ்வுண்மையை நம் முன்னோர்கள் முற்றும் உணரவில்லை யென்று திட்டமாகச் சொல்லுதல் இயலாது. அவர்கள் இராகு வினையும் கேதுவினையும் 'சாயா கிரகங்கள்' என்று கூறி யிருக்கின்றார்கள். 'சாயா கிரகங்கள்' என்றால் நிழலாகிய கிரகங்கள் என்பதுதான் பொருள். இத்தகைய நிழல்களையே இராகு கேது என்று பெயர் வைத்து இரு கிரகங்களாகக் கொண் டிருக்கிறார்கள் என்றும் எண்ணக் கூடும். இது எப்படி யாவது இருக்கட்டும். இனி நமது அருமைத் தமிழ் நூல்களில் இந்தப் பாம்புகோள் (கிரகணம்) பற்றி ஏதேனும் நீதி கூறிய பாட்டு உளதாயின் எடுத்துக் காட்டுங்கள்" என்றார். வழக்கம் போற் சற்று எண்ணிப் பின், கண்ணப்பனே,

" ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார் "

என்னும் நாலடியாரின் பாட்டினைக் கூறினன். ஆசிரியர், " நம் கண்ணப்பனுக்கு நினைவாற்றல் நன்றாக இருக்கிறது " என்று கூறி, "இந்தப் பாட்டில் திங்களின் எந்தச் செயல் பாராட்டப் படுகிறது ? மணிவண்ணா ! நீ சொல் " என்ன, அவன், " திங்கள் தனக்கு ஒரு தீங்கு வந்திருந்தாலும் அதனைப் பாராட்டாமல் பிறருக்குச் செய்யும் நன்மையைச் செய்து கொண்டிருக்கும் " என்றனன்.

ஆசிரியர், " நல்லது ! இந்தப் பாட்டின் பின் இரண்டடியின் பொருள் என்ன என்று பார்ப்போம். சோமு, நீ சொல் ; பின் அடிகள் யாருடைய செயலை எடுத்துக் காட்டுகின்றன ?" என்ன, சோமு, " உயர்ந்த குடிப்பிறந்தார் செயலைக் காட்டுகின்றன " என்றான். ஆசிரியர், " ஆம், உயர்ந்த குடிப்பிறந்தாரின் சிறந்த ஒன்றைத்தான்; அது யாது ? மணிவண்ணா! நீ கூறு " என்ன, மணிவண்ணன், " ஒப்புரவு செய்தல் " என்றான். " ஆம் அதன் பொருள் என்ன ?" என்று ஆசிரியர் மீண்டும் கேட்க, " அதாவது உலக நடையை ஒட்டிய தன் கடமையைச் செய்தல்" என்றான். ஆசிரியர், "நன்று ; குடிப் பிறந்தார்க்கும் மற்றவர்க்குமுள்ள வேறு பாடு ஒன்று இதில் குறிக்கப் பெற்றுள்ளது. அதனை மாணிக்கம், "நீ கூற முடியுமா ?" என்ன, மாணிக்கம் எண்ணிப் பார்த்து, " தெரியவில்லை, ஐயா !" என்றனன். " நல்லது, நான் கூறு கின்றேன். வேறு ஒன்றுமில்லை. குடிப்பிறந்தார் போல மற்றவர் களும் தங்கள் கடமைகளை ஏதோ ஒருவாறு செய்து வருவதும் உண்டு. ஆனால், பொருள் வளங் குறைந்தால் மற்றவர் தங்கள் கடமைகளைக் கைநழுவ விட்டுவிடுவார்கள். குடிப்பிறந்தாரோ, வருந்தி நிற்கும் வறுமை நிலையிலும் தங்கள் கடமைகளை எவ்வாறா யினும் செய்துதான் வருவார்கள் என்பதுதான்.

" இந்தப் பகுதியின் பொருளாவது:—செல்லாமை - வறுமை; செவ்வன் நேர் நிற்பினும் - நன்றாக நிலைபெற்று நின்றாலும்,

ஒப்புரவிற்கு - உலக நடையறிந்து செய்யுங் கடமைகளுக்கு, குடிப் பிறந்தார் - உயர்ந்த குடிப் பிறந்தவர்கள், ஒல்கார் - பின்வாங்கார் என்பதாகும்" என்று கூறி வந்தவர், "நல்லது, மாணவர்களே ! மதியம் எப்போதோ வரும் இந்தப் பாம்பு கோளின் காலத்தில் தன் வருத்தம் பாராட்டாமல் உலகிற்கு நன்மை செய்தல் புதிதன்று. அக்குணம் அதற்கு என்றும் இயற்கையாக வுள்ளது. தன்னிடத்தில் எப்போதும் இருக்கும் களங்கமாகிய கறையினையும் போக்கிக்கொள்ள முயலாமல் உலகத்து இருளைப் போக்கிக் கொண்டிருக்கும் என்று ஒரு பாட்டிற் படித்திருக்கின்றீர்கள் அல்லவா ? அந்தப் பாட்டை நடராசன், நீ கூறு" என்றார். உடனே நடராசன்,

"தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று"

என்ற நன்னெறிப் பாட்டினைக் கூறினான். ஆசிரியர், "நல்லது, இந்தப் பாட்டும் முன்பாட்டைப் போன்ற ஒரு நீதியைக் காட்டுவதேயாகும். இப்பாட்டின் பின்னடிகளின் பொருள் எளிதாகத் தெரிகின்றதல்லவா? விழுமியோர்-மேலோர், தங்குறை-தமது துன்பங்களை, தீர்வு உள்ளார் - நீக்கிக் கொள்ளுதலை நினையாராய், பிறர்க்குஉறூஉம்-மற்றவர்களுக்குவரும், வெங்குறை-கொடிய துன்பங்களை, தீர்க்கிற்பார் - நீக்கிவிடுவார்கள் என்பது முற்பகுதியின் பொருள்" என்று கூறிமுடித்தார்.

அதன்மேல், மாணிக்கம், "ஐயா ! கறையொன்று பாட்டில் வந்திருக்கிறதே; அதை 'ஔவை' யென்று சொல்லுகிறார்களே; அதன் உண்மை என்ன ?" என்று கேட்டான். ஆசிரியர், "நல்ல கேள்வி. இந்தக் களங்கத்தினைக் கறையென்றும், ஔவை யென்றும், மான் என்றும், முயல் என்றும் நம்மவர் கூறி வருகின்றார்கள். பாட்டிகள் கதை சொல்லும் போது, "பண்டைக் காலத்தே வானம் தலையில் இடிக்கக்கூடிய அவ்வளவு அண்மையில் இருந்தது. கூட்டிக் கொண்டிருந்த ஒரு கிழவி நிமிர்ந்த போது அவ்வானத்தில் இடிபட்டதனால் வருத்தமுற்று,

அவ்வானைத் தன் விளக்குமாற்றினால் அடித்து, 'எட்டு வண்டி நூலுக்கும் எட்டாமற் போ! பத்துவண்டி நூலுக்கும் பத்தாமற் போ!' என்று வைதாள். உடனே அவ்வானம் அவளையும் தூக்கிக் கொண்டு போய்விட்டது. அவளே அம்புலியில் காந்தியடிகளைப் போல நூல் நூற்றுக்கொண்டிருக்கிறாள்'' என்று கூறக் கேள்விப் பட்டு இருப்பீர்கள். அம்மாதிரியான பாட்டிக்கதைகளும், அவற்றில் நம்பிக்கையும் நம் நாட்டில் மட்டும் உள்ளன வென நீங்கள் நினைக்க வேண்டாம். ஆராய்ச்சிமிக்க ஐரோப்பாக் கண்டத்தில் தான் இவை அதிகம்.

"இந்தக் களங்கத்தைப்பற்றி அங்கே வழங்கும் பாட்டிக்கதை யொன்றுண்டு. அது, 'பண்டைக் காலத்தில் ஒருவரும் ஒரு வேலையும் செய்யாமல் ஓய்வுற்றிருக்கத்தக்க ஞாயிற்றுக்கிழமையில் ஒரு விறகு வெட்டியானவன் மற்றை நாட்களைப் போலவே விறகு வெட்டிக் கட்டி முதுகில் சுமந்துகொண்டு வந்தான். ஒரு தெய்வம் அவன் முன் தோன்றி, "இன்று ஞாயிறு அன்றோ! நீ இப்படி வேலை செய்தல் தகுமா?''என்று கேட்க, அவ்விறகு வெட்டி,''இந்த உலகில் ஞாயிறானாலும், (சந்திரனைக்காட்டி) அந்த உலகில் திங்களானாலும் எனக்கென்ன''என்று கூற, அது கேட்டு முனிந்த அத் தேவன் அவனைத் திங்களுலகிற்கு அனுப்பிவிட்டான். அது முதல் அவ்விறகு வெட்டி தன் விறகுக் கட்டை முதுகில் ஏந்திக்கொண்டு அங்கிருக்கிறான்' என்பதாகும்.

இப்படியே முயல், மான் முதலியவைகட்கும் கதைகள் கூறப் படலாம். இவ்வாறு உலக வழக்கில் மட்டு மன்று; நூல் வழக்கிலும் இந்தக் களங்கத்தினை முயல், மான் என்றெல்லாம் பெயர் வைத்து நீதி கூறிய பாட்டுக்களை நீங்கள் படித்திருக்கலாமே! 'உடற்கு வரும்' என்று தொடங்கும் நன்னெறிப் பாட்டினைக் கூறுங்கள்'' என்ன, முருகன் முந்தி,

"உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கு மொருகோ டியாக - நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பணிமொழியாய்! அஞ்சுமோ
மண்ணிற் புலியை மதிமான்''

என்று கூறினான்.

ஆசிரியர், இதில் மதியிலுள்ள மான் உலகத்துப் புலியை அஞ்சாது என்று கூறியிருப்பதைப் பார்த்தீர்களா? திங்களை அடைந்ததனுல் மான் எப்படி உலகத்துப் புலியை அஞ்சாதோ அதுபோலத் தங்கள் நெஞ்சினை, உயர்ந்த பரம்பொருளாகிய கடவுளிடத்தே சேர்த்தவர்கள் - அதாவது, எப்பொழுதும் கடவுளையே நினைத்திருப்பவர்கள் - தங்கள் உடம்பிற்கு வரும் துன்பங்கள் கோடிக்கணக்காக ஆனுலும் அவற்றிற்கு அஞ்ச மாட்டார்கள் .என்ற கருத்தைச் சிவப்பிரகாச அடிகள் இந்த நன்னெறிப் பாட்டில், ' ஓங்கு பரத்து உற்ருேர், உடற்கு வரும் இடர் அடுக்கும் ஒரு கோடியாக நடுக்கமுருர்' என்று எவ்வளவு அழகாக அமைத்திருக்கிருர் பார்த்தீர்களா? இவ்வாறே இக் களங்கத்தை முயலென்று வைத்துக்கூறும் நாலடியாரின் பாட்டொன்று உண்டு. அதுதான் ' ஒண் கதிர் வாண்மதியம் ' என்று தொடங்கும் பாட்டு. அதனை யாரேனும் கூறமுடியுமா? என்று கேட்டார். கண்ணப்பன்,

" ஒண்கதிர் வாண்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படும்
குன்றிய சீர்மைய ராயினும் சீர்பெறுவர்
குன்றன்னுர் கேண்மை கொளின் "

என்ருன்.

ஆசிரியர், " ஆம், ஆம், முருகையா! முதலிரண்டடியின் கருத்தினைக்கூறு " என்ன, " திங்களைச் சேர்ந்திருந்தால் முயலும் தொழப்படும் " என்ருன்.

ஆசிரியர், " நல்லது, மணிவண்ணு! பின்னிரண்டடியின் கருத்தினை நீ கூறு " என்ன அவன், "பெருமையிற் குறைந்தவர் களும் ஒரு குன்றைப் போன்று நிறைந்த பெருமையுடையவர்களைச் சேர்ந்தால் தாங்களும் பெருமையுறுவார்கள் என்பதாகும்"என்ருன். ஆசிரியர், " நன்று கூறினுய் " என்ருர்.

பின்னர் ஆசிரியர், " இம்மறுவை உவமையாகக் கொண்டு எழுந்த இன்னும் ஒரு நீதிப்பாட்டு நினைவில் வருகின்றது. அது நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவனுர் கூறிய திருக்குறளாகும். அதன் கருத்து, " உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்து உளதாகும்

குற்றம் சிறியதாயினும், அது மதியினிடத்துக் காணும் மறுப்போலப் பெரிதாக யாவர்க்கும் காணப்படும் என்பதாகும். அக்குறள்,

" குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து "

என்பதாகும். ஆகவே உயர்ந்த குடியிற் பிறந்தோர் — சான்றோர் தங்கள் ஒழுக்கத்திலாகட்டும், சொல்லிலாகட்டும், சிறிதுங் குறை யில்லாதவாறு மிகுந்த கருத்துடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். சான்றோரைத் திங்களோடு ஒப்பிட்டுக் கூறும் பாட்டுக்கள் பல.

' ஒரு பாட்டுமட்டும் திங்களைவிடச் சான்றோர் சிறந்தவர் என்று கூறுகின்றது. அது கூறுங்காரணம் மதிக்குக் களங்கம் உண்டு ; ஆனால் சான்றோருக்கோ களங்கம் சிறிதும் இராது என்பதாகும். நான் கூறிய அளவில், அப்பாட்டு இன்னதென்று உங்கட்கு விளங்கியிருக்கலாம். அதுவே, ' அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும் ' என்று தொடங்கும் நாலடிப் பாட்டு " என்ன, நடராசன்,

" அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்
மறுவாற்றும் சான்றோ ர஺தாற்றார், தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின் "

என்று கூறி முடித்தான்.

பின்னர் ஆசிரியர், ' களங்கம் உண்மையில் ஔவையும் அன்று, விறகு வெட்டியும் அன்று, முயலுமன்று, சூரியன் ஒளி மதியில் பாயும்போது மதி உலகில் உள்ள சில இடங்களில் படுவ தில்லை. ஆழ்ந்த பள்ளத்தாக்குகள், எரிமலைத் திறப்புகள், மலையின் சரிவுகள் முதலிய இடங்கள் இவ்வாறு சூரியவொளி படாமல் இருண்டிருக்கின்றன. இந்த இருட்டே நமக்கு மறுவாகக் காணப் படுகின்றது என்று விளக்கினார். அதன் பின்னர், அவர், "கடல் மிகுந்து பொங்குவது என்று முதலிற் கூறினோமல்லவா? அதை இப்போது எடுத்துக்கொள்வோம். கடல் பொங்குவது பற்றி சிறந்த நீதி அமைத்துப் பாடிய நன்னெறிப் பாட்டினை, கல்யாண

சுந்தரம், நீ கூறு !'' என்ன, கல்யாண சுந்தரம் சிறிது நேரத்திற்குள்,

“ இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய், பொங்காது அழல்கதிரால்; தண்ணென்
கதிர்வரவாற் பொங்கும் கடல் ''

என்று கூறினன்.

“ மாணவர்களே ! இன்சொலின் இனிமை இந்தப் பாட்டில் எவ்வளவு இனிமையாகக் கூறப்பட்டிருக்கிறது பாருங்கள் ! உலகம் இனிய சொல்லுக்கு வசப்பட்டு நடத்தலும், வன் சொல்லுக்கு வசப்படாமையும், கடலானது மிகச் சுடும் சூரிய வெப்பத்திற்குப்பொங்காது மதியின் குளிர்ச்சிக்குப் பொங்கும் உவமையால் எடுத்துக் காட்டிய திறமை எந்த மொழியிலுள்ள எந்தப் புலவருக்கும் எய்திலது. நல்லது. கடல் பொங்குவதன் உண்மை என்ன?'' என்று கேட்க, மாணவர்கள்,“ஆம் ஐயா, அதனைக் கூறுங்கள்''என்ரூர்கள்.ஆசிரியர், “மாணவர்களே! இவ்வுலகிற்கும் மதிக்கும் மற்றக் கோள்கள், மீன் ஆகிய எல்லாவற்றிற்கும் ஒன்றை ஒன்று பற்றி இழுத்தல் எள்கிற ஓர் ஆற்றல் இருக்கிறது. இந்த ஆற்றல் சேய்மை அண்மைகளுக்கு ஒத்தபடி, ஒருகாலத்தில் அதிகப்படும் ; ஒரு காலத்தில் குறையும். மதியானது பூமிக்கு அண்மையில் வருங் காலை பூமியை வேகமாக இழுக்கின்றது. பூமி, நீர்ப் பாகமும் நிலப்பாகமும் என இருவகைப்படும் அல்லவா ? நிலப்பாகத்தை விட நீர்ப்பாகம் எளிதில் இழுக்கப்படாமல் நீர் நிலத்தை விட மேலே எழும்பி விடுகின்றது '' என்ரூர். கண்ணப்பன், “ அப்படியானல் இந்த உலகைச்சுற்றிவருவதால், அது நெருங்க வருகிற இடங்களிலெல்லாம் கடலும் பொங்கிக் கொண்டே போகுமோ ?'' என்ன, ஆசிரியர் கண்ணப்பன் நுண்ணறிவை மெச்சி, “ஆம் அப்படியே தான் '' என்று கூறி, மணலில் கோடிட்டு விளக்கிக் காட்டினர். இதனேடு அன்றைப் பாடத்தை முடித்துக் கடவுள் வாழ்த்தும், தமிழ்த் தெய்வ வாழ்த்தும் கூறி வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

அருஞ்சொற்பொருள்

அணுகி - நெருங்கி; மதி - திங்கள்; கார் - மேகம்; விசும்பு - வான்; புடை - பக்கம்; ஒப்புரவு - உலகியலறிந்து உதவுதல்; கேண்மை - நட்பு,

உறவு; மனு - குற்றம்; அழல்கதிர் - கதிரவனது கொடுங்கதிர்; ஒல்கார் - மனந்தளரார்; ஞாலம் - உலகம்; தோகை - தோகையை உடைய மயில்.

பயிற்சி

I. விடை எழுதுக :—

1. நளனைக் கண்ட மக்கள் அடைந்த மகிழ்ச்சியைப் புகழேந்தியார் எவ்வாறு கூறியுள்ளார்?
2. புகழேந்தியார் பாடல் சுந்தரனார்க்கு எவ்வாறு பொருந்துவதாகக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்?
3. சுந்தரம் பிள்ளை தமது மாணவர்களுக்கு நிலாப் பாடம் கற்பித்தமையை விளக்கி எழுதுக.
4. சூரிய கிரகணம், சந்திர கிரகணம் - இவற்றின் உண்மை யாது? ஆசிரியர் சுந்தரம் பிள்ளை எவ்வாறு விளக்குகின்றார்?
5. திங்களின் செயல் யாது? இவற்றால் விளக்கப்படுவது யாது?
6. நன்னெறிப்பாடலில் திங்களின் செயல் கூறப்பட்டிருப்பதை ஆசிரியர் சுந்தரனார் எவ்வாறு விளக்கினார்?
7. திங்களின் வரவினால் கடல் ஏன் பொங்குகிறது? இதனால் நமக்குணர்த்தப்படும் நீதி யாது?

II. 1. தமிழ்ப் புலவர்கள் திங்களை இன்னும் எவ்வகையிலெல்லாம் இலக்கியங்களில் பயன்படுத்தியுள்ளனர் என்பதைத் தெரிந்தவரையில் ஒரு கட்டுரையாக வரைக.

2. இயற்கையை அணுகி நோட்டமிடும் திறன் நம் புலவர் பெருமக்களிடம் அமைந்திருந்தது என்பதை இப்பாடத்தைக் கொண்டு விளக்கி வரைக.

III. 1. வந்த + பெண் - வந்த பெண்; வராத + கழுதை - வராத கழுதை; நல்ல + பிள்ளை - நல்ல பிள்ளை என (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர) மற்ற எல்லாப் பெயரெச்சங்களிலும் வல்லினம் மிகாது.

2. திருநிறை + செல்வன் - திருநிறை செல்வன் - என வினைத் தொகையிலும், தாய் + தந்தை - தாய் தந்தை என உம்மைத் தொகையிலும், எல்லாவகை வினை முற்றுக்களின் முன்னும் வல்லினம் மிகாது.

3. சென்று + கண்டான் - சென்று கண்டான், மாடு + சிறியது - மாடு சிறியது, வயிறு + பெரியது - வயிறு பெரியது, செய்து + தீர்த்தான் - செய்து தீர்த்தான், அஃது + யார் அஃதுயார் - என வன் தொடர்க் குற்றியலுகரம் தவிர, மற்ற எல்லாக் குற்றியலுகரத் தொடர்களிலும் (மென் தொடரில் அல்வழி தவிர) வல்லினம் மிகாது.

4. இரண்டு + குதிரை - இரண்டு குதிரை என எண்ணுப் பெயர்களின் முன்னும் வல்லினம் மிகாது.